
# புலமை புதல்வி

சமூக நாவல்



ஹிதாயத்துல்லாஹ் மீர்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமை புதல்வி

ஹிதாயத்துல்லாஹ் மீர்சா
வெளியீட்டகம்

105, தபாலக வீதி,
நிந்தவூர்-07,
சிறிலங்கா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புலமை புதல்வி |
| நூலாசிரியர் | : | ஹிதாயத்துல்லாஹ் மீர்சா |
| முகவரி | : | 105. தபாலக வீதி, நிந்தவூர் - 07. |
| தொலைபேசி: | | 0775709904 |
| வெளியீடு | : | ஹிதாயத்துல்லாஹ் மீர்சா பதிப்பகம்<br>இல: 105,<br>தபாலக வீதி,<br>நிந்தவூர் 07. |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | மார்ச். 2017 |
| பிரதிகள் | : | 1000 |
| அச்சுப்பதிப்பு | : | @hudha Printers -Colombo-10. |
| தொலைபேசி: | | 0773596127 |
| அட்டைப்படம் | : | நூலாசிரியர் |
| பக்கங்கள் | : | 128 |
| விலை | : | 350.00 |

**ISBN:** 978-955-52414-3-4

**BAR CODE: 9789555241434**

***PULAMAI PUTHALVI* NOVEL* AUTHOR : HITHAYATHULLAH MEERZA * LANGUAGE : TAMIL * FIRST EDITION : MARCH 2017 * SIZE : 1X8 * PAPER : 70GSM * PEGES : 126 *COPIES : 1000 * PRICE : 350/= * PUBLISHED BY : HITHAYATHULLAH MEERSA PATHIPPAGAM 105, POST OFFICE ROAD, NINTAVUR - 07. SRILANKA. PHONE : 0094 775709904**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இந்நாவலாசிரியர் ஹிதாயத்துல்லா மீர்சாவின் படைப்புகளில் ஒன்றான ''புலமைப் புதல்வி'' எனும் இந்நூல் வெளிவரும்போது அவர் இறையடி சேர்ந்து விட்டார், அமரத்துவம் அடைந்துவிட்டார் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இந்நாவலாசிரியரின் சிறப்புபற்றி இந்நாவலே பேசுவது அதனது உயர் தன்மையை காண்பிப்பதை எம்மால் உணர முடிகிறது. ''புலமைப்புதல்வியை'' தத்ரூபமாக எழுதி தனது கை களினாலேயே கணினிப்பதிப்பு செய்து கொழும்புக்குச் சென்று அச்சுப்பதிப்புச் செய்துவிட்டு வீடுவந்துசேர்ந்து அடுத்தசில நாட்களுக்குள் திடீரென ஏற்பட்ட எதிர்பாராத உடல் நலக்குறைவால் இறையடிசேர்ந்தார். அவரை அல்லாஹ் ஈருலகிலும் பொருந்திக் கொண்டு உயர்ந்த சுவர்க்கத்தை வழங்குவானாக. (ஆமீன்)

பல இன்னல்களுக்கும் மத்தியில் இந்நாவலை விரைவாக வெளியிடவேண்டும் என்பதுஅவரின் ஆவலாக இருந்தது. திடீரென ஏற்பட்ட இச் சோகசம்பவத்தைத் தொடர்ந்து தந்தையின் கனவு, கற்பனை, இலட்சியங்கள் நிறைவேற்றவேண்டும் என்ற தீட்சன்னியத்தோடு இந்நாவலை வெளியிடுகிறோம்.

அழகிய ஆன்மா உள்ளவன் அழகிய விடயங்களையே பேசுவான் ஆகையால் அவரின் மறைவுக்குப் பிறகு ''புலமைப்புதல்வி'' நாவல் கதைக்கருத்துகளுக்கும் கதையம்சம் ஆச்சரியத்தையும் வாழ்வியல் சித்தார்த்தங்களையும் வெளிப்படுத்தும் கருத்தாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத நூல்களின் சிறப்புகளைப் பற்றிசொல்வதை விட அதனைப் படிப்பதற்கு ஆர்வத்தை தூண்டுவதே நல்லது.

இந்நூல் கடைசியாக அவரினாலேயே சரிபார்க்கப்பட்டு அச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆகையால் இதனை வாசிக்கின்றபோது வாசகர்களாகிய நீங்கள் இதில் வருகின்ற கருத்துக்களையும், சொல்லாற்லையும் பொருந்திக் கொள்வீர்கள் என்றும் மேலும் இந்நாவல் வெளிவர உதவியவர்கள், ஊக்கப்படுத்தியவர்கள் அனைவருக்கும் குடும்மம் சார்ந்த நன்றிகளை தெரிவித்து எதிர்காலத்தில் அவரின் இன்னும் பலபுத்தகங்கள் தொடர்ந்து வெளிவரும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

அன்பு மனைவி பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள

01. தர்மத்தின் தியாகம் : சிறு கதைகள்
02. அறப்பணியில் ஆசிரியர்கள் : சம்பவங்கள்
03. பிரிவுக்குள் பிணைப்பு : சமூக நாவல்
04. நேறிகள் ஆயிரம் படி : பொன் மொழித் தொகுப்புகள்
05. நேசவினை : சமூக நாலல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனதில் மாசற்றவராய் இருக்கும்
மருத்துவத்துறையில் சேவையாற்றும்
நெ.லெ. தௌபீக் எம்.எல்.ரீ. அவர்களையும்
அவர்களின் சகோதரர்களையும்
பெற்று பேணி வளர்த்து
வள வாழ்வுறச் செய்த
தந்தை இ.ம. நெய்ந்தலெப்பை அவர்களுக்கும்
தாய் ஸாறா உம்மா அவர்களுக்கும்
இந்நூலை சமர்ப்பணம் செய்வதில்
இதயம் மகிழ்கிறேன்.

**ஹிதாயத்துல்லாஹ் மீர்சா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

இந்தக் கதையானது உண்மையின் முழு வடிவத்தை உள்ளடக்கியதாகும். தொண்ணூற்றி ஒன்பது வீதமான உண்மை சம்பவங்களை கூறும்போது, ஒரு வீதமான ஒப்பனை கதைகளில், கவிதைகளில், கட்டுரைகளில் வரத்தான் செய்யும்.

ஏன்? சரித்திரங்களை எழுதும்போதுகூட சிறு ஒப்பனை வரத்தான் செய்யும்.

ஒப்பனை என்னும்போது, அதனை கற்பனை என்று கூடச்சொல்லலாம். கற்பனையானது ஒப்பனைக்கு ஒத்துப்போக வேண்டியதேயன்றி அது மாய மந்திர, பேய், பிசாசு பூதங்களைப்பற்றிய கற்பனைக்கு அப்பாற்பட்ட கதையாக இருக்கக்கூடாது.

குடும்பத்தில் இயற்கைத்தனமாக ஒரு சில விவேகமானவர்கள் பிறப்பார்கள். அவர்களை எவ்வளவுதான் துன்பமும் எதிர்ப்பும் சூழ்ந்தபோதும், துன்பத்தையும், எதிர்ப்பையும் அனுபவ ஆசான்களாக தங்களுக்கு வசப்படுத்திக்கொண்டு தாங்களும் வாழ்ந்து பிறருக்கும் வாழ்வுப்பாதை காட்டுவார்கள்.

வறுமைக்கொடுமை நேரிட்டபோதும், வேர் இத்து இறக்க நேரிட்டாலும் விழுது தழைத்து எழும் மரம்போல் மறங்கொண்ட, மானங்கொண்ட மனிதன் இயன்றெழுவான். இப்படிப்பட்ட துன்ப சூழலில் பிறந்து வாழ்ந்த ஏழைப்பெண்ணொருத்தியின் துன்ப அனுபவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட உண்மைக்கதைதான் இந்தக்கதையானது.

புலமை புதல்வி என்று இந்தக்கதைக்கு பெயரிடக்காரணம், பெண்கள் கல்வியில் புலமை பெறும்போதுதான் அவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகள் வீரர்களாகவும், விவேகிகளாகவும், விஞ்ஞானிகளாகவும் மாபெரும் சாதனையாளர்களாகவும் உருவாகுவார்கள். இது சரித்திர வரலாறுகளில் காணக்கூடிய மாபெரும் உண்மையாகும்.

நபீசா என்ற இந்தக்கதையின் நாயகி உண்மையாகவே பல துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் இலக்காகியதால், மனிதர்களை உயர்த்துவது உதவிகள் அல்ல, தடைகளும் துன்பங்களும்தான் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் அனுபவ உண்மையாகக்கண்டு கொண்டு, தானும் தனது குடும்பமும் நல்ல முறையில் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைத்த பெருமையை அடைந்து கொண்டாள்.

எப்போதும் பெண்ணானவள் இளமையில் கல்வியில் முன்னேற்றம் காணும்போதுதான் சமூகத்தில் விழிப்புணர்ச்சியும், முன்னேற்றமும் உண்டாகும். இந்த விழிப்புணர்ச்சியால் ஏற்பட்ட ஏற்றமே நபீசாவின் வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சியாகும்.

கதையில் உயிர்த்துடிப்பான உண்மை சம்பவங்களோடு, தத்துவங்கள் நிறைந்த போதனைகளும் ஒப்பனையாக மெருகேற் றப்பட்டிருக்கின்றன.

எனவே, சமூகவியலின் சாயலை விட்டும் நகராமல் சூழல், வாழ்வு, காதல், அரசியல், பொருளாதாரம், சீதனக்கொடுமை, பயங்கரவாதத்தின் தோற்றம், வறுமையின் கொடுமை, மனிதனுக்கு மனிதன் உதவும்போது ஏற்படும் அபிவிருத்தி, இனங்களுக்கிடையிலான ஒற்றுமையின் அவசியம், அதிகாரங்களின் அதிக காரம், அதிகாரங்களில் அதிக அறம் போன்ற நிச்சயத்தன்மையை வெளிப்படுத்தும் இந்த சமூகவியல் இலக்கியத்தின் மெய்மை விளக்கத்தை விளங்கிக்கொள்ள இந்தக் கதையின் இலக்கை நோக்கி உங்களின் வாசக எண்ணத்தை நுழைத்துப்பாருங்கள். நூலிலுள்ள நுண்மைகள் விளங்கும்!

ஹிதாயத்துல்லாஹ் மீர்சா.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 01

தூக்கமின்றி துக்கத்தோடு விடியலை நோக்கியவாறு படுத்துக் கொண்டிருந்தாள் நபீசா. இரவு ஏற்பட்ட அவமானத்தை எண்ணிப்பார்த்தவள் தனக்கு இப்படியொரு துன்பம் நிகழுமா? என்று அவள் கனவிலும் கருதவில்லை

விடியற்காலை ஐந்து மணியாகிவிட்டதா? என்று வாகனங்களின் இரைச்சலையும், பள்ளிவாசலின் பாங்கோசையையும் எதிர்பார்த்தவாறு துவண்டு புரண்டு துன்பச்சுமைகளோடு படுத்துக்கிடந்தாள் நபீசா. காகம், கோழி, குயில் சத்தமிடுகிறதா? என்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

பள்ளிவாசல் பாங்கோசை கேட்டதும், ஐந்து மணியாகிவிட்டது என்ற உத்வேகத்துடன் தனது மூன்றாவது தம்பியை எழுப்ப முயற்சித்தாள். அவன் நித்திரை இன்பத்தில் மீண்டும் மீண்டும் உறுண்டு புரண்டு முனகிக்கொண்டு இன்பம் கண்டுகொண்டிருந்தான். "தம்பி! எழும்புடா தம்பி. நான் உனக்கு பாடசாலைக்கி போகும்போது ஐந்து ரூபா காசி தருவேன்" என்று அன்பாகக்கூறினாள்.

காசி ஐந்து ரூபா தருவேன் என்று நபீசா கூறியதும், "உண்மையா தருவயா லாத்தா?" என்று கேட்டான். நித்திரைச் சாயல் அவனுடைய கண்களை தழுவிக்கொண்டிருந்தது.

'தம்பி! லாத்தா பொய் சொல்லி இரிக்கனா? உண்மையாகத் தருவன். எழும்பிக்கி வா போவோம்' என்று கூறினாள்.

லாத்தாவின் பேச்சைக்கேட்டுக்கொண்ட தம்பி எழும்பி முகத்தைக் கழுவிக்கொண்டு, அவளின் பின்னால் நடந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A4 பிரதான நெடுஞ்சாலை வீதியிலிருந்து கிழக்குப் பக்கமாக பதினைந்தாவது வீடுதான் நபீசாவின் வீடு. வீதியின் மேற்குப்புறத்தில் விரிந்த பெரும் வயல்வெளி. வீதியிலிருந்து முன்னூறு அடி தூரத்துக்குப்பால் வயலுக்கு நீர்பாய்ச்சும் நீளமான வாய்க்கால் இருந்தது. அதன் நெடுகிலும் கொழுத்து வளர்ந்த பொன்னாங்கண்ணிக் கீரை வகைகள் வளர்ந்து கிடக்கும். அவற்றைப் பிய்த்துக் கொண்டு வந்து விற்றால், அன்றைய பொழுதைப் பசி இல்லாமல் போக்கலாம் என்ற எண்ணத்தோடு வயல் பக்கம் போனாள் நபீசா.

நபீசாவின் தந்தை கூலித்தொழிலாளி. விவசாயத்திலிருந்து சாரதித்தொழிலோடு இன்னும் பல தொழில்களையும் செய்பவர். ஆனால், எந்தவொரு தொழிலையும் திருப்தியாக நிரந்தரமாகச் செய்வதில்லை. அதற்கு காரணமும் இருந்தது. நபீசாவின் தாய் ஒரு வகையான மடமைத் தனமானவள். சின்ன விடயங்களைப் பெரிதாக்கி கோபப்படுவாள். இதன் காரணமாக தந்தை மிகவும் விசனப்படுவார். அதனால் உழைப்புக்கு அதிகம் ஊக்கம் எடுப்பதில்லை. ஏதோ எப்படியாவது வயிறு கழுவி வாழும் நிலமையாகத்தான் தந்தை கவனித்தாரேயன்றி பிள்ளைகளின் எதிர்காலம், படிப்பு, உழைத்து சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் எதுவுமே இல்லாதவராக இருந்தார். அத்துடன் தாயோடு சண்டை போட்டுக்கொண்டு, சில நேரங்களில் மது போதைக்கும் ஆளாவதுண்டு.

இந்தத் துன்பமான பாரச்சுமையை மூத்தவளாகப் பிறந்த நபீசா சிந்தித்தவளாக மிகவும் வருத்தப்பட்டாள். மூன்று ஆண் சகோதரர்கள், தன்னோடு சேர்த்து மூன்று பெண் சகோதரிகள் மற்றும் பெற்றோர்களுடன் மொத்தம் எட்டுப்பேர். தானும் படிக்க வேண்டும்; மற்ற சகோதரர்களையும் படிப்பிக்கவேண்டும். இந்த இக்கட்டான நிலையில் தன்னால் முடியுமென்று தனது சக்திக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையெல்லாம் சிந்தித்தவளாக செயற்பட்டாள் நபீசா.

இரவு வாப்பாவுடன் உம்மா கோபப்பட்டுக்கொண்டு, பேசாமல் ஒரு மூலையில் படுத்துக்கொண்டாள். தந்தை மதுபோதையில் வந்து எதையெதையோ முனகிக்கொண்டு, கிடைத்ததை சாப்பிட்டு விட்டு தூங்கி விட்டார். பாடசாலை விடுமுறை என்பதால் தம்பிமார் இரண்டு பேரும் மேசன் வேலைக்கு போய் வந்தார்கள். அவர்களுக்குப் பசி அதிகமாக இருக்கும் என்ற நோக்கத்தில் தனது பங்கு சோற்றையும் தம்பிமாருக்குக் கொடுத்து விட்டாள் நபீசா.

இரவைக்கு தனக்கு சாப்பிட எதுவுமில்லை என்று எண்ணிய நபீசா முத்தம்மாவின் சில்லறைக்கடையில் கடனுக்கு தேயிலையும் வட்டரும் வாங்கிக் குடிப்போம் என்ற நோக்கத்தில் கடைக்கு வந்தாள். அப்போது கடைக்கு வந்த நபீசாவின் மாமி நபீசாவிடம், "நபீசா! இரவைக்கி எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காராள்ர சொந்தக்காரர்கள் சிலருக்கு விருந்துபசாரம் நடக்கப் போகுது. நீ கொஞ்சம் வந்து உதவி செய்யமாட்டயா?" என்று கேட்டாள்.

இப்படி நபீசாவின் மாமி கேட்டதும், சில்லறைக்கடை வைத்துக் கொண்டிருக்கும் நபீசாவின் உம்மாட உம்மா அதாவது மூத்தம்மா நபீசாவின் பஞ்சம் - பசி - துன்பம் - துயரம் தெரிந்த மூதாட்டி கூறினாள்: "மன நபீசா! மாமி சொல்லுறாப்போல கேட்டு, அத இத செஞ்சி போட்டு, நீயும் ஒரு பிடிய சாப்பிட்டு விட்டு வா மன! போ மன!!" என்று அன்பாகவும் பரோபகரமாகவும் சொன்னாள்.

இதைக்கேட்ட நபீசாவுக்கு சரியாகத்தான் பட்டது. கடனுக்கு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு உறங்குவதை விட பட்டினியுடன் படுப்பதுமேல். பட்டினியுடன் படுப்பதைவிட பாடுபட்டு சாப்பிடுவது அதனைவிட மேலானது என்னும் தத்துவத்தைப் படித்தவள் நபீசா. எனவே சீனி, தேயிலை, வட்டர் வாங்க வேண்டுமென்றால், காசி கையில் இல்லை. மூத்தம்மா கூறுவதை கேளாமல் விட்டால் மூத்தம்மா கடனுக்குச் சாமானும் தரமாட்டாள். எனவே, மூத்தம்மா சொல்லுவதுபோல், கேட்டுக்கொண்டு மாமியுடன் போனாள் நபீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 02

தானங்களில் சிறந்த தானம் அன்னதானம். அந்த அன்னதானம் அனாதைப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்போது, ஒரு சில செல்வந்தர்களும் அதில் சேர்ந்து பசியாறுவது பாதகம் அல்ல. ஆனால் செல்வந்தர்களுக்காக மட்டும் வழங்கப்படும் அன்னதானத்தில் அறம், நன்றியுணர்வு இருக்குமா? என்ற சிந்தனையோடு, நபீசா விருந்து நடக்கவிருக்கும் மாமியின் வீட்டுக்குப் போனாள்.

பிரதான வீதி அருகே இருந்த மாளிகை போன்ற வீட்டின் முன்பாக விலை உயர்ந்த நவீனமான கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. பணம், பட்டம், பதவியில் உயர்ந்து காணப்பட்டவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் உண்டு மகிழ்ந்து ஆங்கில கவர்ச்சி மொழிகள் பேசிக்கொண்டு, தங்களின் பெருமைகளையும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நபீசா உணவுத்தட்டுகளைப் பெண்கள் பகுதியில் கொண்டுவந்து கொடுப்பதும், சாப்பிட்டு முடிந்த தட்டுகளை கொண்டு வந்து மிச்சம் மீதிகளை குப்பை கூடைகளில் போடுவதும், பழச்சாறுகள், ஐஸ்கிறீம், பழம், தண்ணீர் கொடுப்பதுமாக ஓய்வு ஒழிச்சலின்றி பம்பரம்போல் சுழன்று கொண்டிருந்தாள். அவள் பம்பரம்போல் சுழன்று கொண்டிருப்பது அவளுக்கு சோர்வையோ, துன்பத்தையோ தரவில்லை. ஆனால், அங்கு நடப்பவைகளைக் காணும்போது, மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

பெருமைக்காக ஆடை ஆபரணங்கள் அணிந்து கொண்டு வந்து உண்ணும் அந்த சீமான்களும் சீமாட்டிகளும் உண்டு கழிக்கும் உணவுகளை காணும்போது, வறுமைப்பட்ட நபீசாவின் சிந்தனை வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

பால், பழம், முட்டை, கோழி போன்ற அந்த உணவுவகைகளை சிலர் பெருமைக்காக உண்டு கொண்டு, அதை நாகரீகம் என்ற முறையில் அரைவாசிக்கும் குறைவாக சாப்பிட்டு விட்டு, மிச்சம் வைத்து விட்டு கை கழுவும் விதத்தைக் கண்ட நபீசா கடுமையாக கவலைப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மிச்சம் வைத்த அரைவாசி உணவுகளை அவர்களைப்போன்ற பெருமைக்காரர்கள் சாப்பிடுவார்களா? இல்லவே இல்லை. எனவே பெறுமதியான சாப்பிடக்கூடிய அந்த உணவு வகைகளை அநியாயமான முறையில் குப்பைக்கூடையில் நபீசா அவளின் கைகளாலேயே கொண்டு போய் கொட்டினாள்.

இந்த விருந்துக்கான செலவில் பாதிச்செலவு வீணே குப்பையில் கொட்டப்படுகிறதே என்று கவலைப்பட்டுக்கொண்ட நபீசாவுக்கு இன்னுமொரு சிந்தனை ஏற்பட்டது. இங்கு அக்கம் பக்கத்திலுள்ள சொந்தக்காரர்களான ஏழை எளியவர்கள் யாரையும் காணவில்லை. தான் மட்டும் வேலைக்காக அழைக்கப்பட்டிருந்தாள். இவர்களையெல்லாம் என்ன நோக்கத்தை வைத்துக்கொண்டு இவ்வாறெல்லாம் பணத்தை வீண் விரயம் செய்கிறார்களோ என்று மனம் கலங்கியவளாக உணவு பரிமாறிக் கொணடிருந்தாள்

நேரம் ஒன்பது மணியாகிக்கொண்டிருந்தது. இன்னும் சிலர் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் கடைசியாக வரும் விருந்தாளிகளாகக் காணப்பட்டார்கள். அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும், இனி விருந்துக்கு யாரும் வரமாட்டாகள் என்று மாமியும் மாமாவும் பேசிக்கொண்டார்கள். நபீசாவுக்கு பசி வாட்டத்தை கொடுத்ததுக் கொண்டிருந்தது. கடைசி விருந்தாளிகள் சாப்பிட்டுவிட்டு போன பிறகுதான் தனக்கு சாப்பாடு கிடைக்கும்; அதுவும் சாப்பாடு பரிமாறப்பட்ட சட்டி, பானை பாத்திரங்களையெல்லாம் கழுவி துப்பரவு செய்த பிறகுதான் சாப்பிடலாம் என்ற நிலையும் காணப்பட்டது.

சட்டிபானை பாத்திரங்களை கழுவிக்கொடுத்துவிட்டு, வீட்டுக்கு போவதென்றால், பதினொரு மணி பனிரெண்டு மணியாகும். அப்படி தாமதித்துப்போனால் உம்மா ஏசுவா என்ற பயமும் நபீசாவை கவலை கொள்ளச்செய்தது. எனவே என்ன செய்வதென்ற கேள்வி. பசி வாட்டத்தோடு வதைக்கத்தொடங்கியது.

இப்படி எண்ணிக்கொண்டிருக்கும்போது, நபீசாவுடன் படிக்கும் பள்ளித்தோழி நலவிழி விருந்துக்கு வந்திருந்தாள். அவள் நல்லஅழகி. இலக்கியம் சம்மந்தமான ஆர்வமுடையவள். அவளுடைய பெயருக்கு தகுந்தவாறு நலமானதே அவளின் விழிகளுக்குத் தெரியும். எனவே நலவிழி என்னும் தமிழ் நாமம் அந்த தமிழ்ப்பெண் மகளுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. நலவிழி நபீசாவைக் கண்டதும், மகிழ்ச்சியுடன் அழைத்து "நபீசா விருந்துக்கு வந்தயா?" என்று கேட்டாள்.

"இல்லை நலவிழி. நான் இங்கு வேலைக்கு வந்தேன்" என்று கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இப்படிப்பட்ட விருந்துகளுக்குப் போக விருப்பம் இல்லாதவள்தான். இருந்தும் அப்பா, அம்மா வற்புறுத்தி கூப்பிட்டதால்தான் வந்தேன். இதோ பார் நபீசா" என்று தனது கையிலிருந்த பத்திரிகையை காட்டி, அதிலிருந்த சிறுவாசகத்தைக் காட்டினாள் நலவிழி. நோபல் பரிசு பெற்ற திரேசா அம்மையாரின் முன்மாதிரி குறிப்பிடப்பட்டிருந்தது.

நோபல் பரிசு வழங்கும் வைபவத்தின்போது, நோபல் பரிசு வழங்கும் குழுவினருக்கு நோபல் பரிசு வாங்குகின்றவர்கள், தங்களின் சொந்தச் செலவில் சந்தோசமாக விருந்து கொடுப்பது வழமையாக நடப்பது.

மேற்படி விருந்துக்கு சுமார் ஐம்பதாயிரம் டொலர்கள் செலவாகும். எனவே, திரேசா அம்மையார் நோபல் குழுவினரிடம், இந்த விருந்தை வேண்டாம் என்று கூறினால், இந்த விருந்துக்காகச் செலவாகும் ஐம்பதாயிரம் டொலர் பணத்தையும் இந்தியாவில் கல்கத்தா நகரில் தொழு நோயாளர்களுக்கு ஒரு வைத்தியசாலையை கட்டிக்கொடுக்க முடியும் என்று தார்மீகமாகக் கூறினார்கள். அதற்கு அந்த நோபல் குழுவினர்கள் சந்தோசத்துடன் சம்மதித்து அந்த விருந்தை வேண்டாம் என்று வெறுத்தார்கள்.

அந்த வாசகத்தை வாசித்த நபீசாவின் கண்கள் பனித்திருந்தது. இருந்தும் தனக்கு இருந்த பசியின் காரணமாக நபீசா கூறினாள்: "நலவிழி! இந்த விருந்தில் என்னைப்போல் ஒரு ஏழை சாப்பிட்டுவிட்டு, இந்த வீட்டுக்காரருக்கு நன்றி கூறினால் அது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதா?" என்று.

நபீசாவின் இந்த வார்த்தைப் பிரயோகத்தின் உண்மையான தார்மிகம் என்னவென்றால் பசியோடு இருக்கும் மனிதனுக்கு புசிக்கக்கொடுத்து விட்டு, போதனை செய்தால்தான் அவனுக்கு போதனை விளங்கும். பசியோடு இருப்பவனுக்குப் போதனை புரியாது.

"நபீசா ஒரு வேளைச்சாப்பாடு கொடுப்பதைவிட, ஒரு மனிதனுக்கு வாழ்வு காட்டுவது மிகப்பெரும் தர்மம். இதையெல்லாம் நாம் பிறகு பேசிக்கொள்வோம். சாப்பிடுவோம் வா?" என்று தனக்கு அருகில் நபீசாவை நலவிழி அமருமாறு கூறினாள்.

நபீசா, நலவிழியின் அருகில் அமர்வதற்கு வெட்கப்பட்டாள். "என்ன நபீசா! இரியன்" என்று நட்பின் உரிமையோடு அன்புடன் நலவிழி கூறினாள்.

நலவிழியின் அன்புத்தொல்லை ஒரு புறமும், வீட்டுக்குப் போக வேண்டும் என்ற அவசரத்தினாலும், பணவசதி படைத்த பள்ளித்தோழி நலவிழியுடன் நபீசா இருந்து சாப்பிட அமர்ந்தாள். இதைக்கண்ட பணக்காரச்சீமாட்டியான மாமி, நபீசா சாப்பிட அமர்ந்தது பிடிக்கவில்லை. அதனைக் காட்டிக்கொள்ளாமல் பக்குவமாக நபீசாவை அழைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சம் சுடு நீர் போடணும். போட்டுத் தந்துவிட்டுச் சாப்பிடு" என்று கவர்ச்சியாக ஆனால், கயமையாகக் கூறினாள்.

நபீசா பள்ளித்தோழியிடம் இனிமையாக வெட்க நாணத்துடன் "வருகிறேன்" என்று கூறிவிட்டு, மாமியின் முகத்தைப்பார்க்காமலே, வெடுக்கென்ற வேகத்தோடு, அந்த வீட்டு வளவை விட்டு வெளியேறி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 03

கடை வைத்துக்கொண்டிருந்த மூத்தம்மா இன்னும் கடை அடைக்கவில்லை. நபீசா வருவதையும், வரும் வேகத்தையும் தாகத்தையும் மனத்தாபத்தையும் புரிந்து கொண்ட மூத்தம்மா, "என்ன மன ஒரு மாதிரியா வாறாய். சாப்பிட்டயா? என்ன அதிகமா வாடிப்போயிரிக்காய்?" என்று கனிவுடன் கேட்டாள்.

கோபம் ஒரு புறமும், பசித்தாகம் ஒரு புறமும், வெட்கம் ஒரு புறமுமாக இருந்த நபீசா மூத்தம்மாவின் கேள்விக்கு எதைக்கூறுவது என்ற வேதனையுடன் நடந்ததைக் கூறினாள்.

நபீசா கூறியதைக்கேட்ட மூத்தம்மா கண் கலங்கியவளாக, "மன! நான்தான் ஒன்ன அவள்ர ஊட்ட போகச்சொன்னன். இவ்வளவு நேரமும் வேலை வாங்கிட்டு, ஒழுப்பம் சோறு திங்க குந்தினத விரும்பாத அவள் நாசமாப்போகணும் மன" என்று மூத்தம்மா வேதனையுடன் கூறினாள்.

கன்னிக்குமரு கனநேரம் கடைக்குப் போனவள் இன்னும் வரவில்லை என்ற ஏக்கத்தோடு, நபீசாவின் உம்மா வீதிக்கு வந்து மகள் நபீசாவை எதிர்பார்த்த வண்ணம் காத்துக்கொண்டிருந்தாள். மூத்தம்மாவின் வார்த்தையையும் நபீசாவின் கவலையையும் கேட்காத தெரியாத தூரத்தில் நபீசாவின் உம்மா நின்று கொண்டிருந்தாள்.

மாமியின் வீட்டுக்கு வேலைக்குப் போன விசயம் உம்மாவுக்கு தெரிந்தால், பிறகு உம்மாவின் கொம்பலுக்கும் திட்டலுக்கும் பல வாரங்கள், மாதங்கள் எடுக்கும் என்ற பயத்துடன் மூத்தம்மாவிடம் கடனுக்கு சீனி வட்டர் தேயிலை வாங்குவோம் என்று எண்ணும்போது, விருந்து கொடுத்தமாமி வேகமாக வந்து நபீசாவின் கையைப் பிடித்து, "நபீசா! எங்கே எனது தங்க மாலை? நீ மட்டுந்தான் குசினுக்குள் அதிக நேரம் வந்ததும் போனதும். உன்னைவிட வேறு யாரும் குசினுக்குள் வரவுமில்லை. உடனே எடு எனது மாலையை" என்று அதட்டிக்கொண்டு, நபீசாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பு, இடுப்பு, உடலெங்கும் ஊடுருவித்தேடினாள். தங்க மாலை தென்படவில்லை.

மாமி உடலெங்கும் தொட்டுத் தேடுவதை கூச்சமாகவும் வெட்கமாகவும் இருப்பதை தடுப்பதற்காக நபீசா மாமியின் கரங்களை தடுத்துக்கொண்டிருந்தாள். அப்படி நபீசா தடுக்க முற்படும்போது, மாமியின் சந்தேகம் இன்னும் இரட்டிப்பாகவே தேடும் வலிமையை மேலும் பயன் படுத்தத்தொடங்கினாள்

வீட்டுக்கடப்படியில் நின்று கொண்டிருந்த நபீசாவின் உம்மா வந்து "என்ன நடந்தது?" என்று சங்கதியை அறிந்து கொண்டவள் சத்தமிட்டு புலம்பத் தொடங்கினாள். "என்ர புள்ள கனவிலும் களவு பத்தி எண்ணாதவள். ஒண்ட மாலய களவெடுக்க ஒண்ட ஊட்ட அவள் ஏன் வரணும்? பணமெண்டா பணக்காறனுக்கு உரிஞ்சி வெக்கற தேவிடியாள். ஒண்ட ஊட்ட வந்த கள்ளன் ஆரும் எடுத்துக்கு போயிருப்பான். அவனுகள்ர கச்சய போய் அவுளுடி தங்க மால படமெடுத்துக்கு ஆடும்" என்று ஆக்ரோஷமாகக் கூறிவிட்டு றபீசாவைப் பிடித்து, "டியேய்! நீ ஏண்டி இவள்ள ஊட்ட போகணும். நாங்க மகுத்துலயும் இவள்ள முகத்தில முளிக்கறல்லண்டு அறாம் சொன்னவள்ள ஊட்ட நீ ஏண்டி போகணும்" என்று நபீசாவைப்போட்டு தனது பலம் உள்ள வரையும் அடித்தாள்.

நபீசாவை போட்டு அடிக்கும் பாவம் பொறுக்க முடியாத மூத்தம்மா நபீசாவின் தாயை, தனது மகளை தடுத்து நிறுத்தினாள். உம்மாவின் இயலாத்தன்மையை மீறிக்கொண்டு, நபீசாவுக்கு அவளுடைய உம்மா சத்தம் போட்டு அடித்துக்கொண்டிருந்தாள். இரவுச்சத்தம் தூரம் வரையும் கேட்டுக்கொண்டிருந்தது. சனங்கள் கூடத்தொடங்கினார்கள் நபீசாவின் வாப்பாவும் வந்து விட்டார்.

நபீசாவின் வாப்பாவுக்கு மகளின்மீது பாசம் மிகவும் அதிகம். அதனால் மகள் அடிபட்டு கன்னம் வீங்கி உடை கிழிந்து அலங்கோலப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துவிட்டு, என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொண்டவருக்கு கோபம் வெறியாக மாறியது.

நபீசா தங்க மாலையை களவெடுத்தாள் என்று கூறிக்கொண்டிருக்கும் தனது தங்கச்சி நின்று கொண்டிருந்தாள். அவளின் அருகில் வந்தவன் அவளைப்பிடித்து "என்ர புள்ள ஒண்ட தங்க மாலய களவெடுத்தத நீ ஒண்ட கண்ணால கண்டு, கையால பிடிச்சயா?" என்று கூறி அவனுடைய கோபம் தீரும் வரையும் போட்டு அடித்தான். பிடவை சட்டையெல்லாம் போட்டுக் கிழித்தான். அவளுடைய முகம் உடலெங்கும் காறித்துப்பினான். அவ்விடத்தில் நின்ற சனங்கள் அவனைப்பிடித்து விலக்கிவிட்டு, அவளை வீட்டுக்கு போகச் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் போகும்போது, "இந்த அடி அநியாயமெல்லாம் நாளக்கி பொலிசில தெரியும்" என்று கூறிச் சென்றுகொண்டிருந்தாள்.

"பொலீஸ் ஆருக்கிடி? ஆம்புளக்கித் தாண்டி. ஒண்ட புரிசன்மார வரச்சொல்லுடி" என்று ஆவேசமாக கத்தினான் நபீசாவின் வாப்பா.

இரவு நடு நிசி என்பதால் சண்டையும் கும்பலும் அதிக நேரம் நீடிக்கவில்லை. சனங்கள் கலைந்துவிட்டார்கள்.

இந்தத் துன்பமான வேதனைதான் இரவு முழுவதும். நபீசா தூக்கமின்றி துன்பப்பட்டுக்கொண்டிருந்தாள். பண்பான மனிதர்கள் பிறவியில் பிறந்தாலும், அவர்களை சூழ்நிலை எவ்வாறு ஆட்படுத்துகின்றதோ. அந்த ஆட்படலையும் வென்று, சத்திய நெறிக்கு தங்களை இட்டுச் செல்லுகின்றவர்கள்தான் உலகில் உண்மையான உன்னத நிலையை அடைவார்கள். இதுபோன்ற சத்திய ஆக்கிரமிப்பு, அல்லது சத்தியாக்கிரகம் என்னும் உண்மை நிலமைக்கு நபீசா ஆட்பட்டுவிட்டாள்.

இரவு, மாமி தன்னை தங்க மாலை திருடிய அவதூறு ஏற்படுத்தியதிலிருந்து, இரவு உம்மா தன்னைப்போட்டு அடித்து வதைத்ததிலிருந்து, வாப்பா மாமியை போட்டு அடித்து இம்சைப் படுத்தியதிலிருந்து எல்லாவெற்றையும் எண்ணிப்பார்த்த நபீசாவுக்கு பெரும் பயப்பீதியும் ஏற்படத்தொடங்கியது.

விடிந்தவுடன் தங்கமாலை திருடிய சந்தேகத்தில் தன்னையும், மாமிக்கு அடித்ததால் வாப்பாவையும், பிடித்துக்கொண்டு போவதற்காக பொலீஸ்காரர்கள் வருவார்கள். பெரும் சட்டத்தரணியான மாமியின் கணவரின் சந்தேகத்துக்கும் கோபத்திற்கும் பலியாகிப்போனோமே என்ற பெரும் கவலை நபீசாவை உறுத்தத்தொடங்கியது.

உறுத்தும் பயமெல்லாம் உறுத்தட்டும். இன்றைய கடமையை செய்வோம் என்று எண்ணியவளாக தம்பியை அழைத்துக்கொண்டு, பொன்னாங்கன்னி ஆய்வதெற்கு வயலுக்குள் போனாள்.

விடியற்காலையில் வயலெங்கும் பனித்துளிகள் புல் முனைகளில் பூவென பூத்துக்கொண்டிருப்பதுபோல் தொங்கிக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் சிலந்திகள் இரைக்காக வலை விரித்திருக்கும் காட்சிகள். எங்கு பார்த்தாலும் ஆயிரமாயிம் சூரியன்களைப்போல் ஓவியம் வரைந்ததுபோல் சிலந்திகள் பின்னியிருக்கும் வலைகள் இயற்கையின் கோலங்கள் எப்படியெல்லாம் காணப்பட்டுக்கொண்டிருந்தன.

விதம் விதமான பறவைக்கூட்டங்களின் நடமாட்டம்; இவற்றையெல்லாம் நுகர்ந்தவளாக துன்பத்தினைப் போக்க, இயற்கையின் இன்பத்தை இரசித்தவாறு, தம்பியின் கையிலிருந்த வேளாண்மை வெட்டும் அரிவாளை வாங்கி வாய்க்கால் அருகே குனிந்து, வேகவேகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாங்கன்னியை வெட்டியெடுத்து தம்பியின் கையிலிருந்த பையினுள் போட்டுக்கொண்டிருந்தாள்.

பத்துக்கட்டுகள் கட்டுமளவுக்கு பொன்னாங்கண்ணியை வெட்டியெடுத்தவள், இன்னும் இரண்டு, மூன்று கட்டுகள் வெட்டுவோம் என்று எண்ணிக்கொண்டு வெட்டும்போது நபீசா நினைத்தாள்; 'இரவு நடந்த குழப்பத்திற்காக தன்னையும் வாப்பாவையும் கைது செய்வதற்காக கட்டாயம் பொலீஸார் வருவார்கள். விடியற்காலையில் பொலீஸார் வீட்டுக்கு வந்தால் என்ன செய்வது?

இறைவா! நான் மாமிர மாலையை களவெடுக்கவுமில்லை. வாப்பாவுக்கு என்னுடைய நல்ல குணமும் தெரியும். யாருடைய பொருள்கள் வீதியில் கிடந்தாலும் அவற்றை எடுத்து கொடுக்கும் தூய குணத்தைக் கொண்டவள் நான். களவு, ஏமாற்று, புரட்டுத்தனங்கொண்டவர்களை நிமிர்ந்தும் கண்ணெடுத்துப் பாராத எனக்கு இப்படியுமொரு துன்பமா? நான் உன்னை தினமும் தொழுது வணங்குகிறவள் அல்லவா? என் தேவைகளை உன்னிடம் முறையிடுகிறேன். என்னையும் என் தகப்பனையும் பொலீசில் இருந்து காப்பாற்று இறைவா! என் தகப்பனை பொலீஸ்காரர்கள் பிடித்தால் கடுமையாக அடித்து துன்புறுத்துவார்கள். என்னையும் அவமானப்படுத்துவாகள். நீதான் வல்ல நாயனே எங்களை காப்பாற்ற வேண்டும்" என்று கண்ணீர் பொங்க இறைஞ்சினாள் நபீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 04

நேரம் காலை ஆறு மணியாகிக்கொண்டிருந்தது. இன்னும் பொன்னங்கன்னி ஆய்வதெற்கு நேரம் போதாது என்ற எண்ணத்தில் கடைசி பொன்னங்கன்னிக் கத்தையை அறுப்பதற்காக பொன்னங்கன்னி தண்டுக்குள் அரிவாளை இட்டு அறுத்தாள். இவ்வளவு நேரமும் மிக இலகுவாக அறுக்கப்பட்டுக் கொண்டிருந்த பொன்னங்கன்னிக்கீரை அறுபடாமல் கொஞ்சம் கடினமாக அறுக்க முடியாமல் தடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

அப்போது, தம்பி பயமும் பீதியும் கொண்டவனாக "லாத்தோ....வ் பொலீஸ் ஜீப்பு மாமிர ஊட்ட போகுது லாத்தா" என்று பயந்து அழுதவாறு கூறினான்.

தம்பி கூறியதைக்கேட்ட நபீசா நிமிர்ந்து பார்த்தாள். வீதியால் பொலீஸ் ஜீப் வண்டி சென்றுகொண்டிருந்தது. மாமியின் வீட்டுக்கும் பொலீஸ் ஜீப் வண்டிக்கும் இடையில் நூறு அடித்தூரம் இடைவெளி இருந்தது.

நபீசா எதையோ சந்தித்தவளாக, சிந்தித்தவளாக அவளின் சிந்தனை மின் வேகமாக நொடிக்குள் அண்டத்தையே சுற்றி வரும் மன வேகமாக சுழன்று முடிவெடுத்தது. கூரிய அறிவு அதிர்ஸ்டத்துக்கு வழி வகுக்கும். திறன் அறிவு வெற்றிக்கு வழிகோலும் என்னும் மதி நுட்பம் அவளை ஆட்படுத்தியது.

அரசியல், போர், விளையாட்டு, பரீட்சை, அதிர்ஸ்டம், கண்டுபிடிப்பு போன்ற விடயங்களில் யார் நொடிக்குள் முடிவெடுக்கின்றார்களோ அந்த முடிவுக்குள் வெற்றியின் திறமையை முடிவெடுக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் அரிய பெரிய வெற்றி வாய்ப்பினை பெற்றவர்களாகின்றார்கள்.

இப்படிப்பட்ட இக்கட்டான பயங்கரமான நிலமையில் முடிவெடுத்து, அந்தப்பெரும் கைங்கரியத்தை செய்துகொண்டு, வேகமாக தம்பியை அழைத்துக்கொண்டு, தன்னை யாரும் காணாதவாறு வரம்புப் பத்தைகளின் மறைவால் ஓட்டமும் நடையுமாக பிரதான வீதிக்கு வந்தாள் நபீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் மாமியின் வீட்டடியில் பொலீஸ் ஜீப் வண்டி நின்று கொண்டிருந்தது. மாமியின் கணவனை பொலீஸ்காரர்கள் அழைத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். மாமா ஒரு சட்டத்தரணி. தனது அந்தஸ்தையும் கவர்ச்சியையும் காட்டுவதற்காக ஆங்கிலத்தில் பொலீஸ் பொறுப்பதிகாரியோடு பேசிக்கொண்டிருந்தார்.

அதிகமானவர்கள் தங்களைக் கற்றவர்கள்; பெரியவர்கள் என்று காண்பிப்பதற்காக நமது சமூகத்தில் ஆங்கிலம் பேசிக்கொண்டு, ஆங்கிலம் தெரியாத இயற்கைத்தனமான விவேகிகளையும், விவசாயிகளையும் மட்டம் தட்டுவோரின் தாக்கம் அதிகம்.

நபீசா தன்னை யாரும் அடையாளம் காணக்கூடாது என்று வீதியைக் கடக்க நினைத்துக்கொண்டு வந்தவளை, பொலீஸ் பொறுப்பதிகாரியோடு ஆங்கிலம் பேசிக்கொண்டிருந்த மாமா சட்டத்தரணி நபீசாவைகாட்டி “அதோ வருகிறாள். அவள்தான் இரவு வீட்ட தங்க மாலையை களவு எடுத்தவள்” என்று விசனமாகவும் கோபமாகவும் கூறினார்.

பொன்னங்கன்னி இலக்கறிப் பையோடு, தம்பியை அழைத்துக் கொண்டு வரும் நபீசாவை பொலீஸ் பொறுப்பதிகாரி கண்ணோட்டம் விட்டார். பதவிகளும் பட்டங்ளும் பெருமைக்காக அலங்கரிக்கப்படுவதல்ல; உண்மையை ஊடுருவிப்பார்த்து பொய்யையும் மெய்யையும் அறியும் ஆற்றலுக்காக வழங்கப்படும் சன்மானமே பட்டங்களும் பதவிகளும் என்பதற்கமைவாக கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்; அவ்தன்றி, புண்ணென உணரப்படும் கண் என்னும் குறளுக்கு அமைவாகவும், பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் புலரும் பொழுதில் பூவைப்போல் வரும் நபீசாவை புன்னகை முகத்தோடு நோக்கினார்.

அழகு அவளிடம் அளவாக அலங்கரித்துக் கொண்டிருந்தது. அச்சம் அவளின் அன்ன நடைக்கு மெருகூட்டிக்கொண்டிருந்தது. நாணம் அவள் உடல் அசைவில் நயமான எழிலைத் தந்து கொண்டிருந்தது. மடம் அவளின் பெண்மையில் அரணாக அமைந்திருந்தது. பயிர்ப்பு அவளின் பாரம்பரியக் குணத்தை அளவிட்டுக் கொண்டிருந்தது.

இந்த அளவீடுகளில் நபீசா எப்படிப்பட்டவளாக இருக்க முடியும் என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கும் பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் மாமியின் கணவர் ஆங்கிலத்தால் கோபமூட்டும் வண்ணம் ஆணவமாக பேசிக்கொண்டிருந்தார். அவருடைய ஆங்கிலம் லத்தீன் மொழி கலந்த ஆங்கிலமா? கிரேக்கம் கலந்த ஆங்கிலமா? என்பதை கொஞ்சம் எண்ணிப்பார்த்த பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு ஒன்று மட்டும் உண்மையாக விளங்கியது. ஆங்கிலத்தைக் கொண்டு பெருமையாகப் பேசி, பொலீஸை ஆட்படுத்தி தனக்கு இருக்கும் கோபத்தையும் வெறியையும் தீர்த்துக்கொள்ள நபீசாவையும், அவளுடைய தந்தையையும் பிடித்துக் கொண்டுபோய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து நொறுக்குங்கள் என்பதுபோல்தான் அவர் பேசும் ஆங்கிலத்தின் அர்த்தம் விளங்கியது.

வசதி வாய்ப்புகள் உள்ள சிலரின் அநியாயமான சந்தேகங்களால் ஏற்பட்ட கொடுமைகள்தான் அதிகமாக சமுதாயத்தில் பாவம் பழியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிவுபூர்வமாகக் கண்டு கடமையாற்றும் பொலீஸ் பொறுப்பதிகாரி நபீசாவை தன்னருகே புன்னகையோடு அழைத்தார். நபீசா பயத்துடன் நடுங்கியவாறு பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் போய் நின்றாள்.

“நீங்கள்தானே நபீசா? நீங்க பயப்படத்தேவையில்ல. இரவு நடந்த விடயத்தை உண்மையாக கூறினால் உங்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் பிரச்சினை முடிந்துவிடும். இல்லையென்றால், பொலீஸ், மறியல் என்றெல்லாம் அதிகம் துன்பப்பட நேரிடும். இரவு நீங்க இவங்கட வீட்ட தங்க மாலைய எடுத்தது உண்மையா? சொல்லுங்க” என்று கோபம் போல் காட்டி அதட்டினார் பொலீஸ் பொறுப்பதிகாரி

“சேர்! நான் உங்களிடம் உண்மையை சொல்லுகிறேன். கொஞ்சம் தள்ளி வாங்க” என்று நபீசா பொலீஸ் பொறுப்பதிகாரியை அழைத்துக்கொண்டு போய் கதைத்தாள். கதைத்து விட்டு பொலீஸ் பொறுப்பதிகாரியின் கையில் தனது கையில் இருந்ததை கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்ட பொலீஸ் பொறுப்பதிகாரி நபீசாவை வீட்டுக்குப் போகச்சொல்லிவிட்டு, மாமியின் கணவனிடம் கொஞ்சம் பேச வேண்டுமென்று சடுதியாகச் சொன்னார்.

மாமியின் கணவர் சட்டத்தரணி பொலீஸ் பொறுப்பதிகாரியையும், பொலிஸ்காரர்களையும் வீட்டுக்குள்ளிருந்து பேசுவற்காக அழைத்தார். அவ்விடத்தில் பாதை கொஞ்சம் இறக்கமாக இருந்ததால், பொலீஸ் வண்டி இறக்கத்தில் உறுண்டு ஓடிவிடும் என்பதற்காக, பொலீஸ் வண்டி சாரதியிடம் பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவசரமாக ஆணையிட்டுக் கூறினார்; “அதோ. அந்தப்பக்கம் கிடக்கும் கருங்கல்லைக்கொண்டு வந்து ஜீப் வண்டியின் டயருக்கு அடை வை” என்று. அவரின் ஆணையில் அவசரமும் பதட்டமும் காணப்பட்டது.

பொலீஸ் பொறுப்பதிகாரியின் உத்தரவில் போய் கருங்கல்லை தூக்கிய பொலீஸ் வண்டி சாரதி வேகமாக அதை வேறு பக்கம் வீசி விட்டு, அபயக்குரலில், ‘வெடி குண்டு, வெடி குண்டு. எல்லோரும் ஓடுங்க, ஓடுங்க’ என்று கூறிக்கொண்டிருந்தான்.

அவன் அப்படி கூறியதைக்கேட்டதும் அங்கு திரண்டிருந்த அனைவரும் ஆளுக்கொரு பக்கமாக ஓடினார்கள். இதனை அவதானித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த பொலீஸ் பொறுப்பதிகாரி பொலீஸ்வண்டிச் சாரதி கருங்கல் எடுத்த இடத்துக்குப் போனார்.

அவர் அங்கே கண்ட காட்சி அவருடைய உயிரைப் பிடுங்குவது மட்டுமல்ல, அந்தப்பகுதியை உலுக்கி உடைக்கும் பயங்கரமான வெடி குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. உடனே அவர் வெடிகுண்டுக்கு பொருத்தப்பட்டிருந்த வயர்களுக்கு துப்பாக்கியால் வெடிவைத்தார். இப்போது தூர இருந்து இயக்கும் வயர்கள் துண்டிக்கப்பட்டு, வெடிகுண்டு வெடிக்கும் சக்தியை இழந்து விட்டது. உடனே வெடிகுண்டுக்கு பொருத்தப்பட்டிருந்த வயர்கள் எங்கே போகிறது? என்று ஆராய்ந்துபார்க்க வயல்பக்கமாக ஓடினார். அவரோடு சேர்ந்து மற்றப் பொலீஸ்காரர்களும் ஓடினார்கள். வெகுதூரங்களுக்கு அப்பால் இரண்டு பேர் ஓடிக்கெண்டிருந்தார்கள். அவர்களை நோக்கிச் சுடுமாறு உத்தரவிட்டார். அவர்கைள நோக்கி பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடாத்தினர். எனினும் அது அவர்களுக்குப் படவில்லை. தப்பி ஓடி விட்டார்கள்.

காலைவேளையில் வெட்டவெளி வயல்வெளி என்பதால், வயல் வேலைக்கு சென்றவர்கள், மீன் பிடிக்கச்சென்றவர்கள், மாட்டுக் காலைகளுக்கு பால் கறக்கச்செனறவர்கள், கீரை வகைகள் வெட்டச்சென்றவர்கள், இயற்கை கடமைகள் கழிக்கச்சென்றவர்கள், இன்னும் பலரும் பொலீஸ் துப்பாக்கி வேட்டுக்களால் அச்சப்பட்டு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். சிலர் செய்வதறியாது பொலீஸ்காரர்களின் பிடியில் அகப்பட்டு அடியும், தலைக்கு மேல் வெடியும் வைக்கப்படடு, கைதிகளாக்கப்பட்டுக் கொண்டிருந்தாகள்.

பொலீஸ் பொறுப்பதிகாரி வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்காக பொருத்தப்பட்டிருந்த வயர்களின் தொங்கலுக்குச் சென்றார். அவ்விடம் பற்றைகள் நிறைந்த புதராக இருந்தது. அதற்குள் இருந்துதான் தீவிரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்காக காத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பதற்கான அடையாளங்கள் காணப்பட்டிருந்தன.

அடியும் பிடியுமாக அதிகம் பேர் பொலீஸாரால் கைது செய்து கொண்டு வந்திருப்பதையும், வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டதையும், பிரதான வீதி என்பதால், பாதையில் வந்த சிறிய வாகனங்களில் சில திரும்பி ஓடிக்கொண்டிருந்தன. பெரிய வாகனங்கள் திருப்பிக்கொண்டு ஓட முடியாமல் நிறுத்தப்பட்டு அதில் வந்த பயணிகளும், சாரதிகளும் வாகனங்களை விட்டும் இறங்கி உயிர் தப்புவதற்காக ஓடிக்கொண்டிருந்தார்கள். அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களும் வீட்டை விட்டுவிட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள்.

பொலீஸ் பொறுப்பதிகாரி வெடி குண்டை செயலிழக்கச்செய்யும் வேலைகளையெல்லாம் செய்து முடித்து விட்டு, மக்களின் பீதியையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தையும் நீக்கிவிட்டு சனங்களின் நடமாட்டத்துக்கும் போக்குவரத்துக்குமாக இயல்புநிலையை ஏற்படுத்தினார். சனங்கள் அவரின் ஆற்றலையும், துணிச்சலையும் கண்டு பாராட்டினார்கள்.

தீவிரவாதிகளால் பாதுகாப்பு படையினருக்கு குறி வைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்திருந்தால், முன்னூறு அடிக்கப்பாலுள்ளவர்களும், அதிர்ச்சியால் செத்து மடிந்திருப்பார்கள். அவ்விடத்திலிருந்த பெரும் வீடுகளும், வெடித்துச் சிதறியிருக்குமளவுக்கு சக்திவாய்ந்த வெடிகுண்டை தீவிரவாதிகள் மறைத்து வைத்திருந்தாகள். ஏனோ தற்செயலாக அந்த வெடிகுண்டின் நாச வேலையிலிருந்து பொலிஸாரும் பொதுமக்களும் காப்பாற்றப்பட்டார்கள் என்று பலரும் இறைவனை பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

நபீசாவின் இளைய மாமியின் கணவர் பெரும் வழக்கறிஞர்; செல்வந்தர்; அரசியல் தொடர்பாடலுடையவர். அநியாயமான முறையில் தனது சட்ட நுணுக்கத்தையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி தனக்கு ஆதரவான பெரும் புள்ளிகளுக்கு ஆதரவாக இருப்பதோடு, பணத்தைப் பெற்றுக்கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு பாதகமாகமாகவும், பணக்கார வர்க்கத்துக்கு சாதகமாகவும் நீதிமன்றத்தில் வாதிட்டு வழக்குகளை வென்று கொடுப்பதாலும், அவரால் பாதிக்கப்பட்டவர்கள் அவரின்மீது கோபப்பட்டவர்கள் தீவிரவாதிகளாக மாறி, அவரையும் பொலீஸாரையும் குறிவைத்து கொல்வதற்காக ஒரே வெடிகுண்டால், அதாவது ஒரு கல்லால் இரு மாங்காய் ஆய்வதுபோல், வெடிகுண்டை சட்டத்தரணியின் வீட்டுக்கு முன்னால் வீதியில் வைத்திருக்கிறார்கள்.

வெடிகுண்டு வெடித்தால் பாதுகாப்பு படையினரின் வண்டி வெடித்து தூக்கி வீசப்பட்டு சட்டத்தரணியின் வீட்டில் மோதி, அந்த வீடு சின்னாபின்னமாக்கப்படுவதோடு, சட்டத்தரணியின் குடும்பமும் அழிந்து போயிருப்பார்கள். இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் வெடிகுண்டு சட்டத்தரணியின் வீட்டுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை பலரும் சந்தேகமின்றி தெரிந்து கொண்டார்கள்.

இந்த உண்மைச் சம்பவத்தை அறிந்து கொண்ட நபீசாவுக்கு, நாசமாகப்போக வேண்டிய தனது மாமியின் குடும்பம் காப்பாற்றப்பட்டுவிட்டதே என்று உள்ளூர கோபமும் வேதனையும் ஏற்பட்டது. ஆனாலும் கெட்டவனோ, எதிரியோ ஆபத்திலும் துன்பத்திலும் அனுபவப்பட்ட பிறகு தங்களை திருத்திக்கொள்ளவில்லையென்றால், அதன் பிறகு அவர்களின் நிலை நாசமாகப்போகும் என நபீசா மனதுக்குள் நினைத்தாள்.

நாட்டிலும் சமூகத்திலும் குடும்பத்திலும், குழப்பமும் குரோதமும் பயங்கரவாதமும், ஏற்படுவதற்கு ஒரே காரணம் ஈவு இரக்கம் இல்லாமையே. நபீசாவுடைய மாமியின் கணவர் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர். அவர் நபீசாவின் மாமியை மணம் முடிப்பதற்காக பேரம் பேசி வாங்கிக்கொண்ட சீதனத்தை நினைத்துப்பார்த்தால் மிகவும் வேதனைக்குரியது.

நபீசாவின் தந்தைக்கு இரண்டு சகோதரிகள். அந்தச் சகோதரிகளில், மூத்த சகோதரி காதல் திருமணம் முடித்துக்கொண்டாள். அதனால் அவளுக்கு பெற்றோர்கள் வீடு, வளவு, சீதனம் என்று எதுவுமே கொடுக்கவில்லை. இரண்டாவது மகளின் திருமணத்தை பெருமைக்காகவும், படித்த பட்டம் பெற்ற மாப்பிள்ளையை எடுத்து மணம் முடிக்க வேண்டுமென்ற காரணத்தினாலும், மாப்பிள்ளை கேட்ட சீதனம் மிகவும் அதிகம்.

என்ன சீதன விலை கொடுத்தாயினும், அந்த மாப்பிள்ளையை தங்களின் இரண்டாவது பிள்ளைக்கு மணம் முடிக்க வேண்டுமென்ற மமதையால் தங்களிடமுள்ள காணி, நிலம், வீடு, வளவு முழுவதையும் கொடுத்து மணம் முடித்து வைத்தார்கள் நபீசாவின் தந்தையின் பெற்றோர்கள்.

தனது பெற்றோர்களின் இந்தக் கோடுமையான போக்குத்தான் நபீசாவின் தந்தைக்கு மிகவும் கோபத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்தி ஆறாத புண்ணாக வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. தனது மூத்த சகோதரி குடியிருக்க ஒரு குடிசைகூட இல்லாமல் வறுமையால் வாடிக் கொண்டிருக்கும்போது, இரண்டாவது சகோதரி மூத்த சகோரியின் குடியிருப்புக்கு பக்கத்தில் அண்ணார்ந்து பார்க்கின்ற மாளிகையில் ஆனந்த வாழ்க்கை வாழ்வது நபீசாவின் தந்தைக்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

தனது பெற்றோர்களின் காணி நிலத்தில் நபீசாவின் தந்தை இரவு, பகலாக பாடுபட்டு தனது வாலிப பலத்தையெல்லாம், இரத்தமாகவும் வியர்வையாகவும் கொட்டி சீர்செய்து வளப்படுத்திய காணி நிலங்களில் ஒரு துண்டாவது தனக்கோ, தனது மூத்த சகோரிக்கோ கிடைக்காமல், அனைத்துக் காணி நிலங்களையெல்லாம் தனது இரண்டாவது சகோதரிக்கு சீதனமாக கொடுத்து கல்யாணம் செய்து வைத்தது. நபீசாவின் தந்தைக்கு மாறாத விரக்தியாகவும், வேதனையாகவும் கனத்துக் கொண்டிருந்தது.

இந்த விரக்தியும் வேதனையும்தான் நபீசாவின் தந்தையை குடிகாரனாகவும், குடும்பத்தை கட்டிக்காக்கும் குடும்பப்பற்றும் இல்லாமல் விதிபோன போக்கில் காலம் போகட்டும் என்று, எதிலும் இலட்சியம் இல்லாமல் இயங்கிக் கொண்டிருந்தார். அத்துடன் நபீசா தங்க மாலையை திருடிக்கொண்டு வந்தாள் என்று தனது தங்கை வந்து கூறியதும், தங்கைக்கு கடுமையாக அடித்து வதைத்த காரணமும், ஈவிரக்கம் இல்லாமல் தனக்கு உரிய சொத்துப்பங்கையும் சீதனமாகப்பெற்றுக்கொண்ட கோபத்தின் கொதிப்புத்தான் முக்கிய காரணமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் இந்த துன்பமான போக்கைப்புரிந்து கொண்ட நபீசாவுக்கு எப்படி தந்தையின் மன நிலயை மாற்றி குடும்பத்தை நல்வழிப்படுத்தி வாழ்வது என்ற ஏக்கமும் எண்ணமும் ஒவ்வொரு நாளும் சிந்திக்கத் தூண்டியது. மூன்று பெண் சகோதரிகளோடும், மூன்று ஆண் சகோதரர்களோடும் பிறந்த நபீசாவுக்கு தனது பெற்றோர்களுக்கு பிள்ளைகளின்மீது இருக்கும் பற்றை விட நபீசாவுக்கே தனது சகோதரர்களின் மீது அதிக பாசமும் பற்றும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 05

விடியற்காலையில் பொன்னாங்கன்னிக்கீரையோடு வந்த நபீசாவை பொலீசார் மறித்து தங்க மாலை திருடியதைக்கேட்ட கவலையோடு வீட்டுக்கு வந்தவள் பொன்னாங்கன்னிக்கீரையை மூத்தம்மா கடைக்காறியிடம் கொடுத்து காசை வாங்கிக்கொண்டு, காலைச் சாப்பாட்டுக்குரிய பணிகளையெல்லாம் முடித்துவிட்டு பாடசாலைக்குப் போனாள் நபீசா.

பாடசாலைக்கு போன நபீசாவுக்கு பாடங்களில் எவ்வித பற்றுமில்லாமல், இரவு மாமியின் வீட்டில் களவுபோன மாலையை பற்றி நினைத்தவளாக அதிகம் ஆராயத் தொடங்கினாள்.

மாமி கூறினாள்: "நபீசா இரவு சாப்பாடு பரிமாறிய குசினுக்குள் உன்னைவிட வேறு யாரும் வரவில்லை. விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் சாப்பாட்டு அறையைவிட வேறு எங்கும் வீட்டுக்குள் போகவில்லை. நீயும் நானும்தான் குசினுக்குள் சாப்பாடு எடுத்துக்கொடுத்து பரிமாறிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக எனது கழுத்தில் இருந்த மாலை கழன்று விழுந்தது. அவசரம் காரணமாக மாலையை ஒரு சொப்பின் பைக்குள் சுத்தி சுவரில் பூக்கல்லுக்குள் வைத்துவிட்டு வேலை செய்வதில் கவனம் எடுத்தேன். விருந்து முடிந்து ஆட்களெல்லாம் போன பிறகு பூக்கல்லுக்குள் வைத்த மாலையை பாாத்தேன். மாலையை காணவில்லை. குசினுக்குள் நடமாடியவள் நீ மட்டுந்தான். நீதான் என் மாலையை திருடிக்கொண்டாய்" என்பதுதான் மாமியின் உறுதியான சந்தேகம்.

நபீசா இரவு சாப்பாடு பரிமாறிக்கொண்டிருக்கும்போது, பீங்கான் கோப்பை கழுவ கிணற்றடிக்குச்சென்றபோது, பக்கத்து வீட்டு மூத்த மாமி வேலிக்கு மேலால் எட்டிப்பார்த்தவள் கேட்டாள். "மன நபீசா! நீ எப்படி இஞ்ச வந்த? ஒங்கு வாப்பா கேள்விப்பட்டா ஒன்ன அடிச்சி சாகடிச்சி போட்டிடுவான்" என்று துன்பமாகவும் மெதுவாகவும் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிக்கு மேலால் நின்று மாமி இப்படிக்கேட்டதும், வெட்கித்துப் பயந்துபோன நபீசா சொன்னாள்: "மாமி! சந்தர்ப்பம் என்னை இப்படி இங்கு வரச்செய்து விட்டது" என்று கூறிய நபீசா மாமியிடம், "மாமி சாப்பிட்டங்களா?" என்று கேட்டாள்.

நபீசாவின் கேள்விக்கு பதில் கூறாமல் மாமி நின்று கொண்டிருந்தாள். மாமி பேசாமல் நிற்பதைக்கண்ட நபீசா மீண்டும் கேட்டாள். மாமி பேசுவதாக இல்லை. மாமியின் பக்கத்தில் நின்ற கொண்டிருந்த சிறு குழந்தை ஒன்று கூறியது. "நபீசா மச்சி! உம்மா ரெண்டு நாளா சோறு ஆக்கல்ல" என்று.

இந்த வார்த்தையைக் கேட்ட நபீசா "மாமி கொஞ்சம் நில்லுங்க" என்று கூறிவிட்டு அவசரமாக குசினுக்குள் ஓடிச்சென்று இரண்டு சாப்பாட்டு பார்சல்களை எடுத்து சுவரில் பூக்கல்லுக்குள் இருந்த சொப்பின் பேக்கை எடுத்து அதற்குள் சாப்பாட்டுப் பார்சலை வைத்துக் கொண்டுபோய் மாமியிடம் கொடுத்தாள் நபீசா. சாப்பாட்டுப் பார்சலை மாமி வாங்க மறுத்தபோது, மாமியின் பிள்ளை "வாங்கும்மா" என்று கூறியதால் மாமி வாங்கிக்கொண்டாள்.

சுவரில் பூக்கல்லுக்குள் இருந்த சொப்பின் பேக்கினுள்ளே தங்க மாலை இருப்பதை அவசரம் காரணமாக நபீசா கவனிக்கவில்லை.

இப்படி நபீசா நடந்த சம்பவத்தை சிந்தித்து பார்த்த போதுதான் இளைய மாமியின் தங்க மாலை எப்படி திருட்டு போயிருக்கிறது என்பது நபீசாவுக்கு தெரிய வந்தது.

இவ்வாறு இளைய மாமியின் தங்க மாலை திருட்டுப்போனது பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும்போது மூத்தமாமியின் நிலையைப் பற்றி நபீசா சிந்தித்தாள்.

மிகவும் வறுமைப்பட்டு வாடிக்கொண்டிருக்கும் மூத்தமாமிக்கு பிள்ளைகளும் அதிகம். மூத்த மாமியின் கணவன் வெளிநாடு செல்வதற்காக கடன்பட்டுக்கொடுத்த முகவர் ஏமாற்றி விட்டான். கடன் தொல்லைகளால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மாமிக்கு மேலும் கடன் கொடுக்க யாரும் இல்லை. மாமிக்கு இருக்கும் கடன்களை அடைப்பதற்கு மாமா வெளிநாடு சென்றால்தான் முடியும். இப்படிப்பட்ட துன்பக்கொடுமையில் வாடிக் கொண்டிருக்கும் மூத்தமாமியின் நிலமையை பற்றி நபீசா சிந்தித்தாள்.

மூத்தமாமியின் துன்பத்தையும், இளைய மாமியின் செல்வச் செழிப்பையும் எடை போட்டுப் பார்த்த நபீசா இளையமாமியைப் பற்றி சிந்தித்தபோது நபீசாவின் இதயம் கனத்தது. கவலைப்பட்டு கண்ணீர் சிந்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையமாமி கொஞ்சம் அன்பு கருணை வைத்தால் போதும். மூத்தமாமியின் வறுமை தீரவும் துன்பம் குறையவும் வழி ஏற்பட்டுவிடும். இளையமாமியின் கணவர் பெரும் சட்டத்தரணி, அரசியல் தொழில்துறை முகம் தெரிந்தவர். பலருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் அரசியல் தொழில் தொடர்பாடலுடையவர். இப்படியான அந்தஸ்திலுள்ளவர் இளைய மாமியின் கணவர். ஆனால் பக்கத்து வீட்டில் பஞ்சம் பசியோடு வாழும் சகோதரியை கண்ணெடுத்தும் பார்க்காதவர்களாக இருந்தார்கள்.

இப்படிப்பட்ட தர்மசங்கடமான தார்மீக சூழ்நிலையாலும் குடும்ப உறவின் ஏற்றத்தாழ்வான தாக்கத்தாலும் நபீசா சூழ்நிலை குற்றவாளியாக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். மாமியின் மாலையை நான் உண்மையாகவே திருடவில்லை. ஆனால் அந்த திருட்டின் உண்மையான சூத்திரதாரி நான்தான் என்று எண்ணும்போது, விதியின் கைங்கரியத்தைப் பற்றியும், தனக்கு ஏற்பட்டிருக்கும் திருட்டுக் குற்றச்சாட்டின் அவமானத்தையும் எப்படி முடிவெடுப்பது என்று தெரியாமல் கலங்கினாள்.

வறுமையில் வாடும் மூத்தமாமி தங்க மாலையை வைத்துக்கொண்டு தனது வறுமைக்குப் பயன்படுத்தி சந்தோசமாக வாழ்வதற்கு வழி காட்டுவதா? அல்லது தனக்கு ஏற்பட்டிருக்கும் திருட்டு குற்றத்திலும் அவமானத்திலும் இருந்து தப்பித்துக் கொள்வதா? அல்லது அவமானத்திலும் அடுத்தவருக்கு உதவி நிற்பதா?

நபீசா பொருளாதாரம் படித்தவள். 'பணமும், தங்கமும் பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கும்போது, பொருளாதார அபிவிருத்தி ஏற்படாமல் குடும்பமும் சமூகமும் நாடும் வறுமைப்பட்டு அழிந்துபோகக் காரணமாக அமைகின்றது. தனி நபரோ, அரசாங்கமோ மூலதனத்தை முடக்கி வைக்காமல் வெளிப்படையாக வெற்றியீட்டும் தொழில்துறைக்கு பலரின் ஒத்தாசையோடு மூலதனத்தைப் பயன்படுத்தும்போது, மக்கள் முன்னேற்றம் காண்பர்' என்னும் அரசியல் பொருளாதார நவீனத்துவத்தை படித்துக்கொண்டிருப்பவள் நபீசா.

'எனவே தனக்கு என்ன அவமானமும் குற்றச்சாட்டும் ஏற்பட்டாலும், மூத்த மாமி அந்தத் தங்க மாலையை பயன்படுத்தி தனது வறுமையைப் போக்கி சந்தோசமாக வாழட்டும்' என்று நபீசா முடிவெடுத்தாள்.

ஒரு முடிவின் முடிவுக்கு விடைகாண பல வருடங்கள்; ஏன் எத்தனை தசாப்தங்கள் ஏற்படுகின்றதோ என்ற துன்பத்திலும் அச்சத்திலும் நபீசா தன்னை புரட்சி சிந்தனையாளியாக முன்னெடுத்துச்செல்ல கற்பனைப்பட்டுக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் அவள் அன்றைய பாடங்களில் கவனம் எடுக்காமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, சரித்திரப்பாடம் நடத்திக்கொண்டிருந்த வகுப்பாசிரியர் தமிழ் மாணவன் நடராசாவின் சரித்திரப்பாட அப்பியாசக் கொப்பியை பார்த்தவருக்கு நடராசாவின்மீது கோபமும், இழிவும் ஏற்பட்டு "டேய் நடராசா! இந்தக் கொப்பியை பார்த்தால் நீ படிக்கும் லட்சணம் நல்லா தெரியுதுடா" என்று கூறிய ஆசிரியர் அந்தக் கொப்பியை வெளியில் வீசி விட்டுக்கூறினார்: "நாளைக்கு நீ வகுப்புக்கு வரும்போது புதுக்கொப்பி வாங்கிக்கொண்டு வரலண்டா பாடசாலைக்கே வர வேண்டாம்" என்று அதட்டி அவமானப்படுத்தினார்.

அப்போது பாடசாலையில் இடைவேளை மணி ஒலித்தது. வகுப்பிலிருந்த மாணவர்கள் எழுந்து தேனீர்க்கடைக்கும், தங்களின் ஏனைய தேவைகளுக்கும் எழுந்து சென்றார்கள்.

நபீசா எழுந்துபோய், வகுப்பாசிரியர் வீசிய அப்பியாசக் கொப்பியை எடுத்துக் கொண்டுவந்து, நடராசாவிடம் கேட்டாள்: "நடராசா! இந்தக் கொப்பியை ஏன் சேர் தூக்கி எறிந்தார்?" என்று.

நடராசா வெட்கத்துடன் கூறினான்: "நபீசா! கொப்பி ஒன்று வேணும்தான். அம்மாகிட்ட காசி கேட்டன். அம்மாகிட்ட காசி இல்ல. என்ன செய்யிற என்று யோசித்த நான், மற்ற கொப்பிகளில் இருந்து சில தாள்களை கழட்டி எடுத்து ஒரு கொப்பியாகக்கட்டி எடுத்தேன். அந்தக்கொப்பிதான் இந்தக்கொப்பி. இது சேருக்கு பிடிக்கல்ல" என்று.

நடராசா கூறிய வறுமையை கேட்ட நபீசாவுக்கு விழி நனைந்தது. அதைக் காட்டிக்கொள்ளாமல் "நடராசா! எனக்கிட்ட ஒரு புதுக்கொப்பி இருக்கு. அதை நான் உனக்கு தருகிறேன்" என்று தன்னிடம் இருந்த புது அப்பியாசக் கொப்பியை நபீசா நடராசாவிடம் கொடுத்தாள்.

நபீசாவின் வறுமையும் துன்பமும் நடராசாவுக்கு நன்கு தெரியும். அதனால், நபீசா கொடுத்த அப்பியாசக் கொப்பியை வாங்க மறுத்தான். வாங்க மறுக்கும் நடராசாவிடம் நபீசா கூறினாள். "நடராசா! நான் இந்த அப்பியாசக் கொப்பியை உங்களுக்கு கடனாகத்தான் தருகிறேன். நீங்க பிறகு அப்பியாசக்கொப்பியை வாங்கித்தாங்க. ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யவில்லையென்றால், நம்மைப்போல் ஏழை எளிய மனிதர்கள் வாழவே முடியாது. அத்துடன் பாடசாலையில் படிக்கும் மாணவர்களாகிய நம்மிடம் உதவும் பண்பும், இனங்களுக்கிடையில் புரிந்துகொள்ளும் மனப்பாங்கும் வரவில்லையென்றால் சமூகத்திலும் நாட்டிலும் நிச்சயமாக நல்லிணக்கம் ஏற்படவே மாட்டாது" என்று.

நபீசாவின் நட்பையும் நல்ல தன்மையையும் புரிந்து கொண்ட நடராசா நபீசாவிடமிருந்து அப்பியாசக்கொப்பியை நன்றியுடன் வாங்கிக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 06

பாடசாலையை விட்டு வீட்டுக்கு வந்த நபீசாவுக்கு தனது வீட்டடியில் சனங்கள் நிற்பதைக் கண்டதால், கொஞ்சம் அச்சம் ஏற்படத்தான் செய்தது. எது எப்படி நடக்குமென்று தெரிந்து கொண்ட மனிதன் தன்னை தைரியப்படுத்துவது போல், நபீசா தன்னை தைரியப்படுத்திக்கொண்டு, என்ன நடந்தது என்று விசாரித்தாள்.

தனது தாய் அழுது அச்சப்பட்டவளாக, "பொலீஸ்காரர்கள் வந்து போனதாகவும், மாமியின் தங்க மாலை களவெடுத்தது சம்பந்தமாகவும், தகப்பன் மாமிக்கு அடித்தது சம்பந்தமாகவும் விசாரித்துவிட்டுப் போகிறார்கள். பின்னேரம் நான்கு மணிக்கு பொலீஸ் ஸ்டேசனுக்கு வாப்பாவையும், மகளையும் வரட்டாம் என்று துண்டு தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்" என்று கூறினாள் உம்மா.

தாயின் வேதனையும், தந்தையின் கோபமும், சகோதரர்களின் அச்சுறுத்தலும் குடும்பம் சுற்றத்தினரின் அனுதாபத்தோடும் கலக்கமுற்றிருக்கம் நபீசாவிடம் மூத்தமாமி இரக்கம், பயம், பீதி கலந்ததொனியில் "மன நபீசா! இந்த நிலமைக்கு நாம என்ன செய்யிற?" என்று கேட்டாள்.

மூத்தமாமி இப்படிச் சொன்னதும் நபீசா கூறினாள். "மாமி ஒங்கட நிலமய நீங்க சிந்தித்து பார்த்து, கிடைத்ததை வைத்து வாழப்பாருங்க. என்னைப்பற்றி நீங்க கவலைப்பட வேண்டிய அவசியமே உங்களுக்கு தேவையில்லை' என்று.

இப்படி நபீசா கூறியதும், மூத்தமாமி புரியாத புதையலின் புதையலுக்குள் புகுந்து தங்கப்புதையல் கண்டெடுத்தவளைப்போல், மதிமயங்கி மனத்தால் மகிழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க மாலை திருடிய சந்தேகத்தில் பொலீஸ் நபீசாவை கைது செய்ய வந்திருப்பதை அறிந்த நபீசாவின் மூத்தமாமி, இரவுச் சாப்பாட்டுப்பார்சல் வைத்துத் தந்த சொப்பின் பேக்கினுள் தங்க மாலை இருந்தது. நபீசாவுக்க அது தெரியாத சம்பவம் என்று சொல்லி, பிரச்சினை இல்லாமல் தங்கச்சியிடம் தங்க மாலையை இரகசியமாக கொடுக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் நபீசாவின் மூத்தமாமி தங்க மாலையை கொண்டு வந்திருந்தாள். ஆனால், நபீசா மூத்தமாமியிடம் கூறிய புத்திக் கூர்மையான வார்த்தையைக் கேட்டவுடன் அதிஸ்டமான அவாவுக்கு ஆட்பட்டவளாக மூத்தமாமி ஊமையாகிவிட்டாள்.

இந்தப்பிரச்சினை எதில் போய் முடியப்போகிறதோ என்ற கவலையோடும், கோபத்தோடும் குடி வெறியோடும் காணப்பட்ட நபீசாவின் தந்தை கூறினார்: "எங்கிட தாயதி சொத்தையெல்லாம் சீதனம் என்ற பெயரால் கொள்ளையடித்துக்கொண்டு, இப்போது எங்களுக்கு கள்ளன் என்ற களங்கமும் உண்டாக்க வந்து விட்டாங்களா? நான் சும்மா இருக்க மாட்டன். இனி இந்தக் குடும்பம் வாழாது. அழிச்சுப்போடுவேன். பொலீசும் சிறையும் எதற்காக வந்தது? ஆம்புளக்கிதானே" என்று.

நபீசா பெண்சிங்கம்போல் தந்தையின் வார்த்தையை தடுத்து நிறுத்தினாள். "வாப்பா! நீங்க பேசாம இரிங்க. பிரச்சினை வந்தா அதுக்கு நீதி, நியாயம், சட்டம் இருக்கி. நீங்க பொலீசையும், சிறையையும் மட்டுந்தான் பேசுறீங்க. பொலீஸ்காரர்களை நான் பாத்துக்கொள்கிறேன். படிக்கிறது அரசாங்க தொழில் மட்டும் பார்ப்பதற்கில்ல. பிரச்சினைகள் வரும்போது, படிப்பறிவை பயன்படுத்தி வாழ்க்கையில் வரும் துன்பங்களிலும் வெற்றி காணவேண்டும். மாமிர தங்க மாலையை நான் எனது கையால் எனக்கு வேண்டும் என்று களவெடுக்கவில்லை.

இப்போது நான் களவுக்குற்றத்துக்கு ஆளாகி விட்டேன். இந்த அவதூறு என்னை எனது ஆயுள் உள்ள வரையும் அவமானப்படுத்தப் போகின்றது. களவுபோன தங்க மாலை என்றோ ஒருநாள் எனது இளையமாமியின் கையில் கிடைக்கும்போது, இந்த ஊரறிய என்னை நிரபராதி என்று சொல்லும் வரையும் நான் காத்திருப்பேன்" என்று தந்தையின் ஆத்திரத்தையும், தாயின் அனுதாபத்தையும் சமாளித்தாள் நபீசா.

நபீசா இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது, பொலீஸ் வண்டி நபீசாவின் வீட்டடியில் வந்து நின்றது. பொலீஸ் வண்டியிலிருந்து பொலீஸ்காரர்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். பொலீஸ்காரர்களைக் கண்டதும் சனங்கள் அங்குமிங்குமாக கூடத்தொடங்கியதைக் கண்ட பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண மிகவும் அன்பாக சனங்களிடம் கூறினார் :"நீங்கள் யாரும் அச்சப்படாதீர்கள். உங்களிடம் நபீசாவைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நாங்கள் விசாரிக்கத்தான் வந்தோம். உங்களுக்கு நபீசாவின் உண்மையான நிலமைகள் தெரிந்தால் கூறுங்கள். நீங்கள் கூறும் உண்மைகளை வைத்து நபீசா, மாமியின் தங்க மாலையை களவெடுத்திருக்க முடியுமா? என்பதை அறியலாம் என்று துப்புத்துலக்குவதற்காகத்தான், நாங்கள் இங்கு வந்திருக்குறோம்" என்று அவருடைய பேச்சில் சந்தேகமோ, கோபமோ பொலீஸ்காரர்களுக்கு இருக்க வேண்டிய அதட்டலோ, இல்லாமல் கருணை பொங்கும் வள்ளலின் வதனம்போல் அங்கிருந்தவர்களுக்கு அவர் காட்சி தந்து கொண்டிருந்தார்.

இதைக்கேட்ட ஒரு முதியவர் கூறினார்: "ஐயா! நான் வட்ட வயல்களில் உள்ள வாய்க்கால் மடுவுகளில் மீன் பிடிக்கறவன். அப்படி மீன் பிடிக்கும்போது இந்தப்பிள்ளை வல்லாரை, பொன்னாங்கன்னிக்கீரை, பாயிழைக்கும் பன் வகைகளைப் பிடுங்குவதை கண்டிருக்கிறேன்" என்று.

அப்படி அந்த முதியவர் சொன்னதும் பொலீஸ் பொறுப்பதிகாரி கேட்டார் "இந்தப்பிள்ளை நபீசா உங்களுக்கு சொந்தமா?" என்று.

"எனக்கு எந்த வகையிலும் சொந்தமில்லை. இந்தப்பிள்ளையை நான் வட்ட வயல்களில் கீரைவகைகளையும், பாயிழைக்கும் பன்களையும் ஆயும்போது மட்டுந்தான் கண்டிருக்கின்றேன்" என்று முதியவர் அழுத்தமாகக் கூறினார்.

இப்படி ஒவ்வொருத்தரும் நபீசாவைப் பற்றி நல்லபிமானமாகத்தான் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் எவரும் நபீசாவின் சொந்தக்காரர்களா? என்பதையும், அப்படி ஒரு சொந்தக்காரர்களும் நபீசாவுக்கு நற்சான்று கூறவில்லை என்பதையும், சொந்தக்காரர்கள் நற்சான்று கூறினால் பொய் புழுகு கூறுவார்கள் என்பதற்காகவும்தான் பொலீஸ் பொறுப்பதிகாரி பொதுமக்களிடம் விசாரணை செய்தார்.

இனி யாரும் நபீசாவைப் பற்றிய தகவல்கள் தருவதற்கில்லை என்று பொலீஸ் பொறுப்பதிகாரி எண்ணும்போது, சில்லறைக்கடைக்கார மூத்தம்மா முன்வந்து பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் கூறினாள்: "ஐயா! என்ர புள்ள நபீசா இருக்காளே அவள் எப்படிப்பட்டவள் எப்படி படிச்சவளுண்டா? கடன் வாங்கி திண்டுபோட்டு கண் தூங்குறத விட பசியோடு படு, பசியோடு படுக்கிறத விட, காலக்கைய உசிப்பி உழ என்று சொல்லுற ஊக்கமுடையவள். அவள் எப்படிப்பட்ட பஞ்சம் பசியில இருந்தாலும், யாருடைய வெல்லத்தையோ, விசத்தையோ கண்டாலும், விசத்த திண்டு சாவாளே தவிர, வெல்லத்த திண்டு உசிரு வாழ மாட்டாள். அப்படிப்பட்ட கவரிமான் அவள். அப்படிபட்டவள் மாமிர தங்க மாலய களவெடுக்க நினைப்பாளா? இந்தக் கிழட்டுப்பாவிதான் ஐயா அவள்ள மாமிர ஊட்ட போகக்காரணமானவள்" என்று கடைக்காறி மூத்தம்மா தன்னைத்தானே குற்றம் சுமத்தி அழுது கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்காற மூத்தம்மா கூறியதைக்கேட்ட பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு மேற்கொண்டு எவரிடமும் எதையும் கேட்க எண்ணமில்லாதவராக, எண்ணமெல்லாம் நபீசாவைப் பற்றி அவர், வெண்பாக்கள் கூறும் வெள்ளை உள்ளமாகத் தென்பட்டார்.

நபீசாவை தனிமையில் விசாரிப்பதற்காக நபிசாவின் வளவு பெரிய வளவாக இருந்ததால், நபீசாவை அழைத்து உலாவுவதுபோல் அங்குமிங்கும் நடந்து கொண்டு விசாரித்தார். அவர் விசாரிப்பது போல் எதையெதையெல்லாம் கேட்டாலும், அவரின் கண்களில் அந்த வளவுக்குள் நடப்பட்டிருந்த பயிர் பச்சைகளில்தான் பார்வையும் கேள்விப்புலனும் இருந்தது. ஒருபுறம் வெங்காய மேடை; மற்றுமொரு புறம் மிளகாய்ச்செடி. இன்னுமொரு புறம் வெண்டி, கத்தரி, கரும்பு, பாயிழைக்கும் பன், வல்லாரை, கீரை வகைகள், கோழி வளர்க்கும் கோழிக்கூடு. இவற்றையெல்லாம் கண்ட பொலீஸ் பொறுப்பதிகாரி, "நபீசா இந்த பயிர் உற்பத்திகளெல்லாம் உன்னுடைய ஊக்கத்தின் செயல்களா? அல்லது வேறு யாருடைய செய்கைகளா?" என்று ஆச்சரியத்தால் வியந்து கேட்டார்.

பொலீஸ் அதிகாரியின் கேள்விக்கு சந்தோசப்பட்டவளாக நபீசா கூறினாள். " ஐயா! நான் ஒருத்தி மட்டும் இந்தக் குடும்பத்தில் இல்லையென்றால் எங்கிட குடும்பம் சீரழிந்து செத்துப்போயிருக்கும்" என்று தனது திறமைகளை வெளிப்படுத்திப் பேசினாள்.

அப்படி அவள் பேசி முடிப்பதற்குள், பொலீஸ் பொறுப்பதிகாரி மெல்லிய குரலில் எவருக்கும் கேட்காத வண்ணம் "குறைவாகச் சொல்லுகிறாயே" என்று, அவர் அப்படிக் கூறியதும், நபீசாவின் முகம் எல்லையில்லா ஆற்றலுக்கு அப்பால் மெய் மறந்து, கலங்கி தோற்றமளித்துக் கொண்டிருந்தது. அவளின் அபரிமிதமான செய்கைகளின் விளைவைக் கண்டுகொண்ட பொலீஸ் பொறுப்பதிகாரி மாமியின் தங்க மாலை சம்மந்தமாக பேச்சை தொடர்ந்தார்.

நபீசா, மாமியின் வீட்ட விருந்து பரிமாறப்போனதிலிருந்து தற்போது, பொலீஸ் பொறுப்பதிகாரியோடு, பேசிக்கொண்டிருப்பது வரையும் ஒரு வார்த்தை கூட மறைக்காமல் அனைத்தையும் கூறிவிட்டாள்.

நபீசா கூறும் ஒவ்வொரு வார்த்தையையும், கேட்கக்கேட்க அந்தப் பொலீஸ் பொறுப்பதிகாரி மெய்சிலிர்க்கும் பெரும் பராக்கிரமமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். இன்னும் நபீசாவுடன் பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு பேச வேண்டும் போலிருந்தது. ஆனாலும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் நபீசாவிடம் கூறினார்: "நபீசா நமக்குள் நடந்த பேச்சுக்களை நீ எவரிடமாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தாலும்கூட, உனக்கு மிகப்பெரும் ஆபத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். அத்துடன் நீ கெட்டிக்காரி. மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உன்னிடமிருந்து விழிப்புணர்வு எந்த வினாடி உன்னை விட்டு விலகுகிறதோ அந்த நேரம் உனக்கு விபத்தும் வில்லங்கமும் வஞ்சகமும் சூழ்ச்சியும் ஏற்படும்.

ஏன்? நான் உனக்கு இப்படிச் சொல்கிறேன் தெரியுமா? உனது இளைய மாமியின் கணவர் பெரும் அரசியல் செல்வாக்கும், சட்டத்துறை தெரிந்தவருமாக இருப்பதால். அவர்களின் தங்க மாலை சம்பந்தமாக உன்னை நான் அடித்து விசாரணை செய்யாமலும், உனது தகப்பன் உனது மாமிக்கு அடித்தது சம்மந்தமாக கைது செய்யாமலும் இருப்பதால், உங்களோடு கோபமும், எனது பொலீஸ் சேவையில் குறைபாடும் கொண்டு குற்றஞ்சாட்டி எனது வேலைக்கு களங்கம் ஏற்படுத்தவும் உங்களுக்கு தீங்கு செய்யவும், முயற்சிக்கலாம். கவனமாக இருக்க வேண்டும். உனக்கு ஒரு முள் குத்துமளவுக்குக்கூட யாரும் துன்பம் செய்தாலும் இந்த தொலைபேசி இலக்கத்துக்கு உடனே தகவல் கொடு" என்று கூறிவிட்டு பொலீஸ் அதிகாரி புறப்பட்டார்.

தந்தையையும் மகளையும் கைது செய்து கொண்டு போவதற்காக வந்த பொலீஸ்காரர்கள் அவர்களுக்கு அன்புத்தொண்டு செய்யும் தொண்டர்களாக மாறிய மறுவினையை கண்ட சொந்தக்காரர்களும், சுற்றுப்புறத்தாரர்களும் நபீசா என்ன மாய, மந்திர வித்தாள்மை தெரிந்தவளா? அல்லது மயக்கும் மன்மத மாயத்தேவதையா? என்று ஒருத்தருக்கொருத்தர் வியந்தவர்களாக வினவத் தொடங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 07

வாரம் ஒன்றைத் தாண்டியது. பாடசாலையில் இடைவேளை மணி ஒலித்தது. வகுப்பிலுள்ள மாணவர்கள் தங்களின் இசைவுக்குரிய நட்பானவர்களோடு, கூடிக்குலாவிக் கொண்டிருந்தார்கள். நபீசாவை நன்றியறிதலோடு நடராசா தனியாக அழைத்து மிகவும் நன்றிகூறி, தனது கையிலிருந்த புதுக்கொப்பியை கொடுத்துக் கூறினான்: "நபீசா! போன கிழமை எனக்கு உங்களின் கொப்பியை தரவில்லையென்றால், அத்துடன் நான் பாடசாலைக்கு வருவதை நிறுத்தியிருப்பேன். ஏனோ எனது எதிர்காலம் படிப்போடு சம்பந்தமான முன்னேற்றப் பாதையை நோக்கிப்போக வேண்டும் என்பதற்காக கடவுள் உங்களின் வடிவில் வந்து எனக்கு உதவி செய்திருக்கிறான். உங்களின் அந்த உதவி மனப்பான்மைக்காகவும், அந்த உதவி மனப்பான்மையை எதிர்வரும் சமூகத்துக்கு, சொல்லி வைப்பதற்காக செய்விப்பதற்காக நான் இனி பாடசாலையை கனவிலும் மறக்கமாட்டேன்" என்று.

நடராசா கூறிய அதீதமான நன்றியறிதலைக் கேட்ட நபீசா கூறினாள்: "நடராசா! நீங்க பெற்றோர்களுக்கு இரண்டு பிள்ளைகள்தான். இருந்தாலும் எங்களைப்போல் நீங்கள் வறுமைப்படவர்களில்லை. நாங்கள் ஆறு பிள்ளைகள். நான் முதன் முதலாக படிப்பதற்கு கொப்பியும் பென்சிலும் வாங்கிய கதையை கேட்டால் நீ என் மீது எவ்வளவு இரக்கப்படுவாய் தெரியுமா? எனது மூத்தம்மா சில்லறைக் கடை வைத்திருக்கிறாள். சில்லறைக் கடை என்பதால் சீனி, தேயிலைத்தூள் போன்ற பொருட்களை கொடுப்பதற்காக பேப்பர் சுறுள் தேவை.

ஒருநாள் முழுவதும் எனது மூத்தம்மாவுக்கு பேப்பர்களை வெட்டி சுருள் சுற்றிக் கொடுத்தேன். அதற்கு கூலியாக மூத்தம்மா பத்து ரூபா காசி தந்தாள். அந்தக்காசைக் கொண்டுதான் நான் முதன் முதலாக கொப்பி, பென்சில் வாங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் நடராசா பெற்றோர்களை துன்பறுத்தியோ, அல்லது பெற்றோர்களிடம் இல்லாதபோது, அதை கோபமாக வைத்து நமது படிப்பையோ, பண்பையோ வீணடித்து விடக்கூடாது. நான் அன்று நமது ஆசிரியர் உனது கொப்பியை தூக்கி வெளியில் வீசியதும், ஒன்றை மட்டுந்தான் கவனத்தில் எடுத்தேன். பாடசாலை என்பது அறிவாலயம். அந்த ஆல்யத்தில் எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டும்.

நீங்கள் ஒரு தமிழர் என்பதால் ஆசிரியருக்கு உங்களின்மீது கோபம் ஏற்படவில்லை. ஆசிரியரின் கோபங்காரணமாக நீங்க பாடசாலையை விட்டுப்போயிருந்தால், பள்ளிப்படிப்பையே விட்டிருப்பேன் என்று கூறுகிறீர்கள். அந்த நேரம் நான் எனது கொப்பியை தரவில்லையென்றால், பாடசாலைப் படிப்பை நீங்கள் நிறுத்திய பிறகு, உங்களுக்கு ஏற்படும் விசனத்துக்கும் விரக்திக்கும் விடை என்ன தெரியுமா? இனவாதம். தீவிரவாதம். இப்படிப்பட்ட கொடுமையான குரோதங்கள் பாடசாலைகளில் இருந்து நீக்கப்பட்டு படிப்பினை ஊடாக ஒவ்வொரு மாணவனும், ஆசிரியரும் அறிந்து நடக்க வேண்டும். அதுதான் கல்வியியல் அறிவாளிகளின் வெற்றிச் சிந்தனை. அதற்காகத்தான் நான் எனது கொப்பியை உங்களுக்குத் தந்து உதவினேன்.

நபீசா இப்படிக் கூறியதும் நடராசாவுக்கு நாடகம், கட்டுரைப்போட்டி, கவிதை, சரித்திரம் போன்ற விடயங்களை நபீசா நடித்துக்காட்டி நற்பாதை காட்டுவது போல் இருந்தது.

மீண்டும் இடைவேளை முடிந்து மணி ஒலித்ததும் மாணவர்கள் வகுப்பை நோக்கிப் போனார்கள். நடராசாவுக்கு தொழில்துறை சார்ந்த வினா விடைப் படிப்பை விட நபீசா கூறிய நன்னெறி, நல்வாழ்வு என்ற வினாவுக்கான விடையாகிய வார்த்தைகள் தேனாக இனித்தன.

இப்படியெல்லாம் சாந்தி சமாதானம் பாடசாலையில் படிக்கும்போதே, மனித நேயத்தையும், மதங்களுக்கிடையில் புரிந்துணர்வு என்னும் பஞ்சசீலக் கொள்கைகளை பிறவிப்பயனாகக் கொண்டு செயல்படும் நபீசாவின் மீது தனது மாமியும், மாமியின் கணவர் சட்டத்தரணி மக்கீனும் தங்களின் களவு போன மாலையைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட தகராறு காரணமாக நபிசாவின் தகப்பன் இளையமாமிக்கு அடித்ததையும், எவ்விதமான கவனமும் எடுக்காமலிருக்கும் பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் சட்டத்தரணி மக்கீன் விசனம் பேசி தனது ஆணவத்தையும், அதிகாரத்தையும், தான் யார் என்பதையும் அவர் மறைமுகமாக எடுத்துக் காட்டினார். 'இன்றே அதற்கான முடிவுகளை எடுக்கவில்லையென்றால், தனது நடவடிக்கை மிகவும் பாரதூரமானதாக இருக்கும்' என்றும் விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடி, மின்னல், பூகம்பம், விபத்து, சதி வேலை, போர், கொடும் அழிவு இவற்றால் எவ்வளவுதான் மனிதன் அழிந்தாலும், அவற்றிலிருந்து படிப்பினை கொண்ட மனிதன் மனிதனை மன்னித்து குற்றங்களை மறந்து மனிதன் வாழத்தலைப்படுவானாக இருந்தால், மனித சமூகம் எவ்வளவு மேலோங்கி வாழும். இதனை மறந்து, நான் என்னும் ஆணவத்தால் அழியும் அழிவே மனித சமுதாயத்தில் மேலோங்கி நிற்கின்றது.

ஒரு கிழமைக்கு முன்பு சட்டத்தரணி மக்கீனுடைய வீட்டடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்திருந்தால் மக்கீனும் அவருடைய குடும்பமும் இருந்த இடம் தெரியாமல் எரிந்து சாம்பலாகியிருப்பார்கள். ஆனால், அதை மறந்துவிட்டு, தனது சொந்தக் காரரால், ஏற்பட்ட சந்தேகத்தையும் கோபத்தையும் தூக்கிப்பிடித்துக்கொண்டு, அதற்கு விசாரணையும் தண்டனையும் வழங்க வேண்டுமென்று, வஞ்சகம் பேசும் சட்டத்தரணி மக்கீனை பொலிஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண பொலீஸ் நிலயத்துக்கு வருமாறு அழைத்தார்.

சட்டத்தரணி மக்கீன் பொலீஸ் நிலையத்துக்கு வந்ததும், அவரிடம் பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் பொலீஸ் நிலையத்துக்கு வந்த மொட்டைக் கடிதம் ஒன்றைக்கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

சட்டத்தரணி மக்கீன் மொட்டைக் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார். "பொலீஸ் பொறுப்பத்காரியே! நீங்களும் உங்களோடு சேர்ந்த பொலீஸ் குழுவினரும் சட்டத்தரணி மக்கீனும் மயிரிழையில் உயிர் தப்பிவிட்டீர்கள்.

நாங்கள் ஏன்? உங்களுக்கு கன்னி வெடி வைத்து அழிக்க முயற்சித்தோம் தெரியுமா? எங்களின் சொந்தக்காரர் ஒருவர் அநியாயமாக அவர் வேலை செய்யும் நிறுவனத்தில் குத்திக் கொலை செய்யப்பட்டார். குத்திக் கொலை செய்யப்பட்டவர் உயிர் பிரியும்போது, 'ஐயோ! குத்திப்போட்டான் என்று கூறிவிட்டு செத்துப்போனார். சாட்சிகளின் வாக்குப்படி சட்டத்தரணி மக்கீன் சட்ட நுணுக்கம் தெரிந்தவர் அல்லவா? அவர் அவரின் வாதத்திறனால், 'ஐயோ! என்னும் வார்த்தையை எப்படித் திசை மாற்றினார் தெரியுமா?

சட்டத்தரணி மக்கீன் 'ஐயோ' என்பதை எப்படி தனது வாக்குச் சாதுர்யத்தால். திசை திருப்பினாரென்றால் 'ஐயோ' என்பதை ஆங்கில எழுத்தாக உச்சரித்து, அதை நீதிமன்றத்தில் வியாக்கியானம் செய்து, அங்கு கடமையில் வேலைசெய்து கொண்டிருந்த 'ஐ. ஓ.' என்னும் அலுவலக பொறுப்பதிகாரி கொலை செய்ததாக வழக்கையும் குற்றத்தையும் திசை திருப்பினார். இதில் எந்தக்குற்றமும் செய்யாத எங்ளின் சொந்தக்காரரான அப்பாவி 'ஐ. ஓ.' திடீர் அதிர்ச்சியுற்று மாரடைப்பால் மரணித்துப்போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பாவத்துக்கு உடந்தையாக இருந்த சட்டத்தரணி மக்கீனையும், இதற்கு பாராமுகமாக இருந்த பொலீஸ்காரர்களையும் தீர்த்துக் கட்டுவதுதான் எங்களின் திட்டம். தப்பி விட்டீர்கள். எங்களின் குறி என்றும் உங்களை நோக்கி வெடிகுண்டு தயாராகவே இருக்கும்.

இப்படிக்கு தீவிர வாதம்!

சட்டத்தரணி மக்கீன் கடிதத்தை வாசித்து முடித்தார். பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண சட்டத்தரணி மக்கீனுடைய முகத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். சட்டத்தரணி மக்கீனுக்கு வியர்த்துக் கொட்டியது. எதுவும் பேச்சு, அசைவு, பதில், அபிப்பிராயம் எதுவுமே வராமல் இருப்பதைக் கண்ட பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண பேச ஆரம்பித்தார்.

"ஐயா! கடிதம் என்ன சொல்லுகிறது பார்த்தீர்களா? சட்டம், அதிகாரம், பண பலம், அரசியல் நமக்கு சாதகமாக இருக்கும்போது அதை நாம் நமது சுய நலத்துக்கும், நம்மவருக்கும் சாதகமாகப் பயன்படுத்தும்போதும், என்ன விளைவு ஏற்படும் என்பதைப் பார்த்தீர்களா?

இப்போது நீங்கள் கூறுவது போன்று உங்களின் கசப்பு உணர்சிக்காக சந்தேகத்தின் பேரில் ஒரு கன்னிப்பெண் அவள் பள்ளிக்கூட மாணவி, அவளை நான் கைது செய்து கொண்டு வந்து என்னால் என்ன செய்ய வேண்டும்?

உங்களின் வீட்டில் விருந்து நடந்தபோது, எத்தனையோ ஆட்கள் வந்து போயிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, அந்தப் பெண்பிள்ளை மட்டும் உங்களின் தங்க மாலையை களவெடுத்தாள் என்று எப்படிச் சொல்ல முடியும்.

அடுத்து, உங்களின் மனைவிக்கு அதாவது, காக்கா தங்கச்சிக்கு கோபம் வந்ததும் அடித்து விட்டான். தங்கைக்கு காக்கா அடித்தது குற்றம்தான். ஆனால், உங்களின் குடும்ப நிலயை வைத்துப்பார்க்கும்போது, உங்களை மாப்பிள்ளையாக எடுத்து மணம் முடிப்பதற்காக, காக்கா என்ற வகையில் நீங்கள் வாழும் மாளிகை மஞ்சத்தை கட்டுவதற்காக எத்தனை கடினமான வேலைகளைச் செய்திருப்பான். நீங்கள் செல்வச் செழிப்பாக வாழ்வதற்கு, சீதனமாக தந்த காணி பூமியில் எவ்வளவு இரத்தம் சிந்தி வேலை செய்திருப்பான். இதையெல்லாம் சிந்தித்துப் பாராமல், சூழ்நிலை காரணமாக கோபம் வந்ததும் உடன் பிறந்த தங்கைக்கு காக்கா அடித்து விட்டான். அதற்காக பொலீசைப் பயன்படுத்தி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாமா? சொல்லுங்கள்.

இப்படிப்பட்ட ஈவு இரக்கம் இல்லாத பொல்லாப் பழிகளால்தான், நாட்டில் தீவிரவாதம் பயங்கரவாதமெல்லாம் உண்டாகி அழிவுகளும் கலவரங்களும் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் என்பது சன நியாயத்துக்கும், சனங்களின் அபிமானத்துக்கும் துணை நிற்க வேண்டும். அப்படி இல்லாத சட்டம் சதிராட்டமும், சமாதானமின்மைக்கும்தான் வழி வகுக்கும். பெரும்பாலும் அரசியல் சேவை செய்வதற்காக, சட்டம் படித்தவர்கள்தான் அதிகம் அரசியல் தொண்டு செய்வதற்கு தங்களை அர்ப்பணிப்பார்கள். ஏன்? சட்டம் படித்தவர்கள் அரசியலுக்குள் தங்களை அரசியல்வாதியாக்குகின்றார்களென்றால் வர்மக்குணங்கொண்ட வல்லாண்டிகளின் கொடுமைப் போக்குகளை இல்லாது ஒழித்து, சனங்களுக்கு சாதகமுள்ள சாத்வீகங்களான செயல்களை செயல் முறையில் நாடாளுமன்றத்துக்கு கொண்டு சென்று நிறைவேற்றி, மனித சமூகத்தின் நல்வாழ்வுக்கு நன்மை செய்வதற்காகத்தான்.

சட்டம் தெரிந்த மேதைத்தனமான சட்ட அறிஞர்கள் உண்மையையும், நன்மையையும் வாதிட்டு, உயிர் போனாலும், உத்தமச் சேவை செய்வார்கள். அதனால்தான் அவர்கள் சிறந்த அரசியல்வாதி என்று போற்றப்படுகிறார்கள்.

சட்டத்தையும் சன நியாயத்தையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, சொந்த நலம், தனது இனம் என்ற கொடும் போக்குடையவர்கள் அரசியல் வாசி என்று இழி தரமாகப் பேசப்படுவார்கள்.

சட்ட அறிஞர்களாகி வழக்கறிஞர்களாக நாடாளுமன்றம் சென்ற அரசியல்வாதிகளான ஆபிரகாம் லிங்கன், அண்ணல் காந்திஜி, ஜவஹர்லால் நேருஜி, முஹம்மதலி ஜின்னா, இராஜாஜி, கார்ல் மார்க்ஸ், இங்கர்சால், டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களெல்லாம் சட்டத்தை சனங்களுக்கு நியாயப்படுத்தி நீதி வழங்க வழிவகுத்தவர்களில் சிலர். ஆனால், நம்மவர்கள் சட்டத்தை தவறான வழியில் பயன்படுத்தி பணம் உழைத்து, நாடாளுமன்ற கட்டிடத்தைவிட உயரமான மாளிகை கட்டி பெருமைப்பட்டு, படாடோபமாக வாழ்கிறார்கள். இது சத்தியத்துக்கும் சாந்தி சமாதானத்துக்கும் நாட்டையும் நம்மக்களையும் நல்வழி நடத்துமா?" என்று பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண உறுத்தும் வார்த்தையாகவும், உண்மையை உணர்த்தும் வார்த்தையாகவும் கூறிவிட்டு பொலீஸ் சார்ஜனை அழைத்து கோபமாகக் கூறினார்: "நீங்க போய் நபீசாவையும், அவளின் தந்தையையும் அடித்து இழுத்துக்கொண்டு வாங்க" என்று.

பொலீஸ் பொறுப்பதிகாரி இப்படி ஆத்திரமாகக் கூறியதும், சட்டத்தரணி மக்கீன் தனது முறைப்பாட்டை நீக்கிவிட்டு பொலீஸ் நிலையத்தை விட்டும் வெளியேறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 08

நாளைக்கு உயர்தர ஏ.எல். பரீட்சை நடக்கப் போகின்றது. தான் இவ்வளவு காலமும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் படித்த படிப்பின்முடிவையும் எதிர்காலத்தில், தனது வாழ்வின் திருப்பு முனையையும், சிந்தித்த நபிசா வீட்டுத்தோட்டத்து வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு உம்மாவுக்கு அடுப்பங்கரைக் கடமைகளைச் செய்து கொடுத்துவிட்டு, நாளை நடக்கப் போகும் பரீட்சைக்கான பாடங்களில் கவனம் செலுத்த கொப்பி புத்தகங்களை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது தூங்கிக்கொண்டிருந்த கடைசித்தம்பி படுக்கையிலிருந்து கண் விழித்து சத்தம் போட்டு அழத்தொடங்கினான். படிப்பில் ஒன்றிப்போயிருந்த நபிசாவுக்கு தம்பியின் அழுகை இடைஞ்சலை ஏற்படுத்தவில்லை. அடுப்பங்கரையில் வேலை செய்து கொண்டிருந்த உம்மாவுக்கு பிள்ளையின் சத்தம் கேட்டதும் "டியேய் நபீசா! பிள்ள கொழர்ர உனக்கு கேக்கல்லயாடி?" என்று ஆத்திரமாகவும் நச்சரிப்பாகவும் கேட்டாள்.

அன்னையின் ஆத்திரமான வார்த்தையைக் கேட்ட நபீசா எழுந்துபோய் தம்பியை இடப்பக்கத்தோளில் போட்டுத் தாலாட்டுப்பாடித் தூங்கவைத்துக்கொண்டு வலக்கையில் அப்பியாசக்கொப்பியை விரித்துவைத்துப் படித்துக்கொண்டு, வளவுக்குள் நடமாடித்திரிந்தாள். தோளில் தூக்கி வைத்துக் கொண்ட தம்பி தூங்கிக்கொண்டிருந்தான். நபிசாவின் கையிலிருந்த அப்பியாசக் கொப்பியிலில் இருந்த பேனா மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்கள் கண்ணீர்சிந்தி கன்னத்தால் வழிவதுபோல், மை எழுத்துக்கள் கொப்பியிலிருந்து நீலத்துளிகளாக கரைந்து ஓடின.

படிப்பதில் தனது பக்தியெல்லாம் ஒருமித்த சக்தியாக மாற்றிக்கொண்ட நபிசாவுக்கு தனது தோளில் தூங்கும் தம்பியை மறந்து தான் விரித்துப் படித்துக் கொண்டிருக்கும் கொப்பியில் சிறு தூறல் மழை பொழிந்து மழையால் கொப்பியில் எழுதப்பட்டிருந்த மை எழுத்துக்கள் கரைந்து ஓடுவதை அவளால் அவதானிக்க முடியாமல் படிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்தாள்.

அடுப்படியில் ஆகாரம் சமைத்துக்கொண்டிருந்த தாய், “மனேய் நபிசா! மழை பெய்யிது. ஓடியாடி கொத்திப் போட்ட கொள்ளி, புளிஞ்சி போட்ட உடுப்பெல்லாம் நலயிது” என்று அவசர அழைப்புக் கொடுத்தபோதுதான் நபீசா மழை பெய்கிறது என்பதை அறிந்தாள்.

தாயின் அழைப்புக்கு செவி சாய்த்த நபீசா தோளில் தூங்கும் குழந்தையைக் கொண்டு படுக்கவைக்கும்போது, குழந்தை மழையால் நனைந்திருப்பதைக் கண்ட தாய் கோபத்துடன் “டியேய். இந்தப்பிள்ளை மழயில் நலைந்த உனக்குத் தெரியாதடி. பிள்ளைக்கு காச்சல், தடுமல் வந்தா ஆர்ரி ஆஸ்பத்திரிக்கி கொண்டு போற? மழ பேஞ்சி பிள்ள நலஞ்சத அறியாத உனக்கெல்லாம் படிப்பும் பாடமும் வருமாடி. இந்ததக் கொப்பி புத்தகத்துக்கெல்லாம் நெருப்பு வெச்சிக் காட்டுறன் பார்ரி” என்று கோபத்துடன் தாய் ஏசிப்பேசி தனது விசனத்தை தீர்த்துக் கொண்டிருந்தாள்.

தாயின் கோபத்தைப்புரிந்து கொணட நபீசா தாயை சமாதானம் செய்வற்காக உறுசுறுப்புடன் மழையில் நலைந்து கொண்டு, வெயிலில் காயப்போட்டவெற்றையெல்லாம் நனையாமல் பாதுகாத்தாள்.

தாயின் எடுபிடி நச்சரிப்பு தூற்றல்களாலும், சகோதரர்களின்மீது கொண்ட பாசத்தால் விட்டுக் கொடுக்கும் தியாகத்தாலும், தந்தையின் கோப தாபங்களாலும் துன்பங்களை மறந்தவளாகவும் எதிர்காலத்தில் சுகமாக வாழலாம் என்ற நம்பிக்கையாலும் இன்றுள்ள கசப்புகளையும் கவலைகளையும் மறந்தவளாக மனத்திடம் கொண்டிருந்தாள் நபீசா.

வயல் வேலைக்குப்போய் வந்த நபீசாவின் தந்தை நபிசாவிடம் கூறினார். ‘‘மகள் நம்முடைய வயலுக்க கொஞ்சம் புல்லு முளைச்சிரிக்கி. நாளக்கி காலையில நாம ரெண்டு பேரும் போய் புல்ல புடுங்கிப் போட்டு வருவோமா?” என்று இரக்கம் கலந்த தொனியில் கேட்டார்.

தந்தை கூறிய இரக்கத்தனமான வார்த்தையை கேட்ட நபீசா, “வாப்பா! நாளக்கி காலையில எனக்கு பரீட்சை நடக்க இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில பாடசாலைக்குப்போய் வந்து பின்னேரம் போவோம்" என்று கூறினாள்.

இதைக்கேட்ட நபீசாவின் உம்மா, "நாளக்குப் பின்னேரம் நெல்லு குத்துற வேலையெல்லாம் கெடக்கு. நீ எங்கேயும் போகக்கூடாது" என்று கடிந்து கூறினாள்.

தாயும் தந்தையும் ஒருத்தருக்கொருத்தர் போட்டி போட்டு எதிர்வாதம் செய்யும் எரிச்சலான வார்த்தைகளால் பழக்கப்பட்ட நபீசாவுக்கு எதைச்செய்ய வேண்டும்? எதைச்செய்யக் கூடாது? என்பதையெல்லாம் நன்கு புரிந்து செயல் படுகின்றவள். பெற்றவர்களால் பழக்கப்படும் பிள்ளைகள்தான் உலகில் அதிகம். ஆனால் பிள்ளைகளால் பழக்கப்பட்டு படிப்பினை பெறும் பெற்றோர்கள் உலகில் மிக மிகக்குறைவு. நபீசா பெற்றோர்களைப் பழக்கப்படுத்தும் பிள்ளையாக; 'ஆகும் பிள்ளை ஒன்று போதும்' என்பது போன்ற பிள்ளையாகப் பிறவி எடுத்தவள்.

நாளைக்காலையில் நடக்கவிருக்கும் பரீட்சைப்பாடங்களில் முழுக்கவனத்தையும் செலுத்திப் படித்துக் கொண்டிருந்தாள் நபிசா. இரவுச்சாப்பாட்டை சாப்பிடுமாறு தாய் எவ்வளவு வற்புறுத்தியும் அவள் சாப்பிடவில்லை. சாப்பிட்டால் சாப்பாட்டு மயக்கம் நித்திரை கொள்ளச்செய்துவிடும் என்ற நினைப்பால் அவள் சாப்பிடவில்லை. நள்ளிரவு இரண்டு மணியைத்தாண்டி விட்டது. படிப்பால் ஏற்பட்ட களைப்பால் தன்னையறிாமல் தூங்கி விட்டாள்.

விடியற்காலையில் கண் விழித்ததும் இரவு சாப்பிடாமல் தூங்கிய அசதியும், படிப்பால் ஏற்பட்ட களைப்பும் ஒருக்கணம் எழும்ப முடியாமல் படுக்கையில் சோர்ந்து கிடந்தாள். எண்ணத்தின் விந்தையின் செயற்பாடு எஃகு உருக்கையும் உருக்கி ஓடச் செய்யும் என்னும் விந்தைகள் நிறைந்த பாடங்களையும், அனுபவங்களையும் அறிந்த நபீசா தனக்கு ஏற்பட்டிருக்கும் சோர்வுகளையெல்லாம் நீக்கிவிட்டு அடுப்பங்கரை சென்று தேனீர் வைத்து தானும் குடித்து விட்டு, தந்தையை எழுப்பி தந்தைக்கும் கொடுத்து வயலுக்கு அனுப்பிவிட்டு, பத்து மணிக்கு பரீட்சை ஆரம்பிக்கவிருப்பதால் அன்றைக்கு நடக்கவிருக்கும் பாடங்களைப் படிக்கத் தொடங்கினாள்.

நேரம் ஒன்பது முப்பதைத் தாண்டிக்கொண்டிருந்ததும் பாடங்களில் இருந்த கவனத்தை விலக்கிக்கொண்டு உடைகளை மாற்றி அவசர அவசரமாக பாடசாலையை நோக்கி விரைந்து கொண்டிருநதாள். போகும்வழியில் பள்ளித் தோழி நலவழியும் வந்து கொண்டிருந்தாள். நபிசாவைக்கண்ட நலவிழி கேட்டாள்: "நபிசா இரவு நல்லாப் படித்தயா?" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரவு படித்துக்கொண்டிருந்த எனக்கு படிப்புச் சோர்வே படுக்கையில் மூழ்கடித்து விட்டது" என்று விகடம் பேசுவதுபோல் நபீசா சொல்லிச்சிரித்தாள்.

"நபீசா இரவு நானும் கொஞ்சம் படித்ததான். ஆனால், எனது அப்பா, அம்மா எனது படிப்புக்கு ஊக்கம் தாறல்ல. இரவு எங்கிட மாமிர வீட்ட போகவேணுமெண்டு என்னைக் கூட்டிக்கொண்டு போயிட்டாங்க. நானும் மறுக்காமல் போயிட்டன். என்ன இருந்தாலும் பெற்றோர்கள் பிள்ளைகளைப் புரிந்து நடக்கணும். நான் படித்து பாஸ் பாண்ணுவதை எனது பெற்றோர்கள் அதிகம் விரும்புகிறார்களில்லை. அதனால் நான் பாஸ் பண்ணுற நம்பிக்கை இல்லை. நீ கட்டாயமாக பாஸ் பண்ணுவாய் நபீசா" என்று கவலையும் வெறுப்புமாக நபீசாவை ஊக்கப்படுத்துவதுபோல் நலவிழி கூறினாள்.

நலவிழி சொன்னதைக்கேட்ட நபீசா தனக்குள் இருக்கும் பாரங்களையும் துயரங்களையும் வெளிப்படுத்த விரும்பவில்லை. நலவிழியையும் தன்னையும் வைத்து நபீசா எடைபோட்டாள். தனது தகப்பன் கூலித்தொழிலாளி. நலவிழியின் தகப்பனிடம் எத்தனையோ கூலித்தொழிலாளிகள் வேலைசெய்து சம்பளம் வழங்கும் செல்வந்தர். நபீசாவுக்கோ ஆறு சகோதரர்கள்.நலவழிக்கோ ஒரு அண்ணன் மட்டும்தான். நலவிழியின் பெற்றோர்களின் எண்ணமெல்லாம் நலவிழிக்கு உயர்ந்த இடத்திலுள்ன டாக்டர் இன்சீனீயர் மாப்பிள்ளை ஒருத்தனை மணம்முடிக்க வேண்டுமென்ற எண்ணம் மட்டுந்தான் இருந்ததேயன்றி படித்து பட்டம் பெற வேண்டும். தொழில் செய்யவேண்டும் என்பதல்ல.

நபீசாவின் படிப்பும் பக்தியும் உற்சாகமும் படிக்கவேண்டும். பட்டம்பெற பெற வேண்டும். தொழில் செய்யவேண்டும். சகோதரர்களை நல்ல முறையில் வாழ்விக்க வேண்டும். இப்படிப்பட்ட இருவேறு காரணங்களால் களைத்துப்போய் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் நபீசாவுக்கு நலவிழியின் கவலை ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

தேடும் தாகம் இருந்தால் அடையும் பொருள் கிடைத்தேயாகும். நபீசா பரீட்சை எழுதிவிட்டு சந்தோசமாகப் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக்கொண்டு, தனது வீட்டுத்தோட்ட வருவாய்களைப் பெற்றுக கொண்டு, மேலும் ஒரு வருவாய்க்கான செய்கையை ஆரம்பித்தாள். புலமைப் பரீட்சை படிக்கின்ற ஐந்தாம் ஆண்டுக்கான மாணவப் பிள்ளைகளுக்கு டியுசன் கொடுத்து படிப்பித்துக் கொண்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் பிள்ளைகளுக்கு டியுசன் பாடங்களை முடித்து விட்டு, பதினொரு மணியளவில் பசியெடுத்தது. தேயிலை வைத்துக் குடிக்கலாம் என்று நினைத்துக்கொண்டு பாட்டியின் சில்லறைக் கடைக்குப் போனாள் நபீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து உறவுக்காரியான பரீதா சின்னம்மாவின் வீட்டுக் கடப்படியில் கார், மோட்டார் சைக்கில்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இன்னும் பல வாகனங்கள் வந்து கொண்டிருந்தன. நபீசா பாட்டியிடம் கேட்டாள்: "என்ன மூத்தம்மா வாகனங்களெல்லாம் வந்து கிடக்கு" என்று

"பரீதா சின்னம்மாட மகனுக்கு இண்டக்கி பிறந்த நாளாம். அதுக்கு சந்தோசமா விருந்து கொடுக்காங்களாம்" என்று கூறிய பாட்டி ஒரு பெருமூச்சை விட்டுக் கூறினாள்: "நமக்கெல்லாம் சொல்லாம எங்கெங்கயெல்லாம் இருந்த பணக்காறாக்களுக்கெல்லாம் செல்லி கூப்பிட்டிருக்காள். நாம சொந்தக்காற ஆக்கள். அல்லயகாற ஆக்கள். ஒருத்தருக்கும் அவள் சொல்லல்ல மன" என்று பாட்டி மனவருத்தத்துடன் கூறினாள்.

பாட்டி கூறிய மன வருத்தமான வார்த்தையைக் கேட்ட நபீசா மனதுக்குள் நினைத்தாள்: 'அதிகமான மனித சாதிகளின் போக்கே இப்படித்தான் இருக்கின்றது. ஏழையாக இருந்து பணக்காரர்களானவர்களின் போக்கும் இப்படித்தான இருக்குறது. நல்ல தன்மையுள்ள தார்மீகமான ஏழ்மையான போக்குடையவர்களைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது' என்று நினைத்துக்கொண்டவள் என்ன இருந்தாலும் பக்கத்து வீட்டுக்காற ஏழை, எளிய சொந்தக்காரர்களை அழையாத விருந்தோம்பலும் ஒரு விருந்தோம்பலா மூத்தம்மா?' என்று கூறிவிட்டு தேயிலையும் வட்டறையும் வாங்கிக்கொண்டு போனாள் நபீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 09

தேடிவரும் காலம் வந்தால் செல்வமெல்லாம் ஓடி வரும் என்பது போல் நபீசாவின் வளவுக்குள் இப்போது மா, பலா, வாழை, கொய்யா, பப்பாசி இன்னும் பல பயிர் வகைகளும் காய்துக் கனிந்து பச்சைப் பசேலென காட்சி தந்து கொண்டிருந்தன. இந்தச் சந்தோசமான வேளையில், தான் எழுதிய ஏ.எல் பரீட்சை முடிவு வெளி வந்துகொண்டிருந்தது. நபீசா வர்த்தகப்பிரிவில் முதல் சித்தி பெற்றிருந்தாள். அவளைப்போல் இன்னும் பலரும் சாதாரணமாக சித்தியடைந்திருந்தார்கள். நலவிழியும் பல்கலைகழகம் போகுமளவுக்கு சித்தி பெற்றிருந்தாள். நடராசா மருத்துவத்துறையில் சித்தியடைந்திருந்தான்.

பரீட்சை முடிவுகள் வெளிவந்ததும் நபீசாவின் வீடு ஒரு பெரும் கலைக் கூடம்போல் சித்தி பெற்ற மாணவர்களெல்லாம் ஒன்றுகூடினார்கள். அதற்கு உண்மைக் காரணமும் இருந்தது. தனது வகுப்பு மாணவர்கள் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், கிறித்தவர் ஆண், பெண் எவராக இருந்தாலும் நபீசாவின் அறிவுரையும் உற்சாகப்படுத்தலும் உதவியும் தொடர்புபட்டுக்கொண்டிருந்தது.

மருத்துவத்துறையில் சித்தியடைந்த நடராசா நபிசாவிடம் நன்றிக் கடன் கூறுவதேற்கு வார்த்தையில்லாமல் மௌனமாக ஆனந்தக் கண்ணீரை மறைத்துக்கொண்டு மனம் மகிழ்ந்து காணப்பட்டான்

பெற்றவர்களின் மிகப் பெரும் பேறு; பிள்ளைகள் கல்வி முன்னேற்றங்கண்டு பந்தியில் முந்தியிருக்கும் பெறுபேற்றை விட வேறு எந்தப் பெறுபேறும் உலகத்தில் கிடையாது. என்பதற்கமைவாக நபீசாவின் கல்வி முன்னேற்றமும் அவளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் பெருமையும் புகழும் அவளின் குடிகாரத் தந்தையை குணவடிவான பண்பாளனாக மாற்றியது. கோபமும் குத்தல் வார்த்தையுங்கொண்ட தாயை நிதானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஞ்சை நிறைந்த பொறுமைக்குணம் கொண்ட அன்புள்ள பொறுமைசாலியாக மாற்றியது. படிக்க விருப்பமில்லாத் உற்சாகம், சுறுசுறுப்பு இல்லாத சகோதரர்களும் நபீசா லாத்தாவின் முன்னேற்றம் படிப்பினையாக மாறி தாங்களும் முன்னேற வேண்டும் என்ற வைராக்கியம் வெகுண்டெழுந்தது.

துன்பம் வந்தால் துன்பத்தை துணை சேர்த்துக் கொண்டு வரும். இன்பம் வந்தால் இன்பத்தை இன்பம் இணை சேர்த்துக்கொண்டு வரும். இது உலகின் நியதி.

நபிசாவின் மூத்த மாமியின் கணவர் வெளிநாட்டுக்குப்போய் உழைத்து அவர்களின் குடும்பம் வசதி வாய்ப்பைப்பெற்று விட்டார்கள். அத்துடன் மூத்தமாமியின் மூத்த மகன் படித்துப்பட்டம் பெற்று பெரிய உத்தியோகம் பார்க்கின்றான். இந்த நிலையில் மூத்த மாமி நபீசாவின்மீது கொண்ட நன்றியறிதலும், அவர்களை இந்த நிலைமைக்கு ஆக்குவித்த அன்புச்செயலுக்கும், நபீசாவுக்கு என்ன கைமாறு செய்தாலும் ஈடாகாது என்பதால், மாளிகை போன்ற வீடு கட்டி தனது மகனை நபீசாவுக்கு திருமணம் முடித்து வைக்க வேண்டும் என்ற வேணவா மாமியையும், மாமியின் கணவரையும் ஆசை கொண்டு ஆர்ப்பரித்து நின்றது. நபிசாவின் பெற்றோர்களுக்கும் அது பெரும் ஆனந்தத்தை தந்து கொண்டிருந்து.

ஒரு பெண்ணுக்கு மணம் முடிப்பதென்றால், பெண்ணின் பெற்றோர்கள் பெரும் வீடு கட்டி ஆதனம், சீதனம் என்றெல்லாம் சீர்வரிசை கொடுக்க வேண்டிய கொடும் சீதனக் கொடுமை தாண்டவமாடும் இந்தச் சமூகத்தில் தங்களுக்கு இப்படியொரு அதிர்ஷ்டம் வந்திருப்பதை எண்ணி நபீசாவின் பெற்றோர்கள் நாப்புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

ஆனால், இந்தத் திருமணத்தை நபீசா வெறுத்தாள். நபீசாவின் வெறுப்பைக் கண்ட பெற்றோர்கள் கவலைப்பட்டார்கள். கண்ணீர் சிந்தினார்கள் காரணம் கேட்டார்கள்.

அவளால் காரணம் கூற முடியவில்லை. அவள் தனது கையால் களவாக.... இல்லை இல்லை. தெரியாமல் தவறுதலாக, தனது இளையமாமியின் மாலையை எடுத்து, தனது மூத்தமாமியிடம கொடுத்தாள். அந்த மாலை திருட்டு மூலதனத்தால் முன்னேற்றம் கண்ட செல்வ வாழ்வில் பிணைந்து வாழ நபீசாவுக்கு வெட்கமாக, அவமானமாக, அவதூறாகக் காணப்பட்டது.

இதுதான் நபீசாவின் மிகப்பெரும் முக்கிய காரணம். ஆனால், இன்னும் தொடர் கதையாக பல காரணங்களும் இருந்தன. தான் படிக்க வேண்டியவள்; திருமணம் முடித்தால், உத்தியோகம் பார்க்கும் செல்வங்கொண்ட கணவனின் செயற்பாட்டுக்கு அடங்கிப்போக வேண்டும். கணவனின் சொத்துச் செல்வத்தில் பெற்றோர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களுக்கும் வழங்க முடியாது. குடும்பத்துக்குள் கல்யாணம் முடித்தால் குடும்ப உறவுகள் விருத்தியடையாது. அத்துடன் குடும்பத்துக்குள் கல்யாணம் முடித்தால் பிறக்கும் பிள்ளைகள் நோயாளிகளாகவும், மந்த குணம் உடையவர்களாகவும் பிறக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் இருக்கின்றன.

இவற்றையெல்லாம் வெளியில் சொல்லி காரணம் காட்டினாலும், இன்னுமொரு காரணம் அதனை வெளியில் சொல்ல முடியாதவளாக வெட்கப்பட்டு, வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள் நபீசா.

எதிர்பாராமல் தனக்கு வந்த மொட்டைக் கடிதம் ஒன்று பேரிடியாக பெரும் ஊமைக் குமுறலாக அந்தக்கடிதம் கடிய, இதமாக கடிந்து துன்புறுத்தியது; இன்புறுத்தியது.

நல்லெழிலால் நபீசாவுக்கு.....

நற் செய்தி ஒன்று!

நான் உங்களை விரும்புகிறேன். நான் யார்? என்பது உங்களுக்கு மிக விரைவில் தெரிய வரும். என்னை நீங்கள் அறியவேண்டுமாக இருந்தால், நான் ஒரு விடுகதையை சொல்லுகிறேன். அந்த விடுகதையை அறிவீர்களென்றால், என்னை நீங்கள் தெரிந்து கொள்ளுவீர்கள்.

விடுகதை இதுதான். உங்களின் பெயரை எழுதி தொங்கலில் இருந்து வாசித்தால் எனது பெயரும், எனது பெயரை எழுதி தொங்கலில் இருந்து வாசித்தால் உங்களின் பெயரும், ஓரளவு ஒலி நயம் வரும். இதுதான் விடுகதை. எனவே, உங்களுக்கும் எனக்கும் அந்த அளவுக்கு பெயர் ஒற்றுமையும் உடல், உள ஒற்றுமையும் உண்டு. ஆனால், இப்போது என்னை யார் என்று நான் அறிமுகம் செய்தால், என்னை நீங்கள் நம்பமாட்டீர்கள். ஏன் தெரியுமா? அதற்கு நான் ஒரு உதாரணம் கூறலாம் என எண்ணுறேன்.

சலீம்: "அனார்கலி நான் அக்பர் சக்கரவத்தியின் மகன் என்று கூறினால், என் அன்பை நீ ஏற்றுக்கொண்டிருக்க மாட்டாய். அதனால்தான் நான் அடிமை போர் வீரன் என்று, பொய் சொன்னேன். அது வஞ்சகப் பொய்யல்ல. என் ஏக்கப்பெரு மூச்சின் காதலால் உருகி வந்த வெள்ளைப்பொய்யது அனார்கலி."

அனார்கலி: "சலீம் நீங்கள் பொய் சொல்லவில்லை. என்னைப்போன்ற அபலைகளான அனார்கலிகளுக்கு வீசிய மோக வலையது. அனார்கலியும் ஒரு மனிதப்பிறவி. அக்பரின மகனும் ஒரு மனிதப்பிறவி. காதல் காவியமாக வருவது மனிதர்களுக்குத்தான். சலீம் நீங்கள் அன்றே அக்பரின் மகன்; ஆளும் அரசின் இளவரசன் என்று அறிமுகம் செய்திருந்தால், என் நிலையறிந்து, உங்களின் அந்தப்புர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பவல்லி என்று என்னை எண்ணி என் மனக்கோட்டையில் சிறு வீடு அமைத்திருப்பேன். ஆனால், நீங்களோ சாதாரண போர் வீரன் என்று உங்களைக் காட்டியதால், கணவனும் மனைவியும் என்ற பேராசைப்பெருங்கோட்டை கட்டினேன். போங்கள்; கணவன் என்ற பெருமைப்பேற்றை இழந்த அபலை நான்".

சலீம்: "அன்பே அனார்கலி இப்போதுகூட என்ன நடந்து விட்டது. நீ எனது மனைவிதான். முகலாயப்பேரரசின் பட்டத்து ராணிதான் நீ".

அனார்கலி: "ஆம் சலீம். அப்படிக் கூறுவதில்தான் அந்தப்பெருமை இருக்கிறது. ஆனால், அதனை அறிந்தால் அக்பர் என்னை உயிருடன் சமாதி கட்டிவிடுவார்".

'நபீசா மேற்குறிப்பட்ட சலீம், அனார்கலி காதல் வாழ்வுபோல் எனது காதலும் கானலாகி விடக்கூடாது. ஏன் தெரியுமா? நான் யார் என்று உனக்கு தெரிந்து விட்டால், நிச்சயமாக நீ என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாய். குடும்பக் கோத்திரமும், பண பலமும், பட்டம் பதவிகளும், நமக்குள் நாசத்தை ஏற்படுத்தக் கூடாது. காலம் வரும்போது, நான் யார் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்; ஆச்சரியப்படுவீர்கள்.

இன்னும் ஒன்றை உங்களிடம் மிக உறுதியாகத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இதையறிந்து நீங்கள் நடப்பீரகள் என்று நம்புகிறேன்.

ஒரு இரகசியமானது ஆகக்குறைந்தது இரண்டு பேருக்கு மட்டுந்தான் தெரிய வேண்டும். மூன்றாம் நபருக்குத் தெரிந்தால், அது பரம இரகசியமாக மாறி ஆபத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்தி விடும். எனவே, உனக்கும் இன்னும் ஒருவருக்குமிடையில் மிகப்பெரும் இரகசியம் ஒன்று இருக்கிறது. அது எனக்குத்தெரியும். ஆகவே, அந்த இரகசியம் மூன்றாம் நபரான எனக்குத் தெரிந்திருப்பதால், என்றும் உங்களுக்கு ஆபத்தும், அவமானமும் காத்திருக்கின்றது. எனவே, இரண்டு பேருக்கு மட்டும் தெரிந்திருப்பதுதான் உங்களுக்கு நன்மையும் மகிழ்ச்சியுமாக இருக்கும். ஆகவே, நீங்கள் செய்ய வேண்டிய, செயற்பட வேண்டிய தார்மீகச்செயல்பாடு என்ன தெரியுமா? நீயும் நானும் ஒருவரானால், அதாவது என்னை நீங்கள் விரும்பினால், நாம் காதல் மணம் புரிந்து கொண்டால், ஒருவராவோம். இப்போது சிந்தித்துப் பாருங்கள். மூன்று பேருக்கு தெரிந்த இரகசியமானது இரண்டு பேருக்கு மட்டுந்தான் தெரிந்திருக்கும். எனவே, நபீசா நான் உங்களை உளப்பூர்வமாக விரும்புகிறேன்; காதலிக்கிறேன். ஆகவே, நீங்கள் யாரையும் காதலிக்கவோ கல்யாணம் கட்டவோ விரும்பாதீர்கள்.

இப்படிக்கு தங்களை

இதயபூர்வமாக விரும்பும்

காதலன் சபீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வந்த இந்தக்காதல் காவியமான, மொட்டைக் கடிதத்தை வைத்துக்கொண்டு, கலக்கமுற்ற நபீசா பல வேதனையான தீண்டல்களால் தூண்டப்பட்டாள். திருட்டுப்போன இளையமாமியின் மாலை சம்பந்மாக மூத்தமாமிக்கும், தனக்குந்தான் தெரியும். வேறுயாருக்கும் தெரியாது. மூத்தமாமி அந்த மாலையைவிட விலை கூடிய பெரிய மாலை வாங்கிக்கொடுத்து, நடந்த உண்மைகளைக் கூறி தனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகமான அவமானத்தையும், அவதூறையும் இளையமாமியிடம் தெரிவிக்கப் போகிறேன் என்று கூறிவிட்டாள். அப்படி இருக்கும்போது நமக்கும் இன்னொருத்தருக்கும் இருக்கும் ஆபத்தான இரகசியம் என்ன? அது மூன்றாம் நபருக்கு எப்படித் தெரிந்தது? அந்த மூன்றாம் நபரான இந்தக் காதல் கடிதம் எழுதிய நபர் யார்? என்றெல்லாம் நபீசா குழம்பிக்கொண்டிருக்கும்போது செல்போன் அலறியது.

செல்போனைக் கையிலெடுத்த நபீசா ''ஹலோ! யார் பேசுறீங்க" என்று டேட்டாள்.

"நான் மச்சான் மத்தீன் பேசுறன்"

"ஆ`; ... மச்சான். அஸ்ஸலாமு அலைக்கும்" என்று அன்புடன் கூறினாள் நபீசா.

நபீசாவின் அன்பான ஸலாத்தைக்கேட்ட மூத்தமாமியின் மகன் மத்தீன் "வஅலைக்கு முஸ்ஸலாம்" என்று கூறிவிட்டு "நபீசா நான் உங்களுக்கிட்ட இண்டக்கி ஒரு உண்மையான முடிவு எடுக்கத்தான் கோள் எடுத்தேன். நீங்க ஒங்குட உள்ளத்தில இருக்கிற உண்மையை என்னிடம் ஒழிவு மறைவு இன்றிக் கூற வேண்டும். ஏன் நபீசா நீங்க என்னை விரும்பவில்லை?".

மூத்தமாமியின் மகன் மத்தீன் இப்படிச் செல்போனில் கேட்டதும், நபீசா சொல்வதறியாது பேசாமல் இருந்தாள்.

நபிசாவின் மௌனத்தை உணர்ந்துகொண்ட மச்சான் மத்தீன் கேட்டான்: "என்ன நபீசா நான் கேக்குறதுக்கு பதில் இல்லையா?" என்று.

"மச்சான். நான் உங்களுக்கிட்ட எப்படிச்சொல்லுற என்றுதான் யோசிக்கன். மச்சான், நீங்க நல்லாப் படிச்சிருக்கீங்க. குடும்பத்துக்குள்ள கல்யாண உறவு வைத்தால் குடும்ப உறவுகள் விருத்தியடையாது. அத்துடன் குடும்பத்துக்குள் கல்யாணம் கட்டிப்பிறக்கும் பிள்ளை குட்டிகள் மந்த குணமான பலகீனமானவர்களாகப் பிறப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று நபீசா கேட்டாள்.

"தெரியும் நபீசா. அப்படி என்றால் மந்த குணமும், பலகீனமாகவும் பிறக்கின்ற பிள்ளைகளெல்லாம் குடும்ப உறவுக்குள் கல்யாணம் கட்டிப்பிறந்த பிள்ளைகள்தானா?" என்று மச்சான் மத்தீன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்படி எல்லாவற்றையும் எடைபோட முடியாது. ஆனால், நமது அறிவுக்குப் புலப்பட்டதை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதைத்தான் பெரியார்களும் வைத்தியர்களும் கூறுகிறார்கள்” என்று நபீசா கூறினாள்.

“நபீசா நான் என் மனதில் இருப்பதை உங்களிடம் சொல்லட்டா”

“என்ன? சொல்லுங்கள் மச்சான்”

“நான் ஆண்மைக்குத் தகுதி இல்லாதவன்; இழிதரமானவன். எனது மாமன் மகளே. என்னை விரும்பவில்லையென்றால், வேறு எந்தப்பெண் என்னை விரும்புவாள்? இப்படியெல்லாம் என்னை நான் இழிவாகக் கருதுகிறேன். அத்துடன் நீங்கள் யாரையோ ஒரு ஆணழகனை விரும்புகிறீர்கள். அதனால்தான் என்னை நீங்கள் வெறுக்கிறீர்கள்” என்று வேதனையுடன் நபீசாவின் மச்சான் பேசிக்கொண்டிருக்கும்போது -

நபீசா இடைமறித்து, “மச்சான் கொஞ்சம் பொறுங்க. நான் பேசிய பிறகு நீங்க பேசுங்க. நீங்களா ஆண்மையும் அழகும் இல்லாதவர்? தேக்குமரம்போல நீண்ட வாகான உடல் தோற்றமும், நடந்தால் பலங்கொண்ட யானை நடப்பது போன்ற கம்பீரமும், கன்னிப்பெண்கள் கண்டால் காதல் மோகம் கொள்ளும் கவர்ச்சியும், உங்களில் கவிந்திருக்கும்போது, நீங்கள் உங்களை இழிவாக கருதுகிறீர்களே? நான் யாரையோ விரும்புகிறேன் என்று கூறினீர்களே. இதுவரையும் எனது மனம் பனியிலும் மென்மையாகவும் வெண்மையிலும் தூய்மையாகவும்தான் இருக்குறது. என்மீது நீங்கள் கொண்ட அன்பும் பாசமும் உங்களை எப்படியெல்லாம் பேசச் சொல்கிறது? அதெல்லாம் இருக்கட்டும் மச்சான். நான் உங்களுக்கு நல்ல ஒரு பெண் பார்த்திருக்கிறேன். அவளைத்தான் நீங்கள் கல்யாணம் கட்டவேண்டும். அவள்தான் உங்களுக்கு ஏற்ற துணைவி” என்று நபீசா கூறினாள்.

“யார்?”என்று மச்சான் மத்தீன் கேட்டான்.

“வதுறுதீன் வாத்தியாரின் மகள் பசீலா. உங்களுக்குத்தெரியும். நல்ல அழகி குணசாலி. நீங்க அவளைத்தான் திருமணம் முடிக்கவேண்டும்” என்று நபீசா கூறினாள். அதற்கு நபீசாவின் மச்சான் மனம் விரும்பியதுபோல் காட்டிக்கொண்டான்.

நபீசா தனது தங்கைக்கு மாமியின் மகன் மத்தீனை மணம் முடிக்கலாம் என்று நினைத்தவள்தான்; ஆனாலும், ‘தனக்கு விருப்பம் இல்லாததையும், தனக்கு விருப்பம் உள்ளததையும், தனது சகோதரருக்கும் அவ்வாறு செயல்படுத்த வேண்டும்’ என்னும் தத்துவ நெறியை கற்றவள் நபீசா. அதனால் அப்படிச்செய்ய அவள் விரும்பவிலலை.

நபீசா மறைமுகமாக முன்னின்று, தனது மூத்தமாமியின் மகன் மச்சான் மத்தீனுக்கு திருமணத்தை முடித்து வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் 10**

காலக்குதிரையின் வேகத்துக்கு கடமைக்கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு விரதநெறியோடு காரியத்தின் பக்கம் திசை திருப்பி தங்களின் செயலில் கவனம் எடுப்பவர்கள் யார், யாரோ அவர்களெல்லாம் வெற்றியும் மகிழ்ச்சியும் அடைவார்கள். காலம் இருக்கிறது. கடவுள் இருக்கின்றான். விதியின் விளைவு எப்படியோ அப்படியே நமது வாழ்வு அமையட்டும் என்று எண்ணி வாழ்பவன் கோட்டை விட்டவனாக கொடிய துன்பங்களில் தாழ்த்தப்பட்டவனாவான்.

நபீசா தனது பெரும் முயற்சிகளால் தானும் வாழ்ந்து தனது சகோதரர்களுக்கும் வாழ்வு காட்டி, சினேகிதர்களுக்கும் துணை நின்று கொண்டிருந்தாள்.

இப்போது நபீசா பல்கலை கழக விரிவுரையாளராக கடமையாற்றுகின்றாள். பிரமுகர்களாலும், பல்கலைகழக மாணவர்களாலும், பிரபலமாகி நாற்றிசையும் நற்புகழால் பெருமை பேசப்படுகின்றாள்.

யதார்த்தமும், முன்னேற்றச் சிந்தனையும், நபீசாவின் வலம், இடம், அரிமா நோக்கு என்பது போலவும் போலிக்கௌரவம், முகத்துதி, பழயதை மறத்தல் போன்ற பாதக விளைவுகளின் கொடுமைகளை அவளிடம் காட்டமுடியாதவாறு முறுக்கேறியிருந்தாள்.

நபீசா, தன் தங்கைக்கு திருமணம் முடிப்பதற்காகப் பெரும் பிரயத்தனம் எடுத்து வீடு கட்டினாள். அது நடுத்தர வர்க்கத்தின் சாயலுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த அழகான வீடு. மாப்பிள்ளை வீட்டார்கள் பெண் பார்ப்பதற்காக. நபீசாவின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு சிற்றுண்டி கொடுத்து ஆதரிக்கும் முன்பாக, வந்திருந்த மாப்பிள்ளை வீட்டுப்பெண்கள் ஆளுக்கொரு கதையும் வீண்பேச்சும், கேலி வார்த்தைகளும் பேசுவது நபீசாவுக்குப் பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளைக்காரரின் மூத்தலாத்தா கூறினாள்: "வீட்டுக்கு முன்கதவு போட்டிருப்பதுபோல, உள் கதவுகள் அழகாக இல்லை என்று. இன்னுமொரு சகோரி கூறினாள்: இப்போது பெண் பாக்க வந்த நமக்கே வீடு இருக்கக் காணாது. கல்யாணம் முடிக்கும்போது நமது குடும்பம், கோத்திரத்தார் வந்துபோக இந்த வீடு காணுமா? என்றும் காக்காட மனைவி கூறினாள். இந்தக் கதவுக்குப் போட்டிருக்குற திரைச்சீலை நல்ல சீலை இல்லை என்றும்; இன்னொருத்தி சொன்னாள்: முன்னறைக்கு மட்டுந்தான் மாபிள் பதிச்சிருக்குஎன்று.

இப்படியாக பெண் பார்க்க வந்த பெண்கள் ஒவ்வொருத்தரும், ஒவ்வொரு குறைபாட்டைக் கூறிக் கொண்டிருந்தார்கள். இப்படியவர்கள் பேசப்பேச நபீசாவின் நாளை நரம்புகளில் நச்சரிப்பு உண்டானது. இவர்களுக்கு ஒருபாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணிய அவள் மாப்பிள்ளை வீட்டாருக்கு உண்ணக்கொடுக்க வேண்டிய மூவகைக் கனிகள் மா, பலா, வாழை, திராட்சை, தோடை, அப்பிள், மாதுளை, ஈச்சை, செய்தூன், கனிகள் ஒருபுறம். மஸ்கத், லுதல், தேன்குழல் ஒருபுறம், சம்சா, பெற்றிஸ், வடை ஒரு புறம், இப்படிப்பட்ட நாவுக்கினிய நவரச உணவுகள் உண்டபிறகு முதல் சுற்றுப்பேசும்போது அய்ஸ் கிறீம். இரண்டாம் சுற்றுப்பேசும்போது, ஹோர்லிக்ஸ். கடைசி சுற்றுப்பேச்சுக்கு தேயிலை விருந்து கொடுத்து, மாப்பிள்ளை வீட்டுப்பெண்களை மாண்புடன் ஆதரித்து அனுப்ப வேண்டியிருந்த நபிசாவுக்கு வந்த ஆத்திரம் அவள் என்ன செய்தாள் தெரியுமா?

வந்திருந்த மாப்பிள்ளை வீட்டாரின் எண்ணிக்கையை கணக்குப்பார்த்து, அந்த எண்ணிக்கையின் அளவுக்கு பிஸ்கட்டுகளை மட்டும் வைத்துக் கொடுத்துவிட்டு, அதே அளவுக்கு தேயிலையையும் கொடுத்து விட்டு, சகோதரர்களிடம் கூறினாள்: "நான் பக்கத்து வீட்ட போய் இருக்கன். மாப்பிள்ளை வீட்டார்கள் என்னைக்கேட்டால், கெம்பசுக்கு போயிட்டன் என்று சொல்லுங்க" என்று கூறிவிட்டு வெளியேறினாள் நபீசா.

காஞ்சிபோன பிஸ்கட்டுகளையும், கசந்துபோன தேயிலையையும், குடித்துவிட்டு, கசப்பான உணச்சிகளுடன், பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டுப்பெண்கள் இந்தப்பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கக்கூடாது என்ற அவமான வெட்கத்துடன் வெளியேறினார்கள்.

இப்படி நபீசாவின் தங்கையை பெண் பார்க்கச்சென்ற, மாப்பிள்ளைக்காரர்களுக்குக் கொடுத்த அவமான அடியை பெண் பெற்றவர்கள் பாராட்டினார்கள். ஆணாதிக்கத்தின் சீதனக்கொடுமைகளுக்கு, பெண்களும் முக்கிய பங்கு வகுக்கிறார்கள் என்று சனங்கள் பேசிக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் வாழ்வதற்கு ஒரு வீட்டைக்கட்டுவதற்கு ஆண்மை இல்லாத ஆண் வர்க்கம் பெண்வீட்டைத் தேடிப்போவது எவ்வளவு இழிந்த செயல். அப்படித்தான் என்றாலும், போதாது, சிறியது என்று பேரம் பேசுவது எவ்வளவு வெறுக்கத்தக்கது என்று நபீசா பலரின் மத்தியில் விதந்துரைத்தாள்.

தனது பக்கத்து வீட்டு சின்னம்மா பரீதாவின் கணவர் பல்கலைக்கழகத்தில் உத்தியோகம் பார்க்கின்றவர்.அவருடைய மகனுக்கு திருமணம் முடிந்து விட்டது. அதனால், பல்கலைக்கழகத்திலுள்ள தனது தகுதிக்குரிய, உத்தியோகத்தர்களுக்கு மட்டும் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்துபசாரத்தில், நபீசா விரிவுரையாளரும் பெருமையாக அழைக்கப்பட்டிருந்தாள்..

விருந்துக்கு வந்திருந்த உயர் உத்தியோகத்ர்களும் சீமான்களும் கௌரவம் வழக்கப்பட்ட விதம், அங்கு வைக்கப்பட்டிருந்த விதவிதமான ஐசுவரியமான உணவின் நறுமணம், இவற்றையெல்லாம், எண்ணிக்கொண்டு, தனது இறந்த காலத்தில் நடந்த சம்பவத்தையெல்லாம் சிந்தித்தவளாக விருந்தில் கலந்து கொள்ளச்சென்றாள் நபீசா.

குறிப்பிட்டவர்கள் அனைவரும் நேரம் தவறாமல் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டு சாப்பிட ஆரம்பித்தார்கள்.

நபீசா மட்டும் சாப்பிடாமல் விருந்துக்கு வந்தவர்களுக்கு உணவு பரிமாறும் அனுசரணையாளராக செயல்பட்டாள். வீட்டுக்காரர் எவ்வளவுதான் வற்புறுத்தியும் நபீசா சாப்பிடாமல், சாப்பாடு பரிமாறுவதும், தன்னை ஒத்த உத்தியோகத்தர்களுக்கு சுவையாக உணவு பரிமாறுவதோடு சுவையான நகைச்சுவைகளையும் பேசிக்கொண்டிருந்தாள்.

நபீசாவுடன் வந்த இன்னும் பல தோழிகள் "நபீசா நீங்க சாப்பிட குந்தாட்டி நாங்களும் சாப்பிடமாட்டோம்" என்று கூறினார்கள்.

அவர்கனின் பேச்சுக்கு நபீசா கூறினாள் "பக்கத்து வீட்டுக்காரர் பாதி பணிக்குச் சொந்தக்காரர் நான் பக்கத்து வீட்டுக்காறி. நீங்களெல்லாம் தூரம் தொலைவில் இருந்து வந்தவர்கள். உங்களை திருப்திப்படுத்தி சாப்பிட வைத்தபிறகுதான் நாங்கள் சாப்பிடுவோம்" என்று காரணங்களும், கதைகளும் கூறி மற்றவர்களை சாப்பிடவைத்தாள் நபீசா.

சாப்பிட்டு முடிந்தபிறகு விருந்தினர்கள் கலைந்து போய்க்கொண்ருந்தார்கள். நலவிழி மட்டும் தாமதித்தவளாக, நபீசாவை தனியாக அழைத்து, "நபீசா! நீ விருந்து சாப்பிடாமல் இருந்த காரணம் எனக்குத்தெரியும். பணம், பட்டம், பதவி உள்ளவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட விருந்து இது என்பதாலும்; நீ பட்டம் பதவிகளில் இல்லையென்றால் உன்னை உனது சின்னம்மா இந்த விருந்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்திருக்கமாட்டாள் என்பதாலும்தான் நீ விருந்து சாப்பிட மறுத்தது. நானும் இந்த விருந்துக்கு வந்திருக்கமாட்டேன். ஆனால், நீ கலந்து கொள்ள இருப்பதை அறிந்துதான் நான் வந்தேன்" என்று கவலைப்பட்டவளாகக் கூறினாள் நலவிழி.

"நலவிழி! நீ இப்படிக் கவலைப்படவே கூடாது. ஏனென்றால், நீ சுகபோகச் செல்வத்தில் பிறந்து வளர்ந்தவள். உனக்குப் பஞ்சம், பசியைப்பற்றித் தெரியாது. அத்துடன் பணக்காரன் பணக்காரர்களுக்கு விருந்து கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகின்றான். மேலும், ஏழையும் பணக்காரனுக்கு விருந்து கொடுப்பதில்தான் மகிழ்ச்சி அடைகின்றான். எனக்கு இவர்களின்மீது உள்ள வெறுப்புக்கும், கோபத்துக்கும் காரணம் என்ன தெரியுமா? இங்கு அக்கம் பக்கத்திலுள்ள ஏழை, எளிய மக்கள் இவர்களுக்கு என்ன? குற்றம் செய்தார்கள்? பகிர்ந்துண்டு, பாசம் செலுத்தாதவர்களால் என்ன தான, தர்ம, தவம் செய்ய முடியும்? இப்படிப்பட்டவர்களின் வீட்டில் என்னைப்போல் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள் சாப்பிடுவது குற்றம்; பாவம். உங்களைப்போன்றவர்கள் சாப்பிடுவதில் குற்றமும் இல்லை; பாவமும் இல்லை.

நலவிழி! பணக்காரன் களவு, பொய் இல்லாமல் வாழ்வது பெரிய விடயமல்ல. ஆனால், ஏழை களவு, பொய் இல்லாமல் வாழ்வது இருக்கிறதுதானே? அதுதான் பெரிய உத்தமச்செயல். ஒரு பெரியார் ஒரு ஏழையிடம் கேட்டார்: "சாப்பிட்டாயா? என்று. அதற்கு அந்த ஏழை ஆம் என்று கூறினான். என்ன? கறி என்று பெரியார் கேட்டார். கறி ஒன்றும் இல்லை. வெறும் சோற்றைத்தான் அதிகம் ருசித்து மணம் குணத்தோடு சாப்பிட்டேன் என்று, அந்த ஏழை கூறினான். அதற்குப் பெரியார், வெறும் சோற்றை அதிகமாக ருசித்து மணங்குணத்தோடு எப்படிச் சாப்பிட்டாய்? என்று கேட்டார். அதற்கு அந்த ஏழை கூறினான்: எனது வீட்டுக்குப் பக்கத்தில் பண்காறர் ஒருவர் பெரும் விருந்து வைத்தார். அந்த விருந்தின் உணவிலிருந்து வந்த பொரியல், புரியாணி மணத்தின் வாடையால், நான் எனது வெறும் சோற்றை ருசித்து, மணங்குணத்தோடு சாப்பிட்டேன்" என்று அந்த ஏழை கூறினான்.

இப்படி அந்த ஏழை மனிதன் கூறியதும், அந்தப் பெரியார் ஏழை மனிதனிடம் என்ன சொன்னார் தெரியுமா? நீ இப்போது உடனே சாப்பிட்ட சாப்பாட்டை வாந்தி எடுக்க வேண்டும். ஏன் தெரியுமா? ஏழை ஒருத்தன் பக்கத்து வீட்டில் பசித்திருக்கிறான் என்னும் ஈவு இரக்கம் இல்லாதவனின் உணவில் உள்ள மண வாடை உனக்கு ஆகுமானதல்ல. விலக்கப்பட வேண்டிய விசம் என்று அந்தப் பெரியார் சொன்னார். அப்படி ஈவு, இரக்கம் இல்லாத பணக்காரர்களின் காற்று வாடைகூட கொடிய விசமென்றால் அவர்களின் சாப்பாடு எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையான விசமாக இழிந்த உணவாக இருக்கும் நலவழி! அதனால்தான் நான் சாப்பிடவில்லை" என்று நபீசா கூறிக்கொண்டிருக்கும்போது, சின்னம்மா பரீதா நபீசாவை சாப்பிட அழைத்தாள்.

"சின்னம்மா நான் உங்களின் வீட்ட சாப்பிட வரவில்லை. நான் வந்த காரணம் என்னோடு வேலை செய்கிறவர்கள் எனது வீட்டுக்கு பக்கத்தில் விருந்துக்கு வந்தபோது நான் வரவில்லையென்றால், என்னிடம் அதிகம் விசாரிப்பார்கள். அந்த விசாரணைக்கும், விசனத்துக்கும் என்னால் விடை கூறமுடியாது. அதற்காகத்தான் நான் உங்களின் வீட்டுக்கு வந்தேனே ஒழிய சாப்பிட வரவில்லை.

பணம், பட்டம், பதவிகளுக்காக கொடுக்கப்பட்ட உங்களின் விருந்து எனக்குத் தேவையில்லை. உங்களின் வீட்டில் கடந்த காலங்களில், எத்தனை விருந்துகள் கொடுத்திருப்பீர்கள்? அந்தநேரமெல்லாம் என்னைப்போன்ற ஏழைகள் ஒருவேளைச் சோற்றுக்கு பசித்தாகம் கொண்டிருந்திப்பார்கள்? இப்போதுகூட எத்தனை பேர் உங்களைச் சுற்றி, உங்களின் உணவு வாடையை சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள்?

உங்களின் வீட்டுக்கூரைகளில் பறவைகள் கழிக்கும் எச்சங்கள், பெய்யும் மழையால் கழுவப்பட்டு, எங்களின் வளவுக்குள் ஊத்துண்டு அழுக்கடையலாம்; உங்களின் மாமரம், தென்னை மரம், காய்த்த கனிகள் எங்களின் வளவுக்குள் விழுந்தால், அவற்றைத் தூக்கி நாங்கள் உங்களின் வளவுக்குள் போட வேண்டும். அவற்றின் இலை, குப்பை, கூழன் எங்களின் வளவுக்குள் விழுந்தால், அவற்றை நாங்கள் சுத்தப்படுத்த வேண்டும். உங்களின் அடுப்பங்கரையில் வேக வைக்கும் பரிமண உணவின் மணவாடை எங்களின் நாசியில்பட்டுப் புரையேறி இருமி இழைத்துப்போக வேணும். ஆனால், நீங்கள் செல்வத்தால் செருக்கேறி சொந்தத்தினரையும், சுற்றத்தினரையும் மறந்து மமதைக்காக மற்றவருக்கு விருந்து கொடுத்து மகிழ்வது அன்பா? பண்பா? இறைவன் இதை ஏற்றுக்கொள்வானா?

வறுமையில் வாடும்போது குடும்பத்துக்குள் உறவு தேடி வாழ்வார்கள். வளம் பெற்ற பிறகு, உயர்ந்த இடத்தில் உறவுதேடிப் பெருமைப்படுவார்கள். இவற்றையெல்லாம் நல்ல ஆத்மாக்கள் ஏற்றுக்கொள்ளுமா? சின்னம்மா! உங்களின் உணவு எனக்கு வேண்டாம். நான் வருகிறேன். நலவிழி போவோமா?"என்று கூறிக்கொண்டு நபீசா நடந்தாள். அவளின் நடையியில் புலமைப்பெண் என்ற புரட்சித்தணல் சூடேறிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 11

அதிகமாக பெரும் செல்வ வளம் பெற்றவர்கள் வறுமையால் துன்புறுகின்றவர்களுக்கு, உதவி ஒத்தாசை செய்யமாட்டார்கள். அப்படி யாராவது நல்ல மனம்படைத்த வசதி உள்ளவர்கள் துன்புறுகின்றவர்களுக்கு உதவி செய்தால் உதவி செய்ய மனம் இல்லாத கொடிய மனம் படைத்த கயவர்கள் உதவி செய்கின்ற நல்ல மனிதர்களுக்குசொல்லும் அவதூறும், அபாண்டமும் என்ன தெரியுமா? வட்டிக்குக் கொடுப்பவர்கள் என்றும், ஒத்திக்கி கொடுப்பவர்கள் என்றும். ஒரு சதமேனும் மற்ற மனிதனுக்கு கடனாகவோ, கருணையாகவோ கொடுக்க மனம் இல்லை. ஆனால், அன்பின் நாட்டமாக,கொடுக்கின்றவர்களுக்கு கயவர்கள் கொடுக்கின்ற பாவப்பெயர் எவ்வளவு கொடுமையாக இருக்கின்றது.

இதேபோன்று அரசியல் அந்தஸ்து, அதிகார அந்தஸ்து இருந்த போதிலும் மிக வறுமைப்பட்டு துன்புறும் மனிதனுக்கு ஒரு வேலையை செய்து கொடுக்காமல் காரணங்காட்டி காலங்கடத்தும் அரசியல்வாதிகள் எப்படிக் கூறுவார்கள் தெரியுமா? இறைவன் உனக்கு நாடவில்லை என்று. இது எவ்வளவு கொடிய சுத்தப்பொய்யும் பாவமும் தெரியுமா?

இப்படிப்பட்ட முரண்பாடுகளாலும், ஏமாற்றுக்காரர்களின், எரிச்சல்களாலும் நபீசா தனது காரியச்சித்தங்களால் கடமையாற்றிக் கொண்டிருந்தாள். மாணவர்கள் நபீசாவிடம் பாடங்களைக்கற்று, முன்னேறிச்செல்கின்றவர்களும், மணவாழ்வு பெற்றுச்செல்ல, மாணவர்கள் மத்தியில் அபிப்பிராயம் கேட்கின்றவர்களும், நபீசாவின் அபிப்பிராயத்தால், மணம் முடித்து மங்கலமான வாழ்வு வாழ்கின்றவர்களுமாக காலம் கமழ்ந்து கொண்டிருந்தது.

நபீசாவை மணம்முடிக்கப் பலர் தூது விடுத்தனர். காதல்கொள்ள அதிகமானவர்கள் அபிப்பிராயம் தேடினர். ஆனால், நபீசாவுக்கு அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மொட்டைக் கடிதத்தால், கனத்துப்போயிருந்த நபீசாவின் மனம் அதிகம் வாடிக் குழம்பிக் கொண்டிருந்தது.

"என்னை விரும்பும் உயர் குலக்கோமான் யார்? ஏன் அவர் என்னை நேரில் அறிமுகம் செய்யவில்லை? இதற்கான காரண காரியம் என்ன? என்பதுபோன்ற எண்ணங்களால் நபீசா ஏங்கித் தவித்தாள்.

கல்யாண வாழ்வை அதிகமானவர்கள் பட்டம், பதவி, பணம், சீதனம் என்றுதான் ஆண், பெண்களைத் திருமணம் முடித்து வைக்கின்றார்கள். ஆனால், பொருத்தம் என்ற காரணம் பார்த்து மணம்முடிப்பது மிக மிகக் குறைவு. உதாரணத்துக்கு ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணுக்கும் நல்ல குடும்பத்திலுள்ள ஆணைத் திருமணம் முடித்து வைக்கின்றார்கள். இது நல்ல திருமணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இங்கேதான் பிரச்சினை உண்டு. மனைவி கட்டிக்காக்கும் குடும்பப்பற்று உள்ளவளாக இருப்பாள். ஆனால், கணவனோ குடிகாரனாகவும் குடும்ப மானம் இல்லாத மந்த மடையனாகவும் இருப்பான். இப்படிப்பட்டவர்களின் இல்லற வாழ்வு எப்படி அமையும்? இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் ஒழுங்கீனமான செயல்களின் விளைவு எப்படி இருக்கும்?

பொதுவான கண்ணோட்டத்தில் பார்த்தால் மாட்டை ஆட்டுக்கு சினைப்படுத்தச் செய்யலாமா? பசுமாட்டை எருமை மாட்டுக்கு சினைப்படுத்தச் செய்யலாமா? குதிரை கழுதையோடு சினைப்படும்போது கழுதைக்குப் பிறக்கும் குட்டி கோவேறு கழுதையாகப் பிறக்கிறது. கோவேறு கழுதைக்கு குட்டிகள் பிறப்பதும் இல்லை. அவற்றுக்கு சந்ததிகளும் இல்லை. பொருத்தமில்வாமல் மணம்முடித்து வைக்கின்றவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் பிழையான பாதையில்தான் செல்வார்கள்.

காகத்தின் கூட்டில் குயில் முட்டையிட்டு, காகத்தால் அடைகாத்து குயில் முட்டையிலிருந்து குயில் குஞ்சி வெளி வந்ததும், காகத்துக்கு அது தனது குஞ்சி இல்லை என்று அறிந்ததும், குயில்குஞ்சை துரத்தித் துரத்தி கொத்தி விரட்டுகின்றது.

இதுபோலவேதான் இயற்கைத்தனமான மனப்பொருத்தம், உடல் பொருத்தம் இல்லாதவர்களைத் திருமணம் முடித்துவைத்தால், கணவன், மனைவிக்குள் வெறுப்பேற்பட்டு, அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் எதிர்காலமும் சீர்குலைந்து ஒழுங்கீனமானவர்களாவார்கள்.

பணம், பட்டம், பதவி, குலம், கோத்திரம் என்ற மாயையின் தெளிவற்ற பார்வையால் சமூகத்தில் மனித மிருகங்களில் ஆட்டுக்குப் பசுவையும், பசுவுக்கு எருமையையும், குதிரைக்கு கழுதையையும் திருமணத்தின் பெயரால் ஒன்றுசேர்த்து வைத்து களங்கப்படுத்துன்றாரகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்ற சம்பவங்களால் நபீசா பல அனுபவங்களைக் கண்டுகொண்டாள். அத்துடன் பல திருமணங்களை நடத்தி வைத்தாள். சில திருமணங்கள் நடக்கும்போது, இந்தத் திருமணம் நிலைத்து நில்லாது என்று எதிர்வு கூறுவாள்.அப்படியே அது நடக்கும். சில திருமணங்களை முடித்து வையாதீர்கள் என்று கூறியும் முடித்து வைத்த திருமணங்கள் சண்டையிலும் வழக்குகளிலும் இன்னும் பிரச்சினைப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

இப்படியெல்லாம் திருமண வாழ்வுகளைப் பற்றிய தீர்க்க தரிசனமான முடிவுகளை முன்னெடுத்துச்செல்லும் நபீசாவை விரும்பும் அந்த இலக்கிய காதலன், தன்னை இணங்கி நிற்பவன் யார் என்பதை தெரியாமல் தவிக்கிறாள் அவள். தன்னையொத்த பலர் திருமணம் முடித்துக் கொண்டார்கள். தனது தங்கை ஒருத்தியும் கல்யாணம் முடித்துக்கொண்டாள். தன்னை திருமணம் முடிக்கப் பலர் விரும்புகிறார்கள். இவற்றையெல்லாம் யோசிக்கும்போது, எப்போது நமக்குத் திருமணம் என்பதுதான் நபீசாவின் கேள்வியாக இருந்தது.

நபீசாவுக்கு முதல் காதல் மொட்டைக்கடிதம் வந்ததிலிருந்து இன்று வரையும் வந்த காதல் கடிதங்களில் சில குறியீடுகள் மிகவும் சிறியவையாக இருந்தன. ஆனால், அது மிகப்பெரும் மறக்க முடியாத உதவிகளாக இருந்தது. நபீசா எங்கு போனாலும், அவளுக்கு மிகக் கடினமாக இருக்கும் வேலைகளெல்லாம் மிகவும் இலகுவாக இருந்தன.

ஒருமுறை நபீசாவின் உம்மாவுக்கு கடும் வருத்தம் எற்பட்டது. அதனால் மிக அரிதான இரத்தம் தேவைப்பட்டது. அந்த வகை இரத்தம் கிடைப்பது நூற்றில் இரண்டொரு பேரிடம்தான் இருக்கும். நபீசா தனது தாயின்மீது கொண்ட பாசத்தால் எவ்வளவு பணம் கொடுத்தாலும், அந்த வகை இரத்தத்தை தேடி அலைந்தாள். அப்போது, மிகவும் அதிர்ஸ்டம்போல் ஒருவர் நபீசாவைத்தேடி வந்து அந்த வகையான இரத்தத்தை வழங்கினார்.

நபீசா இரத்தம் தந்தவருக்கு பணம் கொடுக்க முற்பட்டபோது, அவர் பணம் வாங்க மறுத்தார். எவ்வளவுதான் வற்புறுத்தியும் இரத்தம் தந்தவர் பணம் வாங்கவே இல்லை. அத்துடன் அவர் யாரென்றும் தெரியாது. எந்தப்பக்கம் சென்று மறைந்தாரோ தெரியவில்லை.

இப்படியான எத்தனையோ பொறுப்பான காரியங்கள் நபீசாவுக்கு மிக இலகுவாக கிடைப்பதை சிந்திக்கும்போது, தனது ஒவ்வொரு அசைவிலும், தன்னை விரும்புகின்ற காதலனின் செயற்பாடு, உதவியளிக்கப்பட்டுக்கொண்டும், அவதானிக்கபபட்டுக்கொண்டும் இருக்கிறது என்பதை நபீசா மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டாள். இதன் காரணமாக நபீசா அதிகமாக ஆடவர்களோடு அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதையும் விரும்புவதில்லை. ஏனென்றால், பூரணமாக ஒரு ஆண்மகன் ஒரு பெண்ணை விரும்புவானாக இருந்தால் அந்தப்பெண் தன்னை ஒத்த ஆண்களோடு பேசிக் கதைத்து சிரித்துப் பழகுவதை விரும்பமாட்டான். அத்துடன் கவலைப்படுவான். தனக்கு எத்தனையோ மறைமுகமான உதவிகளை செய்கின்ற ஒரு ஆத்மாவின் மனதை கவலைப்படுத்தக் கூடாது என்று நபீசா நாணம் கொண்டாள்.

சுய சிந்தனைகளின் கிளர்ச்சியாலும், பொதுப்படையின் ஆட்படுத்தல்களாலும், நபீசா அவளின் ஆற்றல்களை அதிகமாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். எந்தப்பக்கம் திரும்பினாலும் வேலை; எவருடன் பேசினாலும் உதவி ஒன்று தேவை என்ற பேச்சு. சிலநேரங்களில் மௌனமாக இருந்தால், என்ன கவலையோடு இருக்கிறீங்க என்ற கேள்வி. இப்படிப்பட்ட ஓயாத நிலையில் கொஞ்சம் தூங்குவோம் என்று நினைக்கும்போது நலவழியும் அவளின் தந்தையும் வந்து கொண்டிருந்தார்கள்

நலவிழியையும் அவளின் தந்தை செல்வக்கோடீஸ்பரரையும் கண்ட நபீசா கூறினாள்: "இந்த ஏழையின் வீடு என்ன நற்பாக்கியம் செய்ததோ கோடிச்செல்வர் தேடிவர" என்று நபீசா மகிழ்ச்சியுடன் கூறினாள்

"கற்றவரை காண்பதற்க்கு கற்றவரே காணத் துடிப்பர்" என்று நலவிழியும் பதிலுக்குப் பாடிச் சிரித்தாள்.

நலவிழியையும், அவளின் தந்தையையும் வரவேற்ற நபீசா மகிழ்ச்சி மிகுதியால், அவளுக்கு இருந்த அசதி நீங்கி "என்ன? இப்படி இங்கே" என்று பேச ஆரம்பித்தாள்.

நலவிழி தனது தந்தையை அழைத்துக் கொண்டு, நபீசாவின் வீட்டுக்கு வந்தது இரண்டு காரணம். ஒன்று தனது கல்யாணம் சம்மந்தமாகவும் இரணடாவது தனது தந்தை செல்வந்தர் மட்டுந்தான் எனறு நபீசாவுக்குத்தெரியும். ஆனால், அவர் பெரும் கலை, இலக்கிய, கவித்துவ ஞானம் உள்ளவர் என்பது நபிசாவுக்குத் தெரியாது. அதனைத் தெரியப்படுத்தவும் அப்பாவும், நபீசாவும் பேசிக்கொள்ளும்போது அவர்களின் வாதப்பிரதிவாத கருத்துப் பரிமாற்றங்களில் உள்ள அறிவமுதத்தை ரசித்து அறிவதற்காகவுந்தான்.

வாழைப்பாழம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் நலவிழியின் தந்தை நபீசாவிடம் கேட்டார்: "வாழைப்பழத்தின் அறிவியல் பெயர் என்ன தெரியுமா? என்று.

தெரியாது என்பதுபோல் நபீசா யோசித்துக் கொண்டிருந்தாள்.

" நீங்க சொல்லுங்க அப்பா" என்று நலவிழி ஆவலாகக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழைப்பழத்தின் அறிவியல் பெயர் புத்திசாலிகளின் உணவு. வாழைப்பழம் அதிகம் உற்பத்தியாகும் நாடு ஜெர்மன். உலகில் எங்கும் எந்த நேரமும், குறைந்த விலையில் கிடைக்கும் பழ வகை என்றால் அது வாழைப்பழம் மட்டுந்தான்" என்று நலவிழியின் தந்தை கூறினார்.

"எனக்கு இந்தச்செய்தி தெரியாது. ஆனால், வாழைப்பழத்தில் எல்லாப் பழங்களிலும் உள்ள சத்துக்கள் இருப்பதாக படித்திருக்கிறேன்" என்று நபீசா கூறினாள்.

மீண்டும் தொடர்ந்தார் நலவிழியின் தந்தை: "முக்கனிகள் என்றால் என்னென்ன கனிகள் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று சிரித்த வாறு கேட்டார்.

நபீசா சிரித்தவாறு "இது ஒரு பெரிய கேள்வி இல்லைதானே" என்று கூறியவள் "மா, பலா, வாழை என்று கூறினாள்.

"இதே கேள்வியை ஐரோப்பியரிடம் கேட்டால், என்ன பதில் சொல்லுவார்கள் தெரியுமா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்கு நபீசா கொஞ்சம் யோசித்தவளாக, "என்ன கனிகள் என்று சொல்வார்கள்" என்று கேட்டாள். அவளின் கேள்வியில் அறியும் ஆவல் இருந்தது.

ஐரோப்பிய மக்கள் திராட்சை, தோடை, அப்பிள் என்று கூறுவார்கள். எவ்வாறு நமது ஆசியாக் கண்டத்தில் மா, பலா, வாழை அதிகம் விளைகிறதோ அதைவிட அதிகமாக ஐரோப்பா கண்டத்தில் திராட்சை, தோடை, அப்பிழ் விளைகின்றன. இப்படித்தான் நாடுகளுக்கு நாடு கண்டங்களுக்கு கண்டம் மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபாட்ட விடைகளாலும், நிற வித்தியாசங்களாலும் வேதமத மாறுபட்ட கருத்துக்களாலும் வாழுகின்றார்கள்.

நமது சனங்கள் எப்போதும் படிப்பதையும், படித்தவன் என்பதையும், எதற்காகப் பயன்படுத்துகின்றார்களென்றால் அரசாங்க வேலை செய்வதை மட்டும் வைத்துத்தான் படித்தவன் என்று கூறுகிறார்கள். மேற்கொண்டு பாடசாலைகளில் படியாமல் எவ்வளவுதான் பொதுவான அறிவியல் ஆற்றல் ஆக்கசக்தி கொண்டவராக இருந்தாலும், அவரைப்படித்தவன் என்று சொல்லுவதில்லை. இது நமது மனிதர்களுக்குள் இருக்கும் மிகப்பெரும் பேதம் நிறைந்த பேடிமைத்தனமானது.

பாடசாலைக் கல்வியோடு, பொதுவான படிப்பையும் அறிவுத்தேடல்களோடும், ஒருவர் படிப்பவராக இருந்தால், அவர்தான் மிகப்பெரும் அறிவியலாளர். ஒவ்வொரு மதத்தவரும் பிற மதங்களின் தத்துவங்களைப் படிக்கும்போது, தங்களின் மதங்களிலும் உள்ள தத்துவங்களையும், ஒப்பிட்டு பார்க்கும்போது, மதங்களுக்கும் மனிதர்களுக்கும் சமத்துவம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையப் படித்தவர்களால்தான் குரோதமும் குறைபாடும் ஏற்படுகின்றது. நாம் நமது சமூகத்திலுள்ள வாழ்க்கை முறையை கொஞ்சம் அவதானித்து, ஆராய்ந்து பார்ப்போம். நீங்கள் முஸ்லீம்; நான் இந்து. என்னிடம் வேலை செய்கின்றவர்கள் சிங்கள பௌத்தர்களும், கிறிஸ்தியர்களும், முஸ்லீம்களும், தமிழர்களும். இவர்களையெல்லாம் வைத்து நாம் இன்றைய வாழ்வு முறையை வைத்து சிந்திப்போம்.

இன்று நமது நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களாகிய பௌத்தர்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் வாழும் அரசியல் செயல்பாட்டு முறை பௌத்த அரசியல் அமைப்பானதும் இல்லை. தமிழ் மக்களை எடுத்துக்கொள்வோம், அவர்களை ஆளும் அரசியல்முறையும் இந்து நாகரீக ஆட்சி முறையும் இல்லை. இஸ்லாமிய மக்கள் வாழும் அரசியல் முறை இஸ்லாமிய அரசியல் முறையும் இல்லை. கிறிஸ்தியர் வாழும்முறை, கிறிஸ்யரின் வேத முறை ஆட்சிமுறையும் இல்லை. அப்படியென்றால், நாம் அனைவரும் எந்த ஆட்சி முறையில் வாழ்கிறோம் தெரியுமா?

கிரேக்க ஆட்சியாளர்களினதும், கன்பூசிய ஆட்சியாளர்களினதும், மார்க்கிச சோசலிச நவீன பொதுவுடமை ஆட்சியாளர்களின் கலவையான காலத்துக்கு ஏற்ற, நவீன அரசியல் விஞ்ஞாபனங்களுக்கு, ஏற்றவாறு அரசியல் வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கினறோம். இப்படிப்பட்ட வாழ்வு முறைகளால், நாம் பின்னிப்பிணைந்து கொண்டு மதத்தால், இனத்தால், மொழியால் உயர்ந்தவன் தாழ்ந்தவன், சபிக்கப்பட்டவன், மாறுசாதி என்று வேற்றுமை கொள்கின்றோம்.

இந்துக்களின் வானியல் சோதிடத் தத்துவம், இஸ்லாமியர்களின் கணித விதிமுறைகள், கிறித்தியர்களின் மருத்துவ முறை, யூதர்களின் பொறிமுறைத் தத்துவம், பௌத்தர்களின் அகிம்சைத் தத்துவம் இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்த கலவையாகப் பயன்படுத்திக்கொண்டு, ஒருத்தருக்கொருத்தர் பின்னிப்பிணைந்துள்ளோம். ஆனால், எனது மதம், எனது கடவுள், என்னுடையது மட்டுந்தான் உண்மையாது என்று வாதிடுகிறார்கள். இது எவ்வளவு வெறுக்கத்தக்கது? அறிவு ஞானம் உள்ள பெரியார்கள் இவற்றையெல்ல்லாம் ஏற்றுக்கொள்வார்களா?

உலகத்தில் வாழுகின்ற மனிதர்களிடம் இரண்டு வகையான அறிவுதான் உண்டு. ஒன்று நெறி அறிவு; மற்றது வெறி அறிவு. இவை இரண்டிலும், நெறி அறிவுடையோரைக் காண்பது மிக மிக அரிது. ஆனால், வெறி அறிவுடையோர்கள் கோடி கோடியாகக் காணப்படுகின்றார்கள். ஆன்மீகத்தில் அரசியலில் அதிகாரத்தில் அந்தஸ்த்தில் தங்களை தகுதிமான்கள் என்று கூறிவிட்டு, அவர்களால் ஆட்படுத்தப்படும் செயல்களால் விளையும் ஆபத்தின் அழிவுகள் எவ்வளவு கொடுமையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எடுத்துக்கொள்வோம். என்னிடம் எத்தனையோ இன, மதத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களின் தொழில் பாட்டால் கிடைக்கும் இலாபத்தை நான் எந்த இன மதக் கடவுளுக்கு காணிக்கை செலுத்துவது? அத்துடன் நான் ஒருமத வெறியனாக இருந்தால், என்னிடம் ஊழியம் புரிகின்ற வேற்று மதத் தொழிலாளர்கள் என்னை நேசிப்பார்களா? நான் அப்படி நினைத்தால் அவர்களின்மீது தூய அன்பு செலுத்தலாமா?

நபீசா உங்களை எடுத்துக்கொள்வோம். நீங்கள் ஒரு முஸ்லீம் பெண்ணாக இருந்துகொண்டு, எத்தனையோ மாற்று மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு, எவ்வளவோ உதவி, ஒத்தாசைகளைச்செய்து கொண்டிருக்கிறீங்க. உங்களுக்கு சாதிப்பாகுபாடு, இனம், மதம் என்ற பேதம் இருந்தால் இப்படியெல்லாம் இயங்குவீங்களா? சொல்லுங்கள். இன்னுமொன்றை நான் உங்களிடம் கூறவேண்டும். இரண்டுபேர் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒருவர் மட்டும் பேசினால், பேச்சில் உயிரோட்டம் உண்மை இராது. மற்றவரும் பேசினால், அது கருத்துப் பரிமாற்றம். ஒருவர் மட்டும் பேசினால், கொள்கைத்திணிப்பு" என்று நலவிழியின் தந்தை கூறினார்.

அவரின் சாத்வீகமான பேச்சுக்களில் இருந்து பகுத்துப்பார்க்கும் பட்டறிவைப் புரிந்து கொண்ட நபீசா "உங்களின் பேச்சில் பேதமில்லை. அத்துடன் ஒப்பீடு பேசிக்கொண்டிருந்தால், திணிப்பு வராது. உங்களோடு பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவது தெரியாமல் போய்விடும். திணிப்பான வாரத்தைகள் பேசினால், நெருப்புக்குப்பக்கத்தில் நிற்பதைப்போல், எக்கணம் இவ்விடத்தை விட்டுப்போவது போன்றிருக்கும். சிலர் பேசுவது எதையாவது பேசுவோம் என்று பேசுவார்கள், அந்தப்பேச்சில் இனிமை இராது. ஒருசிலர் பேசுவார்கள். விடயங்களை விளக்குவதற்காக மட்டும் பேசுவார்கள். ஆனாலும் சுருக்கமாகப் பேசுவார்கள். உங்களின் பேச்சு ஊக்கம் தரும் உரையாக இருக்கிறது. ஒரு நாளிலாவது நலவிவழி தனது அப்பாவைப் பற்றி ஒரு வார்த்தைகூட பெருமையாகப் பேசியது கிடையாது" என்று நபீசா நலவிழியைப் பார்த்துக் கூறினாள்.

எனது பிள்ளை பெருமையை விரும்பமாட்டாள். பேருண்மையை அறிய ஆவல் கொள்வாள். புகழ் போதை கொண்டவர்களை எனது பிள்ளை கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். நான் இப்படிக் கதைப்பதையும் எனது ஜீவ ஆத்மாவான எனது பிள்ளைக்குப் பிடிக்காது" என்று நலவிழியின் தந்தை கூறியவர், மீண்டும் நபீசாவிடம் கூறினார்: "நபீசா! நான் உன்னிடம் ஒரு உதவி கேட்க வந்துள்ளேன்" என்று; அவரின் பேச்சில் தாழ்வும், தர்ம சங்கடமும் முகிழ்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடீஸ்பரர் நலவிழியின் தந்தை இப்படிக் கூறியதும் நபீசா சபலப்பட்டவளாக, சங்கடப்பட்டவளாக தன்னைச் சுதாகரித்துக்கொண்டு "என்ன உதவி?" என்று கேட்டாள்.

"நபீசா எனது மகள் நலவிழிக்கு ஒரு மாப்பிள்ளை வேண்டும். உனது உதவியால்தான் அந்த மாப்பிள்ளையைப் பெறலாம்" என்று கனிந்து வார்த்தைப் பிரயோகத்தை இழுத்துப் பேசினார்.

"உங்களின் மகளின் அழகுக்கும், அருங்குணத்துக்கும், அன்புக்கும் நீங்கள் இப்படிக் கேட்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்று நபீசா கூறினாள்.

"உண்மைதான் நபீசா. ஆனாலும், எனக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது அதற்காகத்தான்." என்று சொன்னார்.

"என்ன தார்மீகபபொறுப்பு?" என்று நபீசா கேடடாள்.

"அதைப்பிறகு சொல்லுகிறேன் மாப்பிள்ளை யார்? என்று நீங்கள் கேட்கவில்லையே என்று கூறினார்.

"யார் மாப்பிள்ளை?" என்று கேட்டாள் நபீசா. அவள் அப்படிக் கேட்கும்போது, அவளின் எண்ணத்தில் பதில் ஒன்று தோன்றிக் கொண்டிருந்தது.

"நடராசா"

நலவிழியின் தந்தை நடராசா என்று கூறியதும், நபீசா எதையோ நினைத்தவள்போல் கூறினாள்: "நடராசா சொல்கிறார். அவர் பணக்காற இடங்களில் மணம்முடிப்பதில்லை என்று."

"நபீசா நடராசா நினைப்பது தவறு. பணம் உள்ள சிலர் தங்களின் பணப்பெருமையை காட்டுவதற்காக டாக்டர். இன்ஜினியர் என்று மாப்பிள்ளைகள் தேடுகிறார்கள் உண்மைதான். ஆனால், நான் எனது மகளுக்கு நடராசாவை மாப்பிள்ளை கேட்பது புகழுக்காக அல்ல. புண்ணியம் செய்வதற்காகக் கேட்கிறேன். நபீசா! என்னிடம் உள்ள பணத்தை நான் அறக்கொடை நிலையங்ளுக்கோ, அல்லது ஏழை எளிய மக்களுக்கோ, தான தர்மாகக்கொடுத்து விடலாம். ஆனால், அதே பணத்தை நமது கைகளாலயே சேவை செய்து, அந்த சேவையின் ஊடே உதவி செய்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். எனவேதான் டாக்டர் நடராசா ஏழையாகப் பிறந்தவர். ஏழை எளிய மக்களின் துன்பம் துயரம் தெரிந்தவர். அதனால், அவர் தனது வைத்திய சேவையோடு, எனது செல்வத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு எவ்வளவோ சேவை செய்யலாம். இதுதான் நபீசா எனது தார்மீகமான சிந்தனை. ஆனால், நடராசா நினைப்பதுபோல் நான் பணக்காரன் என்பதால், அவரை சீதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலை வீசி மாப்பிள்ளை பிடிக்கும் எண்ணம் எனக்கில்லை" என்று உண்மையான தர்ம தார்மீகம் கூறினார் நலவிழியின் தந்தை.

"நீங்கள் கூறுவது உண்மையாக இருக்கலாம். இப்படிப்பட்ட செயல்கள் ஆயிரத்தில் இலட்சத்தில் ஒன்றுதான் நடக்கும். ஆனால், நமது சமூகங்களில் மிகப் பெருங்கொடுமை நடக்கிறது. எப்படியென்றால் ஒருத்தருக்கு அரசாங்க வேலை கிடைக்கிறது. அவர் தனக்கு தகுதியான பொருள் வளம் குறைந்த பெண்ணைத் திருமணம் செய்தாலும் பொருள் வளம் வசதி உள்ள பெண்கள், பொருள் வளம் குறைந்த தனக்கு தகுதியான ஆணைத் திருமணம் செய்வதாலும்; சமூகத்தில் ஏற்ற இறக்கம் இல்லாத வறுமை, பொறாமை இல்லாத சமத்துவ வாழ்க்கை முறை ஏற்படும். நான் இப்படிக்கூறுவது நமது இந்தச்சமூகத்தில் உள்ளவர்களுக்கு கோபமும் குரோதமும் ஏற்படும். ஆனால், பிற சமூகங்களிலும், சோசலிச பொருளாதார நாடுகளிலும் அதிகம் நான் கூறுகின்ற வாழ்க்கை முறைநடக்குறது" என்று நபீசா கூறினாள்.

"நபீசா நீங்கள் என்ற தனி மனிதனின் தார்மீகமான முன்னெடுப்புகள்தான் சமூகத்திலும் நாட்டிலும் வாழ்க்கை முறையாக மாறி சமூகம் தற்போது, இன்றைய நவீன நல்வாழ்வு ஏற்படக் காரணமாக அமைந்திருக்கிறது. ஈவு இரக்கமற்ற கொடிய மனிதர்களின் போலிக் கொடும்போக்குகளை நீங்கள் கூறுகின்ற அல்லது என்னைப் போன்ற சிலர் முன்னெடுத்துச் சென்ற காரணங்களால்தான் இன்றைய சோசலிச சமூகம் எற்படக் காரணமாக அமைந்தது. அதற்காக ஒவ்வொரு தனி மனிதனும் விரத நடை போட வேண்டும்.

நபீசா நீங்க நினைக்கலாம் என்னடா? பெரும் பணம்படைத்த ஒருத்தன் இப்படிச் சொல்கிறானே என்று; இந்த உலகத்தில் பெரும் செயல்களை முன்னெடுத்துச்சென்று நற்செயல் செய்த நபிமார்களும் நாயன்மார்களும், அதிகமாக செல்வம் படைத்த கோமான்கள்தான். எனவே, நபீசா எனது செல்வத்தைப் பயன்படுத்தி நல்லவை செய்ய வேண்டும் என்றுதான் டாக்டர் நடராசாவை எனது மகளுக்கு மணம் முடிக்க விரும்புகிறேன். எத்தனையோ டாக்டர் மாப்பிள்ளைகள் எனது மகளை மணம் முடிக்க விரும்பி தூது அனுப்புகின்றார்கள். அவர்களில் ஒருத்தருக்குக்கூட என் மகளை மணம்முடித்துக் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. பட்டம் பதவிகளைப் பெற்றுக்கொண்டு, சீதனச் செல்வத்தைப் பெற்றுத் திருமணத்தை முடித்துக்கொண்டு, எந்த நன்மையையும் செய்யாமல் புகழேந்திப் புல்லர்களாக வாழும் போலிகளுக்கு எனது மகளை மணம்முடித்துக் கொடுக்க நான் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையையே தாய்மையாகக்கொண்டு, எல்லோருக்கும் உதவவேண்டும் என்ற எண்ணத்தை தூய்மையாகக்கொண்ட பூமான் டாக்டர் நடராசாவுக்கு எனது மகளை மணம் முடித்துக்கொடுப்பதால் எனது மகளின் அறங்கொண்ட அன்பு மனதுக்கும், எனது தர்மங்கொண்ட பொருளுக்கும் எதிர்காலத்தில் நல்ல சேவை இருக்கும், பெருமை இருக்கும் என்பதற்காகத்தான் நான் நடராசாவை எனது மகளுக்கு மணம் முடிக்க விரும்புகிறேன்” என்று நலவிழியின் தந்தை முடிவாகக் கூறினார்.

நலவிழியின் தந்தை கூறிய உண்மையையும், உத்தமத்தையும் அறிந்த நபீசா வார்த்தை எதுவுமில்லாமல் டாக்டர் நடராசாவோடு கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். கைத்தொலைபேசியில் நலவிழியும் நலவிழியின் அப்பாவும் கேட்கும் வண்ணம் சற்று சத்தமாகப் பேசினாள்.

“நடராசா! எப்படி நலம்தானே”

“ஆ... நபீசா லாத்தா. நான் நலமாகத்தான் இருக்கிறேன். நீங்களும் நலமாக இருக்க நீக்கமற இதயத்தால் நேசித்துக் கொண்டிருக்கிறேன்” என்று நடராசா நபீசாவிடம் சந்தோசமாகப் பேசினான்.

“நடராசா இன்னும் திருமணம் சம்மந்தமாக முடிவு எடுக்க வில்லையா” என்று கேட்டாள்.

“யாரைக்கல்யாணம் கட்டுவது? எப்போது கல்யாணம் கட்டுவது? என்ற முடிவே இல்லாமல் இருக்கிறேன். எது எப்படி இருந்தாலும் கல்யாணம் கட்டும் முடிவை எடுக்கும்போது உங்களின் அபிப்பிராயத்தையும், முடிவையும் அறிந்த பிறகுதான் திருமணத்துக்கான இறுதி முடிவை எடுப்பேன். இதனை நான் உங்களிடம் முன்பும் பலமுறை கூறியிருக்கிறேன். பணம், பட்டம், பதவிப்பொருத்தத்தைவிட பாசமான பண்பான குணப்பொருத்தம் கட்டாயம் தேவை. அவற்றை மனத்தில் வைத்துத்தான் கல்யாணத்தை தாமதித்துக் கொண்டிருக்கிறேன். ‘பாமர பணக்காரனுடைய, பண்பற்ற அழகான மகளை மணம்முடித்துக்கொண்டு, சீரழிவதைவிட பாட்டாளியான கண்ணியமானவனின், பண்புள்ள மகளைத் திருமணம் முடித்து சிறப்பாக வாழ்வது எவ்வளவு பெருமையயாக இருக்கும்?” என்று டாக்டர் நடராசா மருத்துவத் தொழிலோடு, தத்துவ நெறி பேசினான்.

நடராசாவின் பேச்சில் பணப்பந்தத்துக்கு அடிமையாகி விடக்கூடாது என்றும், பண வசதி உள்ள சிலரின் நடத்தைகள் பிடிக்காத அவனுடைய கொள்கைப் பிடியைக் கேட்டுக்கொண்டிருக்கும் நலவிழியும், அவளின் தந்தையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நபீசா என்ன பேசப்போகிறாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நடராசா நான் உங்களிடம் பல முறை மேலோட்டமாக நலவிழியைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அதைப்பற்றிய உங்களின் அபிப்பிராயம் என்ன?" என்று நபீசா கேட்டதும் நலவிழியும் அவளின் தந்தையும், நபீசாவின் பேச்சில் ஆர்வமும் சந்தோசமும் கொண்டவர்களாக நபீசாவுக்கு இப்படியொரு சிந்தனை தங்களுக்கு ஏற்படும் முன்பே, ஏற்பட்டுவிட்டது என்ற பெரும் வியப்பு ஏற்பட்டது. அதை அவர்கள் காட்டிக்கொள்ளாமல், நடராசாவின் பதில் என்ன? என்பதை அறிய ஆவல் கொண்டிருந்தார்கள் தந்தையும் மகளும்.

"லாத்தா! நலவிழி செல்வப்பிறவி. அவளின் தந்தை மிகப்பெரும் சீமான். அவர்களுக்கும் எனக்கும் சரி வருமா? நலவிழியை மணம்முடிக்க எத்தனையெத்தனையோ பெரும் டாக்டர்கள், இன்ஜீனியர் மாப்பிள்ளைகள் ஆசைப்பட்டு, ஆவல்கொண்டு ஆள்முந்தி ஆள் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நீங்கள் இப்படிச் சொல்லலாமா? அது மட்டுமல்ல; நமது தகுதிக்குள் நாம் நின்று கொள்ள வேணும்" என்று நடராசா கூறினான்.

"நடராசா நான் நலவிழியைப் பற்றி உங்களிடம் நலவாகவே பேசியிருப்பேன். ஏன் தெரியுமா? நலவிழியிடம் நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கமும், நல்லதைப் பேச வேண்டும் என்ற அறிவும் நல்லதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணமும், நல்லோர்கள் நட்பு நாடி நிற்கவேண்டும் என்ற நல்லவளேயன்றி நகைப்பால், அழகால், பணத்தால் மட்டும் நலவிழி நல்லவளல்ல.

நலவிழியின் ஒவ்வொரு நன்மையான செயல்களையும் நான் காணும்போது எனக்கு நடராசா உங்களைப் பற்றியே சிந்திப்பதுண்டு. நதி ஓடிச்சென்று கடலிதான் சங்கமிக்கும். சாக்கடையில் சங்கமிக்காது. எனவே நடராசா! நடராசா என்ற நதி நலவிழி என்ற சமுத்திரத்தில் சங்கமித்து நன்மையான செயல்களில் சாத்வீகமான சாதகங்களை சாதிக்க வேண்டும் என்று சதா நினைப்பேன். எனவேதான் நடராசா, அடிக்கடி உங்களிடம் நலவிழியைப் பற்றிப் பேசியிருப்பேன். இப்போது ஒரு சந்தோசமான செய்தி தெரியுமா? நீ நல்ல அதிர்ஷ்டக்காரன். நலவிழியும் அவளின் தந்தையும் என்னிடம் உன்னை மாப்பிள்ளை கேட்டு வந்திருக்கிறார்கள். எனது எண்ணம் எவ்வளவு விந்தையானது என்று பார்த்தாயா?" என்று நபீசா கூறியதும், தந்தைக்கும் மகளுக்கும் நபீசாவுக்கு என்ன வெகுமதி கொடுத்தாலும் போதாது போலிருந்தது.

அதை விடவும் சந்தோசமும் மகிழ்ச்சியும் நடராசாவுக்கும் ஏற்பட்டது. காரணம் நலலவிழியின் அழகோ, செல்வமோ அல்ல. நபீசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு இப்படியொரு பாதையை ஏற்படுத்துகிறாள்; அல்லது ஏற்படுத்தியதால்தான்; சென்ற காலங்களில் பாடசாலையை விட்டே வெகுதூரம் சென்று, வாழ்வில் வறுமையிலும் வாடி விலாசமே அற்றுப்போக வேண்டிய, நடராசாவுக்கு இப்படியொரு அன்பும் அந்தஸ்தான நிலைமையையும் ஏற்படுத்துவதாக இருந்தால் எந்த மனிதன்தான் நன்றியறிதலும், மகிழ்ச்சியும் கொள்ளமாட்டான் என்ற எண்ணத்தோடு நடராசா நபீசாவிடம் கூறினான்: "லாத்தா நீங்க விரும்புவது போன்று எனக்கு திருமணம் நடப்பது எனது பெற்றோர்களை விடவும் நீங்களே முக்கிய பங்காளியாகப் போகின்றீர்கள்" என்று

''நடராசா எல்லாம் ஒன்று சேரும்போதுதான் ஒரு நல்ல விடயம் நடக்கும். பெற்றார், உற்றார், சிநேகிதம் எல்லோரும் ஒன்று சேரும்போதுதான் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும். நாளை இதேவேளை நீங்களும் நலவிழியும் மோதிரம் போட்டுக் கொள்கிறீர்கள் என்ன அப்படித்தானே?" என்று நபீசா கூறியதும் நலவிழியும் தகப்பனும் எல்லையில்லாப் பூரிப்பான பூரண மகிழ்ச்சியடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 12

நபீசா தனது வாழ்வுக்கு இவ்வளவு முக்கியத்துவம் தந்து மெழுகுபோல் உருகி மற்றவருக்கு வாழ்வுப்பாதை காட்டும்போது, நபீசாவின் வாழ்வில் ஏன்? நாம் பங்கும் பணியும் செய்யக்கூடாது என்ற நல்லாபிமானத்துடன் நலவிழி நபீசாவிடம் கேட்டாள்: "நபீசா நான் உனக்கிட்ட இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்பவள். அத்துடன் உன்னை மணம் முடிக்கவும், உன்மீது காதல் வயப்பட்டவர்களும் அதிகம். நீ ஒருத்தரையும் விரும்பாமல் இருக்கக் காரணம் என்ன? இதிலுள்ள இரகசியம் என்ன? உனது திருமணம் சம்மந்தமான செய்திகள், பேச்சுகள் எதுவுமே இல்லாமல் இருக்கிறது. இதற்கான காரணம் என்ன?"என்று.

நலவிழியின் கேள்வியால் பதட்டமும் பதிலும் இல்லாத நபீசா தனக்கு வரும் காதல் மொட்டைக் கடிதங்களை நினைத்துப் பார்த்தாள். அந்தக் கடிதங்ககளில் வரும் எச்சரிக்கை கடிதங்களை யாரிடமாவது சொன்னால் உயிர் ஆபத்து ஏற்படும் என்பதால், இந்த விடயத்தை யாரிடமும் சொல்லமுடியாதவளாக மனநோய் பீடிக்கும் அளவுக்கு அவள் அல்லல்பட்டுக் கொண்டிருந்தாள்.

இன்று நலவிழி கேட்ட கேள்விக்கு ஒரே ஒரு பதில் மட்டும் நபீசா கூறினாள்: "நலவிழி நான் உன்னிடம் மட்டும் எனக்குள் அடங்கிக்கிடக்கும் ஒரு இரகசியமான, ஆனாலும் அது எனக்கு ஆபத்தில் முடியும் ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். யாரிடமும் சொல்லாதே. நீ, நான் சொல்லும் ரகசியத்தை யாரிடமாவது சொன்னால் நான் உயிருடன் இருக்க மாட்டேன். அப்படியான சங்கடத்துக்குள் நான் அகப்பட்டு விட்டேன். என்னுடைய ஒவ்வொரு அசைவையும் ஒருவர் அவதானித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார். அவர் என்னைத் திருமணம் முடிக்கப் போகின்றாராம். நான் யாரையாவது திருமணம் முடித்தாலோ, அல்லது யாரையாவது விரும்பினாலோ எனது உயிருக்கு ஆபத்து ஏற்படுமாம்.

நான் இப்படி ஒரு மொட்டைக்கடிதத்துக்கு அஞ்சுகிறேன் என்று என்னை நீ கோழையாக நினைக்கலாம். அப்படியல்ல ஆனால், அந்த மொட்டைக்கடிதம் அனுப்புகிறவரின் மறைமுகமான சில ஆதரவுகள் எவ்வளவு நன்மையாக இருக்கிறது தெரியுமா? ஆபத்திலும் இறப்பிலும் முடிய வேண்டிய சில விடயங்கள் அந்த மனிதனால் மிகவும் நன்மை பயக்கின்றது. அதை நினைத்தால்தான் இது கற்பனையா? கனவா? நினைவா? நிசமானதா? என்ற கேள்விக்குறி என்னை அல்லும் பகலும் வாட்டி வதைக்கிறது.

எனக்குத் தெரிந்த வரையில் எத்தனையோபேரைக் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். யாரும் அந்த ஆளைப்போல் தோன்றவில்லை. உருவமும் தெரியாது விலாசமும் தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் கடிதத்தில் குறிப்பிடுகிறார். அதாவது, எனது பெயர் நபீசா என்றால் எனது பெயரில் பொருந்தி உள்ளதாம். அதாவது எனது பெயரை எழுதி தொங்கலில் இருந்து வாசித்தால் ஓரளவுக்கு அவருடைய பெயரான, சபீன் என்ற உச்சரிப்பு வருமாம். அதுதான் அவருடைய பெயராம் என்று மட்டும் விடுகதை கூறுகிறார். இதுதான் அவரைப் பற்றிய விபரம். வேறு எதுவுமே தெரியாது. இதைவிட உன்னிடம் கூறுவதற்கு வேறு எதுவும் என்னிடம் கிடையாது. ஒருவேளை நான் உன்னிடம் கூறிய இந்த விடயம் அந்த நபருக்கு தெரிய வந்தால், எனது உயிர் போயிடலாம்" என்று நபீசா சோகமாகக் கூறினாள்.

நபீசா கூறிய விந்தையான வேதனையான சம்பவத்தைக் கேட்ட நலவிழி கூறினாள்: "நபீசா! நீ இப்போது கூறிய வார்தையில் ஒரு சொல்லைக்கூட நான் யாரிடமும் சொல்லமாட்டேன். ஆனால், இந்த சபீன் என்பவர் யார்? என்பதைத்தான் நாம் அறிய வேண்டும்" என்று கவலைப்பட்டாள் நலவிழி.

"நலவிழி! சபீன் யாரென்று நாம ஆராய முற்பட்டால் அதுவே எனக்கு ஆபத்தாக முடிந்தால் என்ன செய்வது?" என்று நபீசா குழப்பமடைந்தாள்.

"சரிதான் நபீசா. இந்த நிலை நீடித்துக்கொண்டே இருந்தால், என்ன செய்வது? இதுக்கு முடிவு இல்லையா?" என்று நலவிழி கேட்டாள்.

"முடிவு சீக்கிரம் தெரிய வருமாம் என்று கடிதங்களில் எழுதப்பட்டிருக்கிறது" என்று அமைதியாகவும், ஆனாலும் அமைதிக்கான காலம் நீடிக்குமா? என்ற கேள்விக்குறியோடும் கூறினாள் நபீசா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் நபீசா நாம கொஞ்சம் பொறுமையோடு இருப்போம். இந்த விடயத்தில் நீ என்னிடம் எதையும் கூறாதே. அத்துடன் உனக்கு ஏதும் உதவி தேவையென்றால் என்னிடம் கூறு. நான் உன்னிடம் ஒரு சத்தியத்தை கூறுகிறேன். எப்போதும் நலவிழியான நான் என்பவள் 'நான் எனும் நீ' என்பதை மறந்து விடாதே" என்று கூறியவள், "நேரம் அதிகம் பேய் விட்டது. நாங்கள் போய்வருகிறோம்" என்று கூறிவிட்டு தந்தையும் மகளும் நபீசாவின் வீட்டை விட்டு வெளிறேம்போது நபீசாவுக்கு செல்போன் செய்தி வந்தது. "நபீசா நலவிழியையும் அவளுடைய தந்தையையும் வெளியே போகாமல் தடுத்து வீட்டுக்குள் மறைத்து வைத்துக்கொள். எனது அடுத்த செய்தி கிடைக்கும் வரைக்கும் அவர்கள் இரண்டு பேரையும் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையது. இது சபீனுடைய உத்தரவு" என்று சபீன் கூறினான்.

எதிர்பாராமல் வந்த இந்த அதிர்ச்சி ஊட்டும் செய்தியைகேட்ட நபீசா நலவிழியையும் தந்தையையும் பாதுகாப்பாக வைத்துவிட்டு ஏதும் கலவரங்கள் இன மோதல்கள் நடந்திருக்கிறதா? என்று அறிய அயலவர்களிடமும், அயலூர்க்காரர்களிடமும் தொலைபேசியின் மூலம் நபீசா விசாரித்தாள்.

நபீசாவுக்கு கிடைத்த செய்தி மிகப் பயங்கரமான பாதகமாக இருந்தது. அயலூர் கிராமத்திலுள்ள பள்ளிவாசலுக்குள் தொழுது கொண்டிருந்த முஸ்லீம்களை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்று பலரைக் காயப்படுத்தி இருக்கிறார்கள். இதனால் கோபங்கொண்ட முஸ்லீம்கள் தமிழ் மக்களின்மீது கோபத்தைக் காட்டுவதால் தமிழ், முஸ்லீம் இனக்கலவரம் எங்கும் நடக்கிறது. அதனால், தமிழ் மக்கள் முஸ்லீம் பகுதிக்கும், முஸ்லீம் மக்கள் தமிழ் பகுதிக்கும் போக வேண்டாம் என்றும், பொலீசும் பொதுமக்கள் நலன் விரும்பிகளும் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

சற்று நேரத்துக்கு முன்பு நபீசா சொன்ன சம்பவங்களையும் தற்போது சபீனிடம் இருந்து வந்த செய்திகளையும் எண்ணிப்பார்த்த நலவிழிக்கு நபீசாவின் தர்மசங்கடமான துன்பமும், துன்பத்தால் ஏற்படும் ஆக்க விளைவைப் பற்றியும் நலவிழி வியந்து போனாள். இப்படி ஆபத்தில் கை கொடுப்பவனும், தன்னை அறிமுகப்படுத்தாமல் மறைந்திருக்கும் இந்த மர்ம மனிதன் யார்? இது நலவவிழிக்கு மிகவும் குளறுபடியை ஏற்படுத்தும் விதமாக இருந்தது.

எப்படியாவது சபீன் என்ற மனிதனை அறியவேண்டும் என்ற எண்ணம் நலவிழிக்கு, நபீசாவை விட அதிகம் ஆவல் குடிகொண்டது. சபீனுடைய செய்தி வரவில்லையென்றால், நலவிழியும் அவளுடைய தந்தையும், காருக்குள் வைத்து உயிருடன் தீ வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்தப்பட்டிருப்பார்கள் என்ற அச்சமும், நடுக்கமும் தந்தைக்கும் மகளுக்கும் ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

இரவு பனிரெண்டு மணியளவில் நபீசாவுடைய வீட்டடியில் பொலீஸ் வண்டி வந்து நின்றது. வண்டியில் வந்த தற்போது பதவி உயர்வு பெற்று பொலீஸ் அத்தியட்சகராக, வந்து இறங்கிய கருணாரட்ண என்ற பொலீஸ் அதிகாரி நபீசாவை அழைத்தார். அவர் அழைக்கும் விதம் ஒரு குழந்தையை பரிவு பாசம் காட்டிக்கூப்பிடும் தந்தையைப்போல் இருந்தது.

அவரின் அழைப்புக்கு நபீசா, மழலை ஒன்று குழைந்து வந்து நிற்பதுபோல் வந்து நின்றாள்: “என்ன மகள்! கொஞ்சம் பயம்போல” என்று வாஞ்சையான வார்த்தைகளைப் பேசினார்.

“எதற்கும் பயமோ கவலையோ படக்கூடாது. நலவிழியையும் அப்பாவையும் அழைத்துக்கொண்டு போகத்தான் நாங்கள் வந்தோம். அவர்களை கூப்பிடு மகள்” என்று அன்பாகக் கூறினார்.

நபீசா வீட்டுக்குள் சென்று நலவிழியையும், தந்தையையும் அழைத்துக் கொண்டு வந்தாள். அவர்கள் இருவரையும் கண்ட பொலீஸ் அத்தியட்சகர், “தம்பி ரெத்தினம்! நீயும் உனது மகளும் எனது புள்ள நபீசாவால் காப்பாற்றப்பட்டிருக்கீங்க. நபீசா இருக்கும் வரையும் நமக்கு கடவுள் கருணை காட்டுவார்” என்று சொன்ன பொலீஸ் அத்தியட்சகர் “அதிகம் தாமதிக்காமல் நாட்டு நிலைமை மோசமாக இருக்கிறது. பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்பு படையினருக்கே பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது” என்று கூறிவிட்டு, தந்தையையும் மகளையும் அழைத்துக்கொண்டு போனார்.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் நலவிழியன் தந்தையிடம் ரெத்தினம் உன்னையும் உனது மகளையும் நபீசா காப்பாற்றி விட்டாள் என்று சொன்னது நலவிழிக்கு ஏதோ மர்மமான வார்த்தையாக இருந்தது. ஏனென்றால், சபீன் என்பவராகிய நபீசாவைக் காதலிக்கின்றவரின் தொலைபேசி அழைப்பால்தான் தானும் தந்தையும் காப்பாற்றப்பட்டது. அப்படி இருக்கும்போது, பொலீஸ் அத்தியட்சகர் சொன்னார் நபீசா காப்பாற்றினாள் என்று. இதன் மாயம் என்ன? இந்தக்கேள்வி நலவிழிக்கு முன்னுக்குப்பின் முரணான கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

எனவே, சபீன் என்ற அந்த மர்ம மனிதன், நல்லது செய்யும் அந்த மர்ம மனிதன் யார்? எங்கே? என்ற கேள்வி நலவிழியின் நாவில், சபீன், சபீன் என்ற வார்த்தை மந்திரச் சொல்லாகி, கனவிலும் நினைவிலும் நாள நரம்புகளிலும் நடமாடத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 13

எப்படித்தான் நன்மையான காரியங்களையும், யதார்த்தமான செயல்களையும் முன்னெடுத்துச்சென்று சேவைகள் செய்தாலும், நல்லது செய்யத் தெரியாத நல்லது செய்ய விருப்பம் இல்லாதவர்கள்; நல்லது செய்கின்றவர்களுக்கு, அவதூறும் அபாண்டமும் ஏற்படுத்துவது மனித இயல்பாக இருக்கிறது என்பதை அனுபவ அறிவாகக் கண்டாள் நபீசா.

தனது முன்னேற்றமான பாதையைக்கண்ட குடும்பத்தார்கள்கூட இப்போது பொறாமைக் கண்கொண்டு பார்க்கிறார்கள். பொறாமைக்காரர்களுக்கு வசை இல்லாது போனால் கட்டும் பிடவையின் கொசுவத்தில் வசை உண்டாக்குவார்கள் என்பதுபோல், குடும்பத்தவர்கள் நபீசாவின்மீது பூசும், பூசல் களிம்பு இதுதான். மாமியின் மாலையை களவெடுத்துக்கொண்டு, அதன் பயனாக படித்து பட்டம் பெற்று புகழாக வாழ்கின்றவர்களுக்கு இவ்வளவு பவுசியும் பெருமையுமா?

எப்படித்தான் படித்து பட்டம் பெற்றாலும், மாமியின் மனம் நொந்தால், நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டான். நல்ல வாழ்வும் அமையாது என்று, மாமி அடிக்கடி அழுக்காறு கொண்டு பேசும் வார்த்தைகள் பொறாமைக்காரர்களின் வாயிலாக நபீசா கேள்விப்படும்போது, அவளுக்கு வேதனையான சிரிப்பும் அழுகையும் வரும். அதை அவள் யாரிடமும் காட்டிக் கொள்வதில்லை. எதற்கும் ஒரு காலமும் நேரமும் வரும் என்று, அவள் இதயத்தால் அமைதி அடைவாள்.

மாறுதல் என்ற சொல்லைத்தவிர, மற்றவை அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கும் என்னும் இயற்கை தத்துவத்தின் அடிப்படையில், மூத்த மாமியின் கணவன் தங்கமாலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திக்கொண்டு, வெளிநாடு போய் இலட்சக்கணக்காக பணம் உழைத்து இன்று இளையமாமியை விடவும் வசதி வாய்ப்பாக வாழ்கின்றாள். அதைக்கண்டு நபீசா மனதுக்குள் மகிழ்ந்தாள். பணத்தையும், பொன்னையும் மனிதன் பூட்டி வைக்காமல், ஒருத்தருக்கொருத்தர் உதவிசெய்தால், எல்லோரும் எல்லாமும் பெற்று வளமாக வாழலாம் என்பது எவ்வளவு உண்மை. நபீசா தான் கற்ற நவீன பொருளாதார கோட்பாடுகள் எவ்வளவு சிறப்பானது என்றெல்லாம் எண்ணிப் பூரிப்படைந்தாள்.

சோசலிச பொருளாதாரத்தின் சமத்துவ அடிப்படையில் பொருள் வளம் பெற்றிருப்பவர்கள், இல்லாதவர்களுக்குக் கைகொடுத்து இணையவில்லையென்றால் அந்தச் சமூகம் கலகம், திருட்டு, பயங்கரவாதம், கொள்ளை, கொலைச்சமூகமாக உருவெடுக்கும். எனவேதான், சோசலிச அரசுகள் தனியுடமை பொருளாளர்களின் சொத்துக்களை அரசமயப்படுத்தி, எல்லோருக்கும் பொதுவான சொத்துக்களாக நடைமுறைப்படுத்தியதால் பல நாடுகளில் முன்னேற்ற அபிவிருத்திகள் ஏற்படலாயின. இதுபோன்ற சரித்திர வரலாறுகளில் ஏற்பட்ட மாற்றங்களை மார்க்கிசத்தின் மூலமாகவும், கம்யூனிசத்தின் மூலமாகவும் நபீசா கற்றறிந்திருக்கிறாள். எனவேதான், தனது 'மூத்தமாமியின் பொருளாதாரம் சீதனம் என்ற அபகரிப்பின் மூலமாக தங்களுக்குரிய சொத்துக்கள் தனி ஒரு மனிதனிடம் உறைந்து கிடந்ததால் தங்களின் குடும்பத்தவர்களுக்கு வறுமை ஏற்படக் காரணமாக அமைந்தது'. இதனை பகுத்துப்பார்த்த நபீசா தனது மூத்தமாமியின் முன்னேற்றத்துக்கு தன்னால் இயன்ற உதவியை செய்திருந்தாள்.

ஆனாலும் வசை என்ற விசம் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டே இருந்தது. எதற்கும் காலமும் நேரமும் உண்டு என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நபீசா எதிர்பாராமல் மூத்தமாமி வந்து, "மகள் நபீசா! வீட்ட கொஞ்சம் வந்து போ மகள்" என்று அழைத்தாள்.

மூத்தமாமியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட நபீசா மூத்தமாமியின் வீட்டுக்குப்போனாள். அங்கே, மாலை திருட்டுப்போன இளையமாமி, மாமியின் கணவர், குடும்ப உறவினர்கள், அக்கம் பக்கத்து சனங்கள் இன்னும் அதிகமானவர்கள் கூடியிருந்தார்கள்.

அவர்களின் மத்தியில் நபீசாவின் மூத்தமாமி ஒரு பெட்டிக்குள் இருந்த மாலையை எடுத்து எல்லோருக்கும் காட்டிக் கூறினாள்: "இந்த மாலைதான் எனது தங்கச்சியின் களவுபோன மாலை. இதைத்தான் எனது அன்பு மருமகள் நபீசா களவெடுத்தாள் என்று, எனது தங்கச்சி அவளுக்கு அவப்பேரு சொன்னாள். அவள் ஒருபோதும் களவெடுக்கவுமில்லை; அவளுக்கு களவும் தெரியாது. இந்த மாலை களவாடப்படவுமில்லை; மாறாக கையாடப்பட்டது. நான்தான் கையாடினேன். ஏன் நான் இதை கையாடினேன் தெரியுமா? இந்த மாலையை விடவும் அதிகமான எனது பங்குக்குரிய சொத்துக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி, பூமி, வளவுகளையும் எனது தங்கச்சியும், அவளுடைய புருசனும் சீதனம் என்ற பெயரில் பகல் கொள்ளை அடித்துக்கொண்டார்கள். அதற்காகத்தான் நான் இந்த மாலையை கையாடினேன். ஆனால், இந்த மாலையை நான் கையாடினேன் என்று சொல்ல முடியாது. என்னிடமிருந்து கொள்ளையிடப்பட்டு பறிக்கப்பட்ட எனது பங்குக்குரிய சொத்தில் ஒரு சிறு பங்கைத்தான் நான் கையாடலாக எடுத்துக்கொண்டேன் என்றுதான் சொல்லலாம். ஆனால், திருட்டுக் குற்றச்செயலுக்கு எனது தங்கை என்னை ஆட்படுத்தி கையாட வைத்த பாவம் அவளை சும்மா விடாது.

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். எனக்கு ஏற்பட்ட பஞ்சமும் பசியும் எப்படியானது என்று உங்களுக்குத் தெரியும். எனது புருசன் வெளிநாட்டுக்கு வேலைக்குப்போய், இரண்டு முறை ஏமாற்றப்பட்டு, எங்களிடமிருந்த எல்லாப் பொருளும் நாசமாப் போச்சு. யாராவது ஒருவர் ஒரு பிடிச்சோறு தருவதற்குக்கூட மனம் இல்லாதவர்களாக இருந்தார்கள். திரும்பிய பக்கமெல்லாம் கடன் என்ற சொல்லே ஒலித்துக் கொண்டிருந்தது. என்ன செய்வதென்றே தெரியாமல், நானும் எனது புருசனும் பிள்ளைகளும் தவித்துக் கொண்டிருந்தோம். யாராவது கடன் தந்தால் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி மீண்டும் புருசனை வெளிநாடு அனுப்பலாம் என்று கடன்தேடி அலைந்தேன். யாரும் எங்களுக்கு கடன் தரவில்லை.

எனது தங்கச்சி செல்வச்செளிப்பில் வாழ்ந்து கொண்டிருப்பவள்.ஈவு இரக்கம் என்பது என்னவென்று தெரியாதவள். எவ்வளவோ உதவி செய்யக்கூடிய வாய்ப்பு வசதி உள்ளவள். என்னைப்பற்றி எந்த நினைப்பும் இல்லாதவள்.அவளிடம் கேட்டால் தரவே மாட்டாள். அதனால்தான் நான் அவளுடைய இந்த மாலையை களவின் பேயரால் கையாடினேன்.

எப்படி நான் இந்த மாலையை களவின் பெயரால் கையாடினேன் தெரியுமா? இந்த மாலை களவுபோன அன்று இரவு எனது தங்கச்சியின் வீட்டில் பெரும் செல்வந்தர்களுக்கு மட்டும் அறுசுவை விருந்து நடந்து கொண்டிருந்து. அந்த விருந்தின்போது, பசிக் கொடுமையின் காரணமாக எனது அன்பு மருமகள் நபீசா எடுபிடி வேலைசெய்து கொண்டிருந்தார். அப்போது, கிணற்றடியில் பீங்கான் கோப்பைகளை கழுவிக்கொண்டிருந்த நபீசாவிடம் எனது வளவுக்குள்ளிருந்த நான் கேட்டேன்: மன! இவள்ள ஊட்ட நீ ஏன் வந்த? வாப்பா கேள்விப்பட்டா கடுமையா அடிச்சி போட்டிடுவானே என்று; அதற்கு நபீசா சொன்னாள்: 'மாமி கடுமையா பசிச்சிச்சி. வேல செஞ்சி கொடுத்துப்போட்டு ஒழுப்பம் சாப்பிடலாம் என்றுதான் வந்தேன் மாமி. நீங்க சாப்பிட்டங்களா? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபீசா என்னிடம் கேட்டா. அப்போது எனது சின்னக்குழந்தை சொன்னது: உம்மா சோறாக்கி ரெண்டு நாள் மச்சி என்று. இதைக்கேட்ட நபீசா, உடனே போய் எனது தங்கச்சிக்கு தெரியாமல் அவசரமாக இரண்டு பார்சல் சோற்றை சொப்பின் பேக்கினுள் போட்டுக்கொண்டு வந்து என்னிடம் தந்தா.

சொப்பின் பேக்கில நபீசா சோத்துப்பார்சல கொண்டு வந்து வேலிக்கி மேலால தந்தவுடன நான் வாங்க மறுத்தேன். என்ர புள்ள விடாப்பிடியாக, மாமி இந்தச் சோற்றுக்கு நாமெல்லாம் சொந்தக்காரர்கள் மாமி. புடிங்க மாமி என்று அவசர அவசரமாக தந்தா. பசியோடு இருந்த எனது பிள்ளை வாங்குங்கம்மா என்று சொன்னது. உடனே, நான் சோற்றுப்பார்சலை வாங்கிக்கொண்டுபோய் சொப்பின் பேக்கினுள் இருந்த சோற்றுப்பார்சலை எடுத்ததேன். அதற்குள் இந்த மாலை இருந்தது. மாலையைக் கண்ட எனக்கு என்ன செய்யிறண்டு யோசித்துக் கொண்டிரிந்தேன். என்ர வறுமையும் பஞ்சம் பசியும் ஒரு புறம், பயமும் நடுக்கமும் ஒருபுறமாக கவலைப்பட்டுக்கொண்டு என்ன நடக்குது என்று பார்ப்போம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

தங்கச்சிர வீட்ட விருந்து நடந்தபோது, தங்கச்சியின் கழுத்திலிருந்து களண்டு விழுந்த இந்த மாலய அவசரத்தில சொப்பின் பேக்குக்குள்ள சுத்தி, சுவரில பூக்கல்லுக்குள்ள வெச்சிப்போட்டு, விருந்தெல்லாம் முடிந்த பிறகு, இரவு பத்து மணி மட்டில மாலய பாத்தாள். மாலய காணல்ல. நபீசாதான் களவெடுத்துக்கு போயிட்டாள் என்று, நபீசாவிடம் கேட்டு தங்கச்சி சண்ட புடிச்சபோது, நபீசாட வாப்பா என்ர தம்பி வந்து தங்கச்சிக்கி அடிச்சது, நபீசாவுக்கு நபீசாட உம்மா இவள்ள ஊட்ட நீ ஏண்டி போகணும் என்று எண்ட புள்ளைய போட்டு அடிச்ச அடியெல்லாம், என்னால் மறக்கமுடியல்ல. இப்படியெல்லாம் அடி, உதை அவமானம்பட்ட போதெல்லாம் எனது தங்க மகள் நடந்த சம்பவத்த கூறல்ல.

"அடியும் அவமானமும் பட்டாலும் கவலை இல்லை. பொலீஸ்காரர்கள் வந்து நபீசாவை பிடித்துக்கொண்டுபோக வந்தபோது, எனக்கு கவலையும் இரக்கமும் வந்தது. உடனே நான் கையாடிக்கொண்ட மாலையை தங்கச்சியிடம் கொடுப்போம் என்று எடுத்துக்கொண்டு வந்தேன். அப்போது, எனது மருமகள் நபீசா எதற்கும் அஞ்சாதவ. எனது நோக்கத்தைப் புரிந்துகொண்டு என்னிடம் கூறினாள்; 'மாமி நீங்க வந்த என்ன? வீட்ட போங்க' என்று கூறியபோது, எனக்கு உண்மையின் நிலைப்பாடு விளங்கியது. மாமி மாலை உங்களின் கையில் அகப்பட்டதுபோல் அதைப் பயன்படுத்தி, நீங்க உங்களின் வறுமையைப் போக்க வழி தேடுங்க என்று, நபீசா தனது துன்பத்திலும் அவமானத்திலும் எனக்கு புத்தி கூறுவது போலிருந்தது. உடனே நான் மாலையை கொடுக்காமல் வீட்டுக்கு வந்து வட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி கையாடப்பட்ட இந்த ஆறு பவுண் மாலைய வங்கியில் அடகு வைத்து ஒரு இலட்சம் ரூபா கடன் எடுத்து எனது கணவனை வெளிநாடு அனுப்பினேன். இந்த மாலைய கையாடிக்கொண்ட அன்று எனது மருமகள் நபீசா பட்ட ஒவ்வொரு அடியும் எனது நெஞ்சில் பட்ட அடியாகவும், அவ கேட்ட அவமானமான பேச்சுக்களும் இன்று வரையும் எனக்கே அவமானமான வேதனை என்று நான் வேதனை படாத நாளே இல்லை'' என்று கூறிக்கொண்டே மூத்தமாமி அழுதாள். இன்னும் சிலரும் அழுதவாறு அவள் கூறும் சம்பவத்தைக் கேட்டு, ஆச்சரியப்பட்டவர்களாக இருந்தார்கள். மூத்தமாமி பேச்சைத் தொடர்ந்தாள்.

"நபீசா அந்த நேரம் என்னிடம் அப்படிச்சொல்லாமல், பொலிஸ்காரர்களுக்குப் பயந்து உண்மையைச் சொல்லி என்னைக் காட்டிக் கொடுத்திருந்தால் இந்த மாலை மட்டும் மாலையாக எனது தங்கச்சியின் இதயம் இல்லாத இரும்பு பெட்டியில் இன்றும் சும்மா கிடந்திருக்கும். எனது துன்பத்தை அறிந்து என்னைக் காட்டிக் கொடுக்காமல், அடியாலும் அவமானத்தாலும் பொறுமைகாத்த எனது பாசமான அன்பு மருமகளின் தியாகத்தாலும், கல்வியின் மேன்மையாலும் இன்று இந்த மாலை எங்களின் பிள்ளைகள் ஐந்துபேர்கள் சந்தோசமாக வாழவும், எங்களின் கடனெல்லாம் தீரவும் சொத்து சுகம் பெற்றுக்கொள்ளவும் உதவி செய்திருக்கிறது.

அன்று எங்களின் துன்பத்துக்கு எனது தங்கச்சி மனம்விரும்பி இந்த மாலையை என்னிடம் தந்து வங்கியில் வைத்து, பணம் எடுத்து உனது தேவையை பூர்த்தி செய்துவிட்டு பிறகு மாலையை வங்கியிலிருந்து மீட்டுத்தா என்று கூறியிருந்தால் அது தங்கச்சிக்கு எவ்வளவு பெருமையும் நன்மையும் ஏற்படும். ஆனால், எந்த நன்மையும் இல்லாமல் சிறப்பும் இல்லாமல் ஒரு அப்பாவியை களவுக்குற்றம் சாட்டி, அவமானப்படுத்திய பாவம்பழி எனது தங்கச்சியை விட்டு நீங்குமா? இதயம் இல்லாதவர்களின் பொருள் எப்படியெல்லாம் சிலருக்கு இழிவையும் பாவத்தையும் எற்படுத்துகிறது தெரியுமா?

ஒருசதக் காசிக்கும் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும் வழியல்லாத எனது மருமகளின் இதயத்தில் இரக்கமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற பாச உணர்ச்சியும் இருந்ததால் எப்படி இறைவன் நபீசாவுக்கு நன்மையையும் புகழையும் ஏற்படுத்தியிருக்கிறான் பார்த்தீர்களா?

நன்மை செய்ய விருப்பம் இல்லாதவர்களின் பொருளும், செயலும் எப்படி அவர்களுக்கு இழிவையும் பழியையும் ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டீர்களா?

எனது மருமகள் குடும்பத்துக்கு ஒரு குலவிளக்கு மட்டுமல்ல; சமூகத்துக்கும் அவ குன்றின் மேல் வைத்த ஒளிவிளக்கு. எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை எளிய பெண் பிள்ளைகளுக்கு மிக இலகுவாக நல்ல திருமணங்கள் முடித்து வைத்திருக்கிறா. எத்தனையோ படிக்க வசதி இல்லாத, படிக்க விருப்பம் இல்லாத பிள்ளைகளை படிக்க ஊக்கப்படுத்தி, அரச உத்தியோகத்தில் முன்னேறச் செய்திருக்கிறா. எனது மூத்த மகனுக்கும், இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் மங்கலமாக, மகிழ்ச்சியான கல்யாணம் கட்டி வைப்பதற்காக வழிகாட்டி வாழ வைத்திருக்கிறா. இப்படிப்பட்ட குலமகள் களவுப்பேர் கேட்டு தலை குனிந்து வாழுவதா? இன்றிலிருந்து எனது மருமகள் நபீசாவை யார் யாரெல்லாம் இந்த மாலை சம்மந்மாக சந்தேகம் கொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லாம் இன்றுடன் அந்த சந்தேகத்தை நீக்கி நபீசா களங்கமில்லா தூய மகள் என்று நம்ப வேண்டும்'' என்று கூறிய மூத்தமாமி மாலையை தனது தங்கையிடம் கொடுத்தாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த உறவினர்களுக்கும், சுற்றுப்புறத்தினர்களுக்கும் படிப்பினை ஒருபுறம்; ஆச்சர்யம் ஒருபுறம். தியாகம் ஒருபுறம்; நன்மையான காரியம் செய்வதற்கு எப்படியான பாதைகளும் படிப்பினைகளும் இருக்கிறது என்பது ஒருபுறம்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இளையமாமியின் கணவர் சொன்னார்: "சபீனா. உங்களின் நல்ல செயல்களுக்கு அந்த மாலையை நீங்களே பரிசாக எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அன்பாகக் கூறினார்.

அவர் அப்படிச் சொன்னதும், அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் அது உண்மையாகவும் அன்பாகவும் தோன்றியது.

இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த நபீசா கூறினாள்: "நல்லதை செய்துவிட்டு, பரிசோ பிரதி உபகாரமோ பெறுவது நல்லமல்ல; நல்லசேவைக்கு நல்ல பாராட்டு இருந்தால் போதும். எத்தனையோ பேர்கள் நல்லதை செய்துவிட்டு, பரிசு என்ற பெயரில் இலஞ்சம் வாங்குகிறார்களே? இலஞ்சத்தை பரிசு என்று கூறலாமா? பரிசோ உபகாரமோ இல்லாமல் எதிர்பாராமல் செய்யும் சேவைகள் மிகப்பெரிய சேவைகள். எனது மாமியும் மாமாவும் நினைத்தால் எவ்வளவோ நன்மைகள் செய்யலாம். ஆனால், அவர்களுக்கும் அவர்களைப் போன்றவர்களுக்கும் அந்த மனமே இல்லை. எனவே, அந்த மாலை எனக்குத்தேவை இல்லை. ஆனால், அந்த மாலை தேவைப்பட்டவர்கள் இதோ இங்கு இருக்கும் நமது உறவினர்கள், சுற்றத்தார்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுத்தால் எவ்வளவு நன்மையாக இருக்கும்'' என்று கூறிய நபீசா இளையமாமியின் முகத்தையும், மாமாவின் முகத்தையும் பார்த்தாள். அவர்களின் முகத்தில் ஈவது என்ற சொல்லுக்கு இடமே இல்லாமல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 14

ஒவ்வொரு ஆக்கத்துக்கும் சிறு சிறு தாக்கமான எதிர் விளைவுகளும் இருப்பது இயற்கையே. இதனைப்புரிந்து கொண்டால் எதையும் சமாளித்து எதிர்நீச்சல் போடலாம்.

நபீசாவின் செயல்களில் நன்மையான ஆக்க விளைவுகள் இருந்தாலும், சிலருடைய பொறாமைப் பார்வையில் பேதம் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. தனது இளைய சகோதரர்கள் இரண்டு பேர் திருமணம் முடித்துக்கொண்டார்கள். ஏன்? நபீசா இன்னும் திருமணம் முடிக்கவில்லை. கல்யாணம் கட்டிக்கொள்ளாத வயது வந்த கன்னிப்பெண்ணை காண்பவர்கள் என்ன நினைப்பார்கள்? எப்படிக் கதை கட்டுவார்கள்?

நபீசாவுக்கு ஏற்பட்ட இந்த தாக்கம் இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது. கல்யாணம் சம்மந்தமாக அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். மொட்டைக்கடிதம் போடுகின்ற அந்த நபர் யார்? தனது கல்யாணம் சம்மந்தமாக தனது முடிவு என்ன? இதுதான் நபீசாவின் தீர்மானமாகவும் தீர்க்கமான முடிவாகவும் இருந்தது.

இப்படி அவள் இதயம் அலைமோதிக் கொண்டிருக்கும்போது, இரண்டு கார் வண்டிகள் தனது வீட்டுக்கடப்படியில் வந்து நின்றன. கார்வண்டியில் இருந்து பலர் தனது வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் நபீசாவுக்குத் தெரியும். அதில் முக்கியமானவர் சுலைமான் விதானை.

சுலைமான் விதானை பெரும் செல்வந்தர்; பெரும்புள்ளி. அவர் எதற்காக தனது வீடு தேடி வர வேண்டும் என்ற சிந்தனையுடன் நபீசா அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தாள்.

சுலைமான் விதானை வந்த நோக்கம் தனது ஒரே ஒரு மகன் இன்ஜீனியர். இன்ஜீயர் மகனுக்கு படித்த பண்புள்ள மணமகள் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம் வீடு வளவு எதுவுமே தேவை இல்லை. நபீசா சம்மதித்தால் இன்றைக்கே திருமணத்தை முடித்துக் கொள்ளலாம். இது சுலைமான் போடியாரின் உண்மையான நன்மையான முடிவாக இருந்தது.

நபீசாவின் வாப்பாவும் உம்மாவும் சந்தோசத்தின் இறுதி முடிவுக்கு வந்தவர்களாக நபீசாவின் முடிவைக்கேட்டு, தாகம் கொண்டவர்களாக இரங்கி நின்றார்கள். நபீசா மௌனமாக இருந்தாள். உம்மாவும் வாப்பாவும் இரங்கிக்கேட்கும் வார்த்தையின் வாஞ்சையைக்கண்டு ஓவியம்கூட வாய் திறந்து "ஆம் சம்மதிக்கிறேன" என்று கூறிவிடும். ஆனால், சபீனா பேசவில்லை.

கைக்கு எட்டிய அதிர்ஷ்டம் கை நழுவப்போகுதே என்று நபீசாவின் தாயும் தந்தையும் பேதலித்து அழுதார்கள். நபீசா வாய் திறக்கவில்லை. நபீசாவை அடித்து வாய் திறக்கச் செய்வோமா என்றுகூட நபீசாவின் தந்தை கோபப்பட்டார். நபீசா நாவு அசைக்கவில்லை.

அப்போது கைத்தொலைபேசி மணி அடித்தது. நபீசா தொலைபேசியை எடுத்தாள். "ஹலோ"

"நான்தான் சபீன்" என்றான் சபீன். பேச்சில் பரிவும் பற்றும் இருந்தது.

"என்ன?" என்று நபீசா கோபமும் சோகமுமாகக் கேட்டாள்.

"பெண் கேட்டு வந்திருக்கிறார் சுலைமான் விதானை. அப்படித்தானே?" என்று சபீன் எரிச்சலோடு ஏளனமாகக் கேட்டான்.

"கொடிக்கு பூங்கொடிக்கு கொழு கொம்பு வேண்டும். அது உங்களுக்குத் தெரியுமா?" என்று அடக்கமாகவும், ஆத்திரமாகவும் கேட்டாள் நபீசா.

"கொடிக்கு பூங்கொடிக்கு கொழுகொம்பு. தெரியவில்லையே" என்று சபீன் கேட்டான்.

"தெரியவில்லையா; தெரிந்தால் சுலைமான் விதானை அவருடைய மகனை கொழுகொம்பாக்க என்னைத்தேடி வந்திருப்பாரா?" என்று நபீசா கேட்டாள்.

"அப்படியென்றால், நான் என்ற கொழுகொம்பு யார்? என்று நீங்கள் அறியவேண்டும். சொல்கிறேன் கேளுங்கள். சில நேரங்கள் மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆச்சரியங்களைப் பற்றி உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அதை நீங்களே வாழ்வில் அனுபவித்த ஆச்சரியங்களைப் பெற்றிருப்பீர்கள். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஆச்சரியங்களும், அதிர்ஷ்டங்களும் ஏற்படும். அவற்றை அறிவு இல்லாதவன் அறவே கவனிப்பதில்லை. அறிவு உள்ளவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைக்கொண்டு கணப்பொழுதில் ஆராய்ந்து அனுபவித்து அனுபவப்பட்டவனாவான். இந்த அனுபவ அறிவைப்பெற்ற உங்களிடம் இப்போது நான் யார்? ஏன் இவ்வளவு காலமும் என்னை உங்களிடம் காட்டிக்கொள்ளாமல் இருந்தேன் தெரியுமா?

"நேற்று உங்களின் மூத்தமாமி உங்களை அழைத்து உங்களின் இளையமாமியின் மாலையை நீங்கள் திருடவில்லை என்றும், அதைக் கையாடிக்கொண்டது மூத்தமாமிதான் என்றும் ஒப்புக்கொண்டு உங்களை நிரபராதி என்று கூறினாள். அத்துடன் உங்களின் நல்ல சேவைகளையும் தெரியப்படுத்தினாள். இப்போது தூயவளாகக் காணப்படும் உங்களிடம் களங்கம் இல்லை. உங்களின் மாமி மாலை திருடிய அந்தக் குற்றத்தை ஒப்புக்கொண்டு, உண்மையை வெளிப்படுத்தவில்லையென்றால் நீங்கள் இழிவான குற்றத்துக்கு உடந்தையானவள்தானே?

களவுக்குற்றத்துக்கு உடந்தையான ஒரு பெண்ணை, அதிலும் தனது மனைவியின் மாலையை திருடிக்கொண்ட ஒருத்தியை தனது தம்பி திருமணம் முடிக்கப்போகிறான் என்றால் அதை எந்த ஒரு சகோதரனும் ஏற்றுக்கொள்வானா?" என்று சபீன் கேட்டதும், நபீசா பெரும் வியப்புடன் நிலைதடுமாறினாள்

சபீன் தனது இளையமாமியின் கணணவரின் தம்பியா? என்பதை நபீசாவினால் நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்தது. என்னை இவர் ஏன் விரும்ப வேண்டும்? இவருடைய பெற்றோர்களும், உறவினர்களும் என்னை இவருக்கு மணம் முடித்துக்கொடுக்க விரும்புவார்களா? இதன் விபரீதம் என்ன? தனது அறிவு அனுபவமெல்லாம் ஒன்று திரண்டு பொங்கும் கடலாக கரை கடந்து வந்து நபீசாவை மூழ்கடித்து மூச்சித்திணற வைத்தது.

தனது இளையமாமியை சபீனுடைய காக்காவுக்கு கல்யாணம் கட்டிவைப்பதற்காக நபீசாவுடைய மூத்தப்பா எடுத்துக்கொண்ட விரதமும் சீதன விலையும், மறக்க முடியாத கொடும் வேதனையாக சனங்களால் பேசப்பட்டுக்கொண்டிருக்கும்போது இருக்கக்கூட வசதியான ஒரு வீடு இல்லாமல் அரசாங்க சம்பளப்படியை மட்டும் நம்பி வாழும் நபீசா, அத்துடன் சபீனுடைய தந்தையிடம் கூலி வேளாண்மை செய்யும் நபீசாவின் தந்தை; இப்படிப்பட்ட ஆண்டான், அடிமை என்ற பேத வர்க்கத்தின் பெரும் பேர்க்குல வம்சம் என்ற சபீன் தன்னை ஓர்மையுடன் காதலித்து கல்யாணம் கட்ட கடின முயற்சி எடுத்த காரணம் என்ன என்று தொலைபேசியை வைத்துக்கொண்டு, யோசித்தவளாக மௌனமாக இருந்த நபீசாவிடம் சபீன் கேட்டான்: "என்ன? நபீசா பேசாமல் இரிக்கீங்க. நான் கேட்பது உங்களுக்கு சரியாகப்படவில்லையா?" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரியாகத்தான் படுகிது. ஆனாலும் நீங்க ஏன் என்னை, தராதரம் இல்லாதவளை விரும்பணும்? இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை நான் விரும்பவும் மாட்டேன்" என்று நபீசா வெறுப்பாகவும், விரக்தியாகவும் தொலைபேசித்தொடர்பை துண்டிக்கும் எண்ணத்துடன் கூறினாள்.

நான் கொஞ்சம் பேசுகிறேன். கேட்டுவிட்டு உங்களின் முடிவை கூறுங்கள். நீங்கள் கூறுவது போன்றுதான் எனது முடிவும். எனக்கும் எத்தனையோ திருமண அழுத்தங்கள் வருகிறது. அவற்றையெல்லாம் வெறுத்துவிட்டு உங்களை நான் நாடுகிறேன்.

எப்போதும் ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பெண் விரும்பும் திருமணத்தைவிட ஆண் விரும்பும் திருமணத்துக்கே வலிமை அதிகம். அதுதான் வாழ்வில் கடைசி வரையும் அன்பாக ஆசீர்வதிக்கப்பட்டு அமரத்துவமடையும்.

நான் என்ற காதலன் உங்களுக்கு வழங்கப்பட் மிகப்பெரிய பரிசு. அந்தப் பரிசை நீங்கள் அன்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவரையும் நான் யார் என்பதை தெரியப்படுத்தாத காரணத்தை நீங்கள் இப்போது புரிந்து விட்டீர்கள். அதற்காகத்தான் நான் ஆரம்பத்தில் உங்களுக்கு சலீம் - அனார்கலி சம்பவத்தை மையமாக வைத்து காதல் கடிதம் எழுதினேன். இப்போது நான் யார் என்பதை நீங்கள் அறிந்து விட்டீர்கள்.

பார்த்தீர்களா? நீங்கள் என்னை ஏற்க மறுக்கின்றீர்கள். எனவேதான், ஆரம்பத்தில் உங்களிடம் என்னைப் பற்றி நான் யார் என்பதை தெரிவித்திருந்தால் நிச்சயமாக நான் என்ற காதலனான பரிசை நீங்கள் வேண்டாம் என்று வெறுத்து தட்டிக் கழித்திருப்பீர்கள். எனவேதான், உங்களின் கன்னி இதயத்தில் கொஞ்சம் காதல் விதை விதைத்து, வேர் கொள்ளச்செய்தேன். இப்போது, வேர் விழுதாகி உங்களின் இதயம் கொஞ்சம் காதல் ஏக்கத்தில் கனத்திருக்கும் என்று எண்ணுகிறேன்; நம்புகிறேன்.

நீங்கள் சபீன் என்பது யார்? என்று அறிய எத்தனை பிரயத்தனங்கள் எடுத்தீர்கள். உங்களால் அந்தப் பெயருடைய நபர் நான்தான் என்பதை எப்படியும் அறிய முடியாது. காரணம் என்னவென்றால் நான் இரகசியமாக அரசாங்க கடமை செய்கின்றவன். நான் என்ன கடமை செய்கிறேன்? எங்கே கடமை செய்கிறேன் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், காண்பவர்களுக்கு நான் ஏதும் வேலை இல்லாதவனைப்போல்தான் தெரிவேன். எனது இரகசியங்களும், தொழில்பாடும் கருணாரட்ண பொலீஸ் அத்தியட்சகருக்கு மட்டுந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். அவர் என்னிடம் பல ஆளமான இரகசியங்களை சொல்லி இருக்கிறார். அதனால், அவருடைய ஆட்படலின் நிழல்தான் சபீன் இர்சாத் என்னும் நான்.

சபீன் இர்சாத் என்பது எனது பெயராக இருந்தாலும் வெளியில் பேசப்படும் பெயர் இர்சாத் என்பது மட்டுந்தான். சபீன் என்ற பெயர் மறைமுகமாக இருப்பது. எனவேதான், உங்களால் சபீன் என்னும் என்னை அடையாளம் காணமுடியாமல் இருந்தது'' என்று சபீன் கூறியதும் நபீசாவினால் சபீன் கூறும் வார்த்தைகளைக்கேட்டு, வாயடைத்துப் பிரமித்துப் போனதுடன் நபீசா, சபீன் என்ற இரும்புப்பிடியில் சிக்குண்ட சிங்கம்போல் எதுவும் செய்ய முடியாமல் சபீனுடைய வார்த்தைக்குப் பின்னால் இரும்புக் கூட்டுக்குள் அகப்பட்ட சிங்கம் எங்கு கொண்டு செல்லப்படுகின்றதோ, எதற்காக கொண்டு செல்லப்படுகின்றதோ, என்பதையெல்லாம் அறியாமல் அறிய முடியாமல் அடைபட்டுக்கிடப்பது போன்று நபீசா ஆட்படலானாள். சபீனுடைய வார்த்தைக்கு "ஆம். சம்மதம்தான்'' என்று சபீனிடம் சங்கமமானாள்.

சபீனுடன் நபீசா தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருப்பதால், சுமைான் விதானை வந்திருப்பதை மறந்தவளாக பேசிக் கொண்டிருக்கும்போது நபீசாவின் உம்மா வந்து, "மகள் மாமா சுலைமான் விதானை போகப்போகிறார். உனது முடிவைச் சொல்லு மகள்'' என்று இரங்குவது போன்று கேட்டாள்.

உம்மாவின் இரங்கும் வார்த்தையைக் கேட்ட நபீசா கூறினாள்: "உம்மா நீங்க பணிவாக அவர்களிடம் சொல்லுங்க இப்போது மகளுக்கு கல்யாணம் முடிக்கும் எண்ணம் இல்லையாம்'' என்று.

இப்படி நபீசா கூறியதும் நபிசாவின் தாய் தாங்கமுடியாத சோகத்துடன் சுலைமான் விதானையிடம் விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் எதைச் சொல்வது என்று தயங்கி நின்றாள். சுலைமான் விதானை உங்களின் முடிவை ஒரு கிழமைக்குள் தெரிவிக்க வேண்டும் என்று கூறிவிட்டு போய்விட்டார்.

நபீசா தன் தாயிடம் கூறிய வார்த்தையை தொலைத்தொடர்பில் கேட்டுக்கொண்டிருந்த சபீனுக்கு நபீசாவின் மன முடிவும், நபீசா யாரை மணம்முடிக்க வேண்டுமென்ற மண முடிவையும் முடிவெடுத்து விட்டாள் என்ற முடிவையும் புரிந்து கொணட சபீன் கேட்டான்: "நபீசா! நாம் எப்போது நமது திருமணத்தை வைத்துக்கொள்வோம்'' என்று.

சபீன் தன்னை எதிர்பாராமல் அறிமுகப்படுத்திவிட்டு பல அசத்தலான வாாத்தைகளையும் கூறிவிட்டு, இப்போது எதிர்பாராமல் எப்போது கல்யாணத்தை வைத்துக்கொள்வோம் என்று கேட்டதும் பேசமுடியாமல் நபீசா திக்குத் தடுமாறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன? நபீசா பேசாம இரிக்கங்க" என்று கேட்டான் சபீன்.

"நீங்களே அனைத்து காரியங்களையும் கதாபாத்திரங்களையும் அமைத்துவிட்டு, எப்போது அரங்கேற்றம் என்று கேட்டால் நான் எதைச்சொல்லுவது" என்று கேட்டாள் நபீசா.

"நபீசா நீங்க சொல்லுவது சரிதான். எதற்கும் ஒரு சம்பிரதாயம் உண்டு. நாங்கள் நாளைக்கு உங்களின் பெற்றோர்களிடம் வந்து திருமணத்தை எப்போது வைத்துக்கொள்வோம் என்று கேட்டுவிட்டு முடிவெடுப்போம். மேலும், நான் உங்களிடம் ஒரு சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். தீர்க்கமான பதில்கள் கூறவேண்டும்".

"நபிசா நீங்கள் சாதாரணமான ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். உங்களிடம் பராக்கிரமமான செயற்திறனும், படிப்பினையான முற்போக்கு சிந்தனையும், ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. இவற்றுக்கான காரண காரியங்கள் என்ன என்பதை உங்களால் கூறமுடியுமா?" என்று சபீன் கேட்டான்.

"ம்.... மனிதர்களுக்குள் அடங்கிக்கிடக்கும் சக்திகள் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, வெளிப்படுத்த வேண்டும். சந்தர்ப்பம் கிடைத்தும் சக்திகளை வெளிப்படுத்தாதவன் செத்த சவம். படிப்பினை என்பது, முற்போக்கு சிந்தனையாக இருக்க வேண்டும். சுய நலத்திற்காகவும், நிகழ்காலத்திற்காகவும் படிப்பினை இருக்கக்கூடாது. தன்னலமின்மையும், தகுதி காணலும் படிப்பினையாக இருக்கவேண்டும். அதாவது மற்றவருக்கு மாசற்ற செய்வினையாக படிப்பினை இருக்க வேண்டும். நல்லதை செய்வி; நல்லதை தெரிவி என்பதுபோல் உன்னால் இயன்றதை கல்வி என்பதாகும். இவ்வாறு இயங்கும்போது நீங்கள் கேட்பது போன்று ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் பராக்கிரமும் படிப்பினையும் புதைந்து கிடக்கிறது" என்று நபீசா கூறினாள்.

"சரி நல்ல படிப்பினையான பதில்" என்று கூறிய சபீன் மீண்டும் கேட்டான்: "என்னதான் நம்மவர்களுக்குள் கல்வி அறிவால் முன்னேற்றம் ஏற்பட்டாலும், இனவாத, மொழிவாத உணர்வையும், இனத்துவேசத்தையும் ஒழிக்க முடியாமல் இருக்கிறது. ஆனால், உங்களைப்பொறுத்த வரையில் நீங்கள் எல்லா இன, மத மக்களுடனும், பேதமில்லாமல் நேசங்கொண்டு செயல்படுகிறீர்கள். எனவே, உங்களைப்போன்ற தராதரம் உள்ளவர்களிடம் உங்களிடமிருக்கும் சிறப்பான நல்ல தன்மைகளை அவர்களிடம் காணமுடியாமல் இருக்கிறது. இதற்கான உண்மையான காரணங்களை உங்களால் கூறமுடியுமா?" என்று.

"அதிகமான மனிதர்கள் கல்வி அறிவால் முன்னேற்றம் காண்பது உண்மைதான். இருந்தபோதும் கல்வி அறிவு என்பதை அதிகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் எப்படிப் புரிந்து கொள்கிறார்களென்றால் மாற்றார் மொழித்திறன், மாற்றார் தொழில் முன்னேற்றத்திறன் இவற்றை கல்வி அறிவாக, பெற்ற மனிதன் இரண்டாவதாக ஒன்று உண்டு என்பதை மனிதன் சிறிதிப்பதில்லை. அதுதான் கல்வி ஞானம்.

கல்வி அறிவுபெற்ற அதிகமான மனிதர்கள் கல்வி ஞானத்தைப்பெற விரும்புவதில்லை. கல்வி ஞானத்தைப்பெற்றவன் வானத்தை நோக்கி, அவன் தன் சிந்தனையை ஓட்டுவான். வானத்தை நோக்கி சிந்தனையை ஓட்டுபவன் உயர்ந்து செல்லும்போது, அவனுக்கு எல்லாம் சமமாகத் தெரியும். மேடு, பள்ளம், மலை, ஆழம், நாடு, கண்டம் எல்லாமே ஒன்றாகும். நிறங்கள்கூட நீலம் என்ற வானம் மட்டுமே தெரியும். எனவேதான், கல்வி அறிவோடு கல்வி ஞானத்தைப் பெறவேண்டும். கல்வி ஞானத்தைப் பெறும்போது மதம், மொழி, இனத்துவேசம், நிற வேறுபாடு எதுவுமே இராது. கல்வி ஞானம் பெற்ற எந்தப் பெரியாரிடமும் மதவேறுபாடோ முரண்பாடோ இருக்கமாட்டாது.

அதிகமானவர்களின் கல்வி அறிவு எப்படிப்பட்டதென்றால் படித்துவிட்டு பரீட்சை எழுதுகிறார்கள். பரீட்சையை எழுதிவிட்டு, அவரவருடைய ஆலயங்களுக்குப்போய் தங்களின் பரீட்சை முடிவுகள் சித்தி பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள். இறைவனை வழிபடுகிறார்கள். அங்கே அவர்களுக்கு வழங்கப்படும் ஆசியும் போதனையும் அவரவரின் மதப்போதனைப்படி நடக்கிறது. பிறகு என்ன நடக்கிறதென்றால் காது வழிப்போதனையால் ஒவ்வொருத்தரும் இறுக்கமாக ஈர்க்கப்படுகிறார்கள். தங்களின் மதமும் போதனையும்தான் உண்மையானது என்று உறுதி கொள்கிறார்கள். ஆனால், பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும், பல இன மதத்தவர்களின் கட்டமைப்பாலும், பல இன மத ஆசிரியர்களாலும் கல்விமகான்களாலும் உருவானது என்பதை மறந்து விட்டு பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும், தங்களை உயர்த்துவதற்காக தங்களின் இன, மதத்தவர்களாலும் தாங்கள் வணங்கும் கடவுளர்களின் அருள்களாலும்தான் ஏற்படலாயின என்று திண்ணமாக நம்புகிறார்கள். இப்படி ஏற்படுத்தப்பட்டு தங்களுக்குள் வரையறை வைத்து கல்வி அறிவைப் பயன்படுத்துவதால்தான் இன, மத பேதங்கள் மனிதர்களுக்குள் ஏற்படுகின்றன.

ஒரு உதாரணத்தை கூறலாம். எப்படியென்றால் ஆணும் பெண்ணும் மனிதர்கள். ஆணும் பெண்ணும் எல்லா உயிர்களிலும் ஒன்றுபட்டு வாழும்போதுதான் உலகில் உயிரின வாழ்க்கை தொடர்பாடலாகும். இதுபோன்றுதான் கல்வி அறிவும், கல்வி ஞானமும், ஒன்றுசேரும் போதுதான் மனித வாழ்வில் பேத, மத, இன வேறுபாடு இல்லாமல் வாழலாம். ஒரு இந்துவோ, இஸ்லாமியரோ கிறிஸ்த்தியரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தரோ தங்களின் வேதமத சாத்திரங்களை மட்டும் படிக்கும்போது அது கல்வி அறிவாகிறது.

ஒருவர் மற்றவருடைய வேதமத சாத்திரங்களைப்படிக்கும்போது; அது கல்வி ஞானமாகிறது. எந்த ஒரு மதத்துக்கும் ஏகபோக உரிமை கிடையாது. எல்லா மதங்களிலும்தான் எல்லா நன்மைகளும் உண்டு. எல்லோருக்கும்தான் எல்லாம் தெரியும். ஒருவருக்கும் மட்டும் எல்லாம் தெரியாது. எல்லா மதங்களும் நன்மை செய். தீயதை செய்யாதே; என்று கூறுகிறது" என்று நபீசா கூறினாள். அவள் பொருளியல் போதனா விரிவுரையாளர் அல்லவா? அவள் கூறிக்கொண்டிருப்பதை கேட்டுக்கொண்டிருக்கும் சபீனுக்கு இன்னும் நிறைய கேள்விகள் கேட்க வேண்டும்போல் தோன்றிக்கொணடிருந்தது.

"நபீசா உங்களின் நிதானமான நிதர்சனமான பதில்களைக் கேட்கும்போது, மேலும் பல கேள்விகளைக் கேட்க வேண்டும்போல் தோன்றுகிறது. உங்களின் குடும்பம் வறுமைப்பட்ட குடும்பம். பெற்றோர்களும் கல்வு அறிவு கற்காதவர்கள். இப்படி உங்களின் குடும்ப சூழல் அமைந்திருந்தபோதும் நீங்கள் மிகச்சிறந்த கல்வி அறிவு, கல்வி ஞானத்தில் முன்னேறியதோடு சகோதரர்களையும் மற்றோர்களையும் கல்வி முன்னேற்றம் காணச்செய்து ஊக்கமளித்துள்ளீர்கள். இவற்றில் நீங்கள் குறிப்பிடக்கூடிய படிப்பனையும், மற்றவர்களுக்கு கூறக்கூடிய நல்லுரைகளும் என்ன என்று உங்களால் கூற முடியுமா?" என்று சபீன் கேட்டான்.

பேசும் மொழிகளில் காதல் மொழி இனியது அல்லவா? சபீனுடைய கேள்விகளுக்கு இனிக்கும் காதல் மொழியாக படிக்கும் அறிவுமொழி கூறினாள் நபீசா: "எப்போதும் நாம் ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டால் அதன் இறுதி முடிவு வரையும் முடிவு காணாமல் ஓயவே கூடாது. பொதுவாக ஒரு முயற்சியில் தோல்வி கண்டு விட்டோமென்றால் நமக்கு இந்த தோல்வி வரக் காரணம் என்னவென்று நாம் ஆராய வேண்டும். அதில் ஒரு படிப்பினையை காணவில்லையென்றால் அது தோல்வியாகும். தோல்வியிலும், படிப்பினை ஒன்றைப் படித்து விட்டோமென்றால் அதுவே நமது அடுத்த முயற்சியின் தீர்க்கமான வெற்றிக்கு வழி வகுக்கும்.

இப்படி மீண்டும் மீண்டும் முயற்சி எடுக்கும்போது, நமக்கு ஒரு இலட்சியவெறி ஏற்படும். எதிலும் வெற்றி காணவேண்டும் என்ற வேட்கையும், வெறியும் விரத நடையும் வேண்டும். அப்படி நடைபோடும்போது மழை, வெயில், இரவு, பகல், தூக்கம், விழிப்பு போன்ற எந்தவொரு இயற்கையின் அசைவுகளும் நம்மை வருத்தாது. இப்படிப்பட்டவர்களுக்குத்தான் இலக்கை அடையும் தாகமும் வெறியும் விரதமும் வேணவாவும் கைகூடும்" என்று நபீசா கூறினாள்.

"அருமையான பதில். மேலும் நட்பைப் பற்றியும், நட்பால் ஏற்படக்கூடிய நன்மை தீமை நட்பால் உங்களுக்கு ஏற்பட்ட சாதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமும் நீங்கள் நண்பர்கள்மீது வைத்திருக்கும் நட்பைப் பற்றியும் நண்பர்கள் உங்களின்மீது வைத்திருக்கும் அன்பைப் பற்றியும் உங்களால் தாராளமாக விளக்க முடியுமா?" என்று சபீன் கேட்டான்.

நபீனா மிகவும் பக்குவமாகக் கூறினாள்: "நட்பு நல்ல மனங்களை ஈர்த்து நிற்பது. இறைவன் ஒருவனுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று நினைத்தால், நல்லதொரு மனிதனை நண்பனாக்கி விடுவான். நல்ல நண்பன் நம்மில் பாதி என்றுகூடக் கூறிவிடலாம். எனக்கு நல்ல நண்பர்களை இறைவன் தந்திருக்கிறான். அதனால், நான் மிகப்பெரும் செல்வப்பிறவி என்று கூறுவேன். நட்பு என்பது எப்படிப்பட்டது என்று தெரியுமா? பறவைக்கூட்டம் போன்றது. கொக்கு கொக்குகளோடும், புறா புறாக்களோடும் சேர்ந்து பறப்பது போல்; ஒரே குணத்தன்மை உள்ளவர்கள் அந்த குணத்தன்மை உள்ளவர்களோடு மட்டுந்தான் பிணைவார்கள்; நட்பாடுவார்கள். புறாவோடு சேர்ந்து கொக்கு பறக்காததுபோல் முரண்பட்ட குணங்கொண்டவர்கள் கூடிப்பழகுவதும் இல்லை. கூடிப்பழகினால் அவர்களுக்குள் குரோதமும் குழப்பமும் ஏற்பட்டு பிரிந்து விடுவார்கள்.

நட்பில் முக்கியமான விடயம் நாம் முதலில் தியாகத்தோடு நட்பாட வேண்டும். எனக்கொரு நண்பி நலவிழி என்ற தமிழ் பெண். அவள் எனக்கு எவ்வளவு அன்பளிப்பு என்றாலும் சரி, கடனாக என்றாலும் சரி தருவதற்க்கு முயற்சிப்பாள். ஆனால், நான் அவளின் பாசமான நட்பைவிட வேறு எதையும் அவளிடமிருந்து எதிர்பார்த்ததில்லை. நட்பில்லாத மனிதன் புன்னகை இல்லாத மனிதன்" என்று நபீசா பதிலிறுத்தாள்.

நபீசாவின் நயத்தலான பதில்களைக்கேட்ட சபீன், நலவிழி சினேகிதியாகக் கிடைப்பது மிகப்பெரிய பாக்கியம் என்று எண்ணிப் பெருமிதங்கொண்டான். "இதுவும் நல்ல பதில்தான். கடைசியாக உங்களிடம் ஒரு கேள்வி. உங்களால் மறக்க முடியாத, அல்லது உங்களை வியக்க வைத்த ஏதாவது ஒரு சில விடயங்களைக் கூற முடியுமா?" என்று கேட்டான்.

சபீன் கேட்ட இந்தக் கேள்விக்கு நபீசாவினால் எதுவும் பேச முடியாமல் அமைதி காத்தாள். நபீசாவின் அமைதியைக்கண்ட சபீன் கூறினான்: "நீங்க இந்தக் கேள்விக்கு பதில் கூறமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். எனவே நாம் கல்யாணம் கட்டிய பிறகு பேசிக்கொள்ளலாம், எதிர்வரும் மாதம் இருபதாம் திகதி நமது திருமணம் பற்றிப் பேசுவதற்காக, நாங்கள் உங்களின் வீட்டுக்கு வருவோம். முடிக்கிறேன்" என்று சபீன் கூறிவிட்டு தொலைத்தொடர்பை முடித்துக்கொண்டான்.

நபீசாவிடம் சபீன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வித்தியாசமாகவும், வியக்கத்தக்கவாறும் பதில்களைக் கூறியவள் சபீன் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு அவள் பல எண்ண அலைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை மோதினாள். கடைசியாகக் கேட்ட கேள்வியை மையமாக வைத்துத்தான் ஏனைய கேள்விகளை சபீன் கேட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

எனவே, இவ்வளவு காலமும் சபீன் என்பவர் யார்? எப்படிப்பட்டவர்? ஏன் என்னை இவர் காதல் கொண்டு விரும்ப வேண்டும் என்றெல்லாம் எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த நபீசாவுக்கு இப்போது சபீன் யார்? என்பது மட்டும் தெரிய வந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 15

முதலாளித்துவ மதவாதம் முறுக்கேறிய பணம்? பட்டம், புகழ், குலக்குடி வெறி கொண்ட மேட்டுக்குடியான குடும்பத்தில் பிறந்தவன்தான் சபீன். சபீனுடைய தந்தை பெரும் அரசியல் செல்வாக்கு மிகுந்தவர். எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும், அந்த அரசாங்கத்தைப் பயன்படுத்தி, தனக்கோ பிறருக்கோ எதையும் செயல்படுத்தி வெற்றிகாணும் அரிமா நடைபோடும் பதினாறு பெறுறேுகளும் பெற்ற பிறவிக் கோமானாகப்பட்டவர்தான் சபீனுடைய தந்தை.

இப்படிப்பட்ட கோமானுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தவன்தான் சபீன். இவர்களின் குடும்பத்தில் மாப்பிள்ளை எடுப்பதென்றால்; அது மிகப்பெரும் பிரயத்தனம் எடுக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களின் குடும்பத்தில் பிறந்த சபீன் ஏன்? ஏழைப்பிறவியான நபீசாவை மணம்முடிக்க இவ்வளவு முயற்சி எடுக்க வேண்டும். இதிலுள்ள மர்மம் என்ன? இதன் எதிர்கால விளைவின் இன்ப துன்பம் எதில் போய் முடியும்? இதனை அறிவதற்காக நபீசாவுக்கு ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாக தென்பட்டுக் கொண்டிருந்தது. இதன் காரணமாக சபீனா இக்கணமே மணம்முடித்து சபீனிடம் உள்ள இரகசியம் என்ன? ஏன் என்னை நீங்கள் விரும்பக் காரணமான, காரண காரியம் என்ன? என்று கேட்கத்துடிக்கும் நினைவுகளால் நெக்குருகினாள் நபீசா.

ஒன்றும் புரியாதவளாக ஓராயிரம் எண்ண அலைகளால் புடைக்கப்பட்டு, நிம்மதி இல்லாமல் தவித்தாள். தனது இதயப்பாரத்தை இறக்கி வைப்பதற்காக தனது இன்னுயிர் தோழி நலவிழியிடம் சபின் யார்? என்பதைக்கண்டு பிடித்து விட்டேன் என்று கூறுவோம். அவளும் சபீன் என்பவர் யார்? என்று இரகசியமாக விசாரியாத நேரமே இல்லாதவளாக இருக்கிறாள். எனவே, நலவிழியிடம் பல விடயங்களைப் பேசுவோம் என்று தொலைபேசியை எடுக்கப் போனாள் நபீசா. அப்போது நபீசாவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

தோலைபேசியை எடுத்து "ஹலோ" என்று நபீசா பேசினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நபீசா நான்தான் நலவிழியின் தந்தை பேசுறன். இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்பு நல்விழி மேல் மாடியின் படிக்கட்டில் கால் சறுக்கி விழுந்ததால் தலை அடிபட்டு மயங்கி விட்டாள். சிறுகாயம். உயிராபத்து எதுவுமில்லை. டாக்டர் அருள்நிதியின் தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்.

நலவிழியின் தந்தை கூறியதைக்கேட்ட நபீசாவுக்கும் மயக்கம் வருவது போலிருந்தது. எவ்வளவு காலமாக ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த ஒரு சந்தோசச் செய்தியை தனது சினேகிதி நலவிழியிடம் சொல்லி மனப்பாரத்தைக் குறைப்போம். நலவிழியோடு சேர்ந்து மனம் மகிழ்வோம் என்று நினைத்தவளுக்கு, மனம் வேதனைக் குழம்பாக கொதிக்கத் தொடங்கியது. உடனே, அவள் அவசரமாக சபீனிடம் தொலைபேசியில் கூறிவிட்டு, நலவிழியைப் பார்க்க அருள்நிதியின் தனியார் மருத்துவமனைக்குப் போனாள்.

மருத்துவமனையில் நபீசா கண்ட காட்சி அவளைத் தூக்கி வாரிப் போட்டது போலவும், அவளால் நம்ப முடியாமலும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் என்ன இது என்ற கேள்விக்குறியாக இருந்தது.

நலவிழியின் தந்தையோடு, பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களும், சபீன், டாக்டர் நடராசா இன்னும் பல பிரமுகர்களும் நலவிழியின் நலம் அறிய வந்திருந்தார்கள். இவர்களைக் கண்ட நபீசாவுக்கு பெருமைப் பிரேமை ஏற்பட்டது. தனது தோழிக்கு இவ்வளவு அன்பின் நேசகர்கள் நலம் பார்க்க வந்திருக்கிறார்கள் என்னும் உணர்வால் விம்மிப் புடைத்த அவளுக்கு தனது காதலனை இதற்கு முதல் கண்டிருந்தாலும், இன்றுதான் தன்னை விரும்புகின்றவர் இவர்தான் என்பதை அறிந்த வெட்கம், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்கள் அவளில் குடிகொண்டிருந்தாலும் இப்போது அவளில் குடை பிடித்துக்கொண்டது.

டாக்டர் அருள்நிதி மருத்துவக் கலாநிதி என்றாலும், அவர் தத்துவக் கலாநிதியும்கூட. எனவே, நலவிழியின் மயக்கத்தில் ஆபத்து எதுவும் இல்லை. ஆனால் ஏன் அவள் மயக்கம் தெளியாதவளாகக் கிடக்கிறாள் என்று யோசித்தவர், நலவிழியின் தந்தையிடம் பயப்படத் தேவையில்லை என்று கூறினார். மயங்கிக்கிடக்கும் நலவிழியை யாரையும் பார்க்க விடவில்லை. ஆனால், அங்கு நின்றவர்கள் அனைவரிடமும் அன்பாக ஒவ்வொருத்தரும் கேட்கும் கேள்விகளுக்கு பக்குவமாகவும் மகிழ்ச்சியாகவும் பதில் அளித்துக்கொண்டிருந்தார்.

மருத்துவ துறையோடு தத்துவ மனோதத்துவத்தையும் கற்றுக்கொண்ட டாக்டர் அருள்நிதியிடம் சபீன் கேட்டான்: "ஐயா! உங்களிடம் மிகவும் வாஞ்சையாக ஒன்றை முன்வைக்கிறேன். அதற்கு நீங்கள் சிறு அங்கீகாரம் தர வேண்டும்" என்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சொல்லுங்கள். உடனே அங்கீகரிப்போம்” என்று அந்த மருத்துவ மகான் ஆணையிட்டார்.

உடனே சபீன்! “நாங்கள் எல்லோரும் ஒரு சில நிமிடங்கள் நலவிழியை காண அனுமதியுங்கள்” என்று நெகிழ்ந்து கூறினான்.

“இலகுவான காரியம் வாங்கள்” என்று எல்லோரையும் அவசர சிகிச்சை அளிக்கும் அந்த மருத்துவ அறைக்குள் அழைத்துக்கொண்ட சென்றார் டாக்டர் அருள்நிதி.

கட்டிலில் நலவிழி கண் மூடிக் கிடந்தாள். அவள் சுவாசிக்கும் அசைவைவிட எந்த அசைவோ, உணர்வோ அவளிடம் காணப்படவில்லை. டாக்டர் அருள்நதி நலவிழியின் தலை மாட்டிலும், சபீன் வலது பக்கத்திலும், நபீசா இடது பக்கத்திலும் மற்றவர்கள் நீள் வளையமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் அருள்நிதியிடம் சபீன் சொன்ன சில நிமிடங்கள் முடிந்து கொண்டிருந்தது. நலவிழி கட்டிலில் கிடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் இதயமெல்லாம் கன்னித்தேவதையான இந்தப் பெண்ணுக்கா இப்படியொரு நிலமை வரவேண்டும் என்று கண்ணீர் கசியும் வண்ணம் கவலைப்பட்டுக் கொணடிருக்கும்போது, சபீன் குனிந்து நலவிழியின் காதுக்குள் “நலவிழி! நான் சபீன் வந்திருக்கினே. நபீசாவின் காதலன் சபீன் வந்திருக்கிறேன்” என்று வேறு யாருக்கும் கேட்காதவாறு கூறினான்.

சபீன் அப்படிக் கூறியதும், நலவிழியின் நாவு “சபீன்” என்ற நாமத்தை உச்சரித்துக்கொண்டு, நலவிழியின் நயன விழிகள் விழித்தன. விழித்துப்பார்த்த அவளின் விழிகள் ஆச்சரியக் கண் கொண்டும், ஆனந்தக் கண் கொண்டும் அகல விரிந்து பார்த்தது. அவளின் பார்வையில் தான் காண்பது கனவா? நனவா? இது உண்மைதானா? என்று எடை போட்டு நின்றது. வலப்பக்கம் நிற்கும் சபீனைப் பார்த்ததோடு இடப்பக்கம் நிற்கும் நபீசாவைப் பார்த்துக்கொண்டு “சபீன்” என்று நலவிழியின் நாவு மீண்டும் நாதம் செய்தது.

“சபீன்தான்” என்று, தலை ஆட்டி ஆமோதிப்பதுபோல் நபீசா அங்கீகாரம் செய்தாள்.

இவற்றைப் பார்த்துக் கொணடிருந்தவர்களெல்லாம், ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் அசந்து போனார்கள். நலவிழிக்கு ஏற்பட்டதுபோல் அங்கு குழுமியிருந்தவர்கள் அனைவருக்கும் இது கனவா? நனவா? என்பது போலாகிவிட்டது.

நலவிழியின் தந்தைக்கு ஏற்பட்ட ஆனந்தத்தால் அவரின் பிராணன் போய் விடும்போலிருந்தது. நலவிழியின் மாப்பிள்ளை டாக்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசாவுக்கு இது என்ன நடந்தது என்ற சந்தேகமும் சபலமும் சிந்தையில் சூடேற்றியது.

நபீசாவுக்கு நலவிழியின் செய்கையில் ஏற்பட்ட நட்பின் ஆழத்துக்கு இலக்கணமே வகுக்க முடியாமல் தித்தித்து நின்றது.

நலவிழியின் நாள நரம்புகளுக்கு உத்தரவு கொடுக்கும் மூளையின் மயக்க நிலையை அறிந்த சபீன் மந்திரம் சொல்லி ஊதிய இரகசியச்சொல் நலவிழிக்கு உயிர் ஊட்டியது.

டாக்டர் அருள்நிதிக்கு வைத்தியத்தில் இப்படியெல்லாம் உண்டு என்ற கைங்கரியங்கள் தெரிந்திருந்தது.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் இதனை பார்த்துக் கொண்டிருந்தவர் மனதுக்குள் நினைத்தார்: நபீசா என்ற அற்புதப் பெண்மணியின் பேராற்றலைக் கண்டு வியந்து எதையும் கூறமுடியாமல் கூண்டுக்குள் சிக்குண்டவரைப்போல் காட்சி தந்ததோடு ஆனந்தக்கண்ணீர் வடித்துக்கொணடிருந்தார்.

இப்படியெல்லாம் தாங்கள் ஒவ்வொருத்தருக்கும் ஏற்பட்ட எண்ணத்தின் அதிர்வுகளால் ஆட்பட்டுக்கொண்டிருக்கும்போது, நலவிழி தனக்கு எதுவும் நடக்காததுபோல், ஏன் நான் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டேன் என்று எண்ணிக்கொண்டு, கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தவள் எழும்பி உட்கார முயன்றபோது நபீசா நலவிழியைத் தாங்கி இருக்க உதவி செய்தாள்.

நலவிழியின் தந்தை அழுத அனுதாபத்தோடும் மகளுக்கு ஒன்றுமில்லை என்ற ஆனந்தத்தோடும் தனது செல்வக் களஞ்சியத்திடம் நடந்ததைச் சொன்னார். தந்தை சொன்னதைக் கேட்டு வெட்கித்த நலவிழி, சபீனையும் நபீசாவையும் பார்த்து உள்ளூர மகிழ்ந்தாள். தன்னைக் கல்யாணம் கட்டப்போகும் டாக்டர் நடராசாவைப் பார்த்து வெட்கப்பட்டாள். அவளின் வெட்கமும் நாணமும் இவ்விடத்தை விட்டு வீட்டுக்குப்போக வேண்டும் போலிருந்தது.

டாக்டர் அருள்நிதியிடம் சில ஆலோசனைகளைப் பெற வேண்டியிருந்ததால், அவர் பல விடயங்களை அறிவுபூர்வமாகவும், விஞ்ஞான மருத்துவ ஆதாரமாகவும் கூறினார்.

நலவிழியின் மயக்கம் படிக்கட்டில் விழும் முன்பே ஏற்பட்டதாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால், நலவிழிக்கு ஏதோ ஒரு விடயம் பற்றி சதா நினைவு இருந்திருக்க வேண்டும். அந்த நினைவானது எதைச் செய்கிறோம்? என்ன செய்ய வேண்டும்? என்பதையெல்லாம் உடல் கவனம் எடுக்காது. ஏனென்றால், மூளையும் மனமும் வேறு ஒரு விடயத்தில் இறுகி கவனம் எடுக்கும்போது அவயங்களின் அசைவுகள் தெரிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான நினைவுகளாலும் கனவுகளாலும் உலவும்போதுதான் நலவிழி படிக்கட்டில் சறுக்கி விழுந்திருக்கிறாள். அப்படி நலவிழி படிக்கட்டில் சறுக்கி விழும்போது, நலவிழியை தினமும் ஆட்படுத்திக்பொண்டிருந்த அந்த நினைவும் கனவும் இல்லையென்றால் நலவிழி படிக்கட்டில் விழுந்து தலை அடிபட்டபோது நலவிழி இறந்திருக்கக்கூடும். இறப்பு ஏற்படாமைக்கான காரணம் நலவிழியின் நினைவு மண்டலம் வேறு ஒரு நினைவால் விறைத்துப்போய் கடினமாக இருந்திருக்கிறது. கடினமாக மூளைச்செல் இறுகிப்போயிருந்ததால் நினைவுச்செல்லுகள் தான் விழுந்துவிட்டேன் என்ற அதிர்ச்சி உணர்வுகள் இறப்பு ஏற்படாமல் மயக்க நிலைக்கு நலவிழியை கொண்டு போய் விட்டது.

ஒருமனிதனை மயக்கத்துக்கு மூளை ஆட்படுத்துமென்றால் மயங்கியவர்கள் கனவு உலகில் சங்கமிக்கத் தொடங்குவார்கள். மயங்கிய நிலையில் கனவுலகுக்குச் சென்றவர்களுக்கு கனவு மறைந்து விடுமென்றால், மயக்கம் தெளிவார்கள். மயக்கம் தெளியவில்லையென்றால் மரணித்துவடுவார்கள்.

இந்த விடயம் நம் எல்லோருக்கும் தினமும் நடப்பதுண்டு. அவற்றை நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. உதாரணத்துக்கு, நாம் தூங்குகின்றோம். தூக்கம் நம்மை ஆட்படுத்தும்போது, கனவு நம்மை ஆட்படுத்தத்தொடங்கும். தூக்கத்தில் நாம் கனவு காணவில்லையென்றால், நாம் மெய் மறந்து தூங்வில்லை என்று அர்த்தமாகும். மெய் மறந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது அதிர்ச்சி தரும் கனவுகளைக் கண்டால், நமது மூளையும் மனமும் ஒன்றுசேர்ந்து சக்திக்கு அப்பாற்பட்ட அதிர்ச்சியால் இறப்பை ஏற்படுத்திவிடும். அதிர்ச்சி, ஆபத்து இல்லாத மகிழ்ச்சி தரும் கனவுகளைக் கண்டால், சந்தோச மிகுதியால் கனவு கலைந்து தூக்கம் மறைந்து கண் விழித்துவிடும்.

தூங்கியவர்கள் எழும்பாமல் இறந்திருந்தால் அந்த இறப்புக்கு காரணம் பயங்கரமான அதிர்ச்சி ஊட்டிய கனவுகளால் அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதுதான் அதன் உண்மை.

இப்படி தூக்கத்தில் இறந்த பெரும் விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் அதிகம் பேர் அடங்குவார்கள்.

எனவே, நலவிழியின் மயக்கத்தை கனவு கைவிடாமல் கடிவாளமிட்டு, உயிர் மூச்சை வைத்துக் கொண்டிருந்திருக்கிறது. அப்படி கனவுலகில் நலவிழி மிதந்து கொண்டிருக்கும்போது நலவிழியின் நனவும் கனவும் ஏதோ ஒன்றுக்கு விடை தேடிக்கொண்டிருக்கும்போது, சபீன் நலவிழியின் தேடலின் வேணவாவுக்கான, ஏதோ ஒரு விடையை கூறியிருக்கிறார். அந்த விடையின் ஆனந்தத்தால், நலவிழி கண் விழித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். அதாவது மகிழ்ச்சியான கனவு காண்பவர்கள் கண் விழிப்பது போன்று.

"எனவே சபீன் நலவிழியின் காதுக்குள் கூறிய விடயம் எதுவாக இருக்கலாம்" என்று டாக்டர் அருள்நிதி சபீனுடைய முகத்தைப் பார்த்தார்.

சபீனுடைய முகத்தை டாக்டர் அருள்நிதி பார்த்ததும் அங்கிருந்தவர்கள் அனைவரும் சபீனுடைய முகத்தை நோக்கினார்கள். சபீன் என்ன கூறப் போகிறான்? மருத்துவத்தால் நலவிழியின் மயக்கத்தை குணப்படுத்த முடியாமல் திண்டாடியபோது என்ன மந்திரச் சொல்லைப் பயன்படுத்தினான் சபீன் என்ற எண்ணத்தின் பிரேமை எல்லோரின் மனங்களிலும் முகங்களிலும் முகிழ்ந்து காணப்பட்டது.

அவர்களின் எதிர்பார்ப்பின் ஆவலில் இருந்த அன்பைப்புரிந்து கொண்ட சபீன் கூறினான்:. "நலவிழி மண்ணில் பிறந்த புண்ணியமான புதல்வி. அவளுக்கு இடப்பட்ட நலவிழி என்னும் பெயருக்கு ஏற்றவாறு நலமானவெற்றைத்தான் அவளால் செய்ய முடியும். நலமானவெற்றைத்தான் காணமுடியும். வேறு எதுவும் அவளுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட நலவிழிக்கு அவளுடைய சினேகிதியான நபீசாவின் மீதுள்ள அன்பும் பற்றும் மிகைத்து நபீசா கூறிய பெயருக்குரிய ஒருவர் யார்? என்று இரவும் பகலுமாக தேடி விசாரித்துக் கொண்டிருக்கிறாள். அது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஒரு நல்ல ஆத்மா இன்னும் ஒரு நல்ல ஆத்மாவுக்கு உதவி செய்ய வேண்டுமென்று விரதம் கொண்டால் அந்த விரதம் மிகப்பெரும் பக்திப் பரவசமாக மாறும். அப்படி பக்தி பரவசமாக மாறிய நலவிழியின் அன்புத்டேல் இரவு, பகலாக பசிதூக்கம் இல்லாமல், நபீசா கூறிய பெயருக்குரிய நபர் யாராக இருக்கமுடியும்? என்று தேடிக்கொண்டிருக்கும் போதுதான் நலவிழி படிக்கட்டில் தடுக்கி விழுந்து மயங்கி விட்டாள். மயங்கியவள் வைத்தியம் பார்த்தும் மயக்கம் தெளியவில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று நானும் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண மாத்தையா அவர்களும் ஒரு சிறு கண்ணோட்டம் செய்தோம்.

ஏன்? நாங்கள் அப்படி கற்பனைக் கண்ணோட்டம் செய்தோமென்றால் நலவிழி தேடும் பெயருக்குரிய நபர் நான்தான். எனவே, கருணாரட்ண மாத்தையா அவர்கள் என்னிடம் சொன்னார்கள்: நலவிழி தற்போது பெரும் ஆராய்ச்சியில் உனது பெயரைத் தேடிக் கொண்டிருக்கிறாள். ஒருவேளை மயங்கிக் கிடக்கும் அவளிடம் உனது பெயரைக் கூறினால், மயக்கம் கலைந்து நலவிழி எழும்பினாலும் எழும்புவாள் என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான், நான் நலவிழியின் காதுக்குள் நான் சபீன், சபீன் வந்திருக்கிறேன் நலவிழி என்று கூறினேன்." அப்படிக்கூறிய சபீன் நலவிழியின் காதுக்குள் கூறிய எல்லாவற்றையும் சொல்லவில்லை.

ஏனென்றால் வாலிபன் வெட்கப்படவில்லையென்றால் அது வாலிபனுக்கு இழிவு. கிழவன் வெட்கப்படுவானென்றால் அது கிழவனுக்கு இழிவு. எனவே, சபீனும் வாலிபன்தானே. அவனிடமும் ஆணுக்குரிய கூச்ச வெட்க உணர்வுகள் இருக்கும்தானே?

சபீன் இப்படிக் கூறியதும் அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் ஒரு மகத்துவமான மனித மேன்மை மெய்யுருகி ஆட்பட்டு நின்றது. முஸ்லீமானவரின் மெய்யான அன்பு தமிழரைத்தழுவி நிற்பதற்காக, சிங்களவரின் செயல்பாடு எவ்வாறு வளையமாக வாஞ்சையுடன் செயல்பட்டு நிற்கிறது என்று.

நலவிழியின் மயக்கம் கலைவதற்காக சபீன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட டாக்டர் அருள்நிதி வியப்படைந்தவராகக் கூறினார்: "இது போன்ற சம்பவங்கள் மருத்துவ துறையில் ஏற்பட்டு பல சாதனைகள் நடந்திருக்கின்றன. பிரிட்டனில் ஒரு பெண் விபத்து ஒன்றில் மயக்கமுற்று வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தாள். பலநாட்களாகியும் அந்தப் பெண்ணின் மயக்கம் தெளியவில்லை. அதனால் வைத்தியர்கள் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். அந்தப்பெண்ணின் ஒரு வயதுக்குழந்தை அழும் சத்தத்தை பதிவு நாடாவில் பதிவு செய்து, மயக்கமுற்றுக் கிடந்த அந்த தாயின் அருகில் கொண்டு போய், குழந்தை சத்தம் போட்டு அழும் பதிவு நாடாவைப போட்டதும், அந்தத் தாய் உடனே எழுந்து எனது பிள்ளை! எனது பிள்ளை! என்று மயக்கம் தெளிந்து எழும்பி விட்டாள்.

எனவே நலவிழிக்கு நடந்த இந்தச் சம்பவம் மருத்துவத்துறையில் பெரும் சாதனை. அத்துடன் ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட நிகழ்ச்சியானது அவர்களின் இரத்த அணுவோடு சேர்ந்த பிணைப்பு. ஆனால் நலவிழிக்கும் நபீசாவுக்குமிடையில் ஏற்பட்ட நிகழ்ச்சி நட்பின் ஆத்மாவை தழுவி நின்று மருத்துவ விஞ்ஞாத்தையும் மீறி மானுட மெய்ஞானத்தோடு சஞ்கமித்து நிற்பதாகும்" என்று டாக்டர் அருள்நிதி வியந்து கூறினார். அவர் அங்கிருந்தவர்கள் அனைவரின் அன்பையும் ஆன்மாவையும் வசீகரித்து மெய் மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 16

நாளைக்கு முறைப்படி கல்யாணம் சம்மந்தமாகப் பேச வருவோம் என்று கூறிய காதலன் சபீன் இன்றைக்கு வருவார் என்று சபினா எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய எதிர்பார்ப்பில், எத்தனை ஏளனங்களும் எதிர்ப்புகளும் எரிக்கும் தீயைவிட கடுமையாக கனன்று கொண்டிருந்தன.

முதலில் தன்னை சபீன் திருமணம் முடிக்க விரும்புவதை தனது தந்தையே விரும்ப மாட்டார். அதற்கு பல காரணங்கள் இருந்தாலும், தனது தந்தையின் தங்கையான இளையமாமியை சபீனுடைய காக்கா கல்யாணம் முடித்திருக்கிறார். அதனால் சபீனுடைய காக்கா நபீசாவுக்கு மாமா முறை. மாமா முறையானவரின் தம்பியும் மாமாதானே? இதன் காரணமாகவும், சபீனுடைய காக்கா நபீசாவின் இளைய மாமியை திருமணம் முடித்ததால், தங்களின் குடும்பத்துக்குள் ஏற்பட்ட காணிப் பிரச்சினைகளால் ஏற்பட்டிருக்கும் வம்பு வார்த்தை அவதூறுகள் இன்னும் குறைந்தபாடில்லை. அப்படியெல்லாம் இருக்கும்போது, தனக்கு சபீனைத் திருமணம் முடித்து தருவதற்கு தனது தந்தை விரும்புவாரா? என்ற எண்ணங்கள் ஒருபுறம்.

மறுபுறம் சபீனுடைய பெற்றோர்களின் செல்வமும் சிறப்பும் செருக்கும் நபீசாவை கலக்கமுறச் செய்தது. சபீனுடைய குடும்பத்துக்குள் மாப்பிள்ளை எடுப்பதோ, பெண் எடுப்பதோ பெருமைதான். ஆனால், அவர்களுக்குள் இருக்கும் ஆணவ அகம்பாவ செருக்குகளைப் பொறுத்து வாழ்வதுதான் மிகப்பெரிய சிரமம்.

காணி, பணம் போன்ற பெரும் சொத்துக்களைச் சீதனமாகக் கொடுத்து திருமணம் முடித்துக்கொண்ட பெண்களின் துன்பங்களே அதிகம். அப்படி இருக்கும்போது, குடியிருக்க நல்ல வீடுகூட இல்லாத நபீசா சபீனைத் திருமணம் முடித்தால், சபீனுடைய குடும்பத்தவரகளால் எப்படியான துன்ப துயர வேதனைகள் ஏற்படப் போகின்றதோ என்ற எண்ணங்களால் நபீசா கலங்கிக் கொண்டிருந்தாள்.

என்னதான் துன்ப துயரங்கள் ஏற்பட்டாலும் பெண்ணாகப் பிறந்து விட்டால், சொல்லாத நினைவுகளும் ஆறாத புண்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணானவளை வதைத்துக்கொண்டே இருக்கும் என்ற எண்ண அனுபவங்கள் நபீசாவை வலுவுறச்செய்து கொண்டிருந்தன.

ஆபத்தான சந்தர்ப்பங்களில் அறிவுடன் செயல்பட்டு, அவற்றுக்கான ஆதாயங்களைப்பெற்று, வாழ்ந்து கொண்டிருக்கும் அனுபவசாலியான நபீசாவை தன்னை விரும்பும் நல்லவரான சபீனுடைய குடும்பத்தவரின் ஆணவ அகம்பாவத்தால் என்ன செய்ய முடியும்? நானாக சபீனைத் தேடிப் போகவில்லையே? என்னை சபீன்தான் முதலில் ஒருதலைக் காதலாக விரும்பினார். நான் என்ன மயக்கும் பல்வரிசை காட்டி அவரை என் பக்கம் அழைத்தேனா? அல்லது அவர்களின் பணம், பட்டம், புகழ்களில் மோகங்கொண்டு, ஒய்யார வாழ்வு வாழவேண்டுமென்று புகழாசை கொண்டேனா? பணம், பட்டம், புகழ் கொண்டவர்களின் விருந்து மண்டபங்களிலும், அவர்களின் வாஞ்சையில்லாத வர்மக் குணங்கொண்டவர்களின் வாழ்வு வைபோகங்களில் கலந்து கொள்பவளா? ஈவு, இரக்கம் இல்லாத பணம் படைத்தவர்களின் பாதையால் கூடப்போக விருப்பம் இல்லாத என்னை ஆயிரத்தில் ஒன்று, இலட்சத்தில் ஒன்று என்ற அகிம்சைக்குணம் கொண்ட சபீன் ஏதோ ஒரு காரணத்துக்காக என்னை உண்மையாக காதலிக்கிறார். அவர் என்ன காரணத்துக்காக என்னைக் காதலிக்கிறார் என்ற உண்மையை அறிய, அத்துடன் அவரோடு சேர்ந்து வாழ நான் விரும்புகிறேன்

இப்படியெல்லாம் இதயம் குழம்பிக்கொண்டிருந்தாலும், மறுபுறம் சபீனுடைய செய்கைகளால் தனக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பிரயோசனம், பிரமிப்பு என்ற ஈர்ப்பு நபீசாவை சபீனுக்குள் சங்கமிக்கச்செய்து, சதா அவனுடன் அவனாக அவளை அணைத்து நிற்க வேண்டுமென்ற அவாவாக அவளை ஆர்ப்பரித்து ஆட்கொண்டிருந்தது.

நேற்று வைத்தியசாலையில் சபீன் நலவிழியின் காதுக்குள் கூறிய வார்த்தையோடு, இன்று வரையும் சபீனைக் காணத்துடிக்கும் கண்களை பாதைமேல் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சபீனுடைய வருகையை எதிர்பார்த்த வண்ணம்.

சபீன் வருவார்; எந்த நேரம் வருவார்? எத்தனை மணிக்கு வருவார் என்று நேரம் காலத்தை கணிப்பிட்டுக் கூறவில்லை. சபீனுடைய கடிதங்களிலும், தொலைபேசி அழைப்புகளிலும் நபீசா அறிந்துகொண்ட பல உண்மைத் தகவல்களின்படி சொல் என்பது செயல்களின் முன்னறிவிப்பு என்பதே என்ற உண்மையை சபீனிடமிருந்து அறிந்திருந்தாள். அதனால், சபீனுடைய வருகையை இன்றைய பொழுதுக்குள் காணலாம் என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலைப் பிரிந்திருப்பதும், பயணத்தில் தடை ஏற்படுவதும் ஒரு நிமிட நேரம்கூட ஒரு யுகமாகத் தோன்றும். ஆனால், காதலில் சேர்ந்திருப்பதும், பயணம் தடைப்படாமல் போய்க்கொண்டிருப்பதும் ஒரு யுகம்கூட ஒரு நொடிபோல் ஓடி மறைந்துவிடும்.

இப்படிப்பட்ட இதயமுறுவலில் தனக்குள் ஏற்படும் ஆட்படல்களோடு, காணப்பட்ட நபீசாவின் கண்களுக்கு பல கார்கள் தனது வீட்டை நோக்கி வந்து நின்றன. கார் ஒன்றிலிருந்து பொலிஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களும், சபீனும், நலவிழியும் அவளின் தந்தையும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். இன்னுமொரு காரிலிருந்து டாக்டர் அருள்நிதியும் நலவிழியை கல்யாணம் கட்டுவதற்காக பேசி வைத்திருக்கும் டாக்டர் நடராசாவும் இன்னும் பல பிரமுகர்களும் வந்தார்கள்.

இவற்றையெல்லாம் கண்டு வெட்கித்து வெகுண்டு வார்த்தைகளற்ற சபலத்துடன் எதுவுமே புரியாதவளாக காணப்பட்டாள் நபீசா. அவளுடைய இந்த அமைதியான ஆட்படலைக்கண்ட பெற்றோர்களும் சகோதரர்களும் அக்கம் பக்கத்தவர்களும் என்ன? ஏன்? எதற்கு? இப்படியானவர்கள் வரக்காரணம் என்பது போலிருந்தது.

வந்தவர்கள் என்ன சாமானியமானவர்களா? சரித்திரம், தத்துவம், சமத்துவம் தெரிந்தவர்கள் அல்லவா! அதனால் எதுவுமே தெரியாதவர்களைப்போல், நபீசாவை சபீனுக்கு பெண் கேட்க வந்தவர்களைப்போல் நடித்தார்கள்.

நடிப்பா அது நன்மையான காரியத்தை நாட்டி பாதுகாத்து விருட்சமாக்கி விழுதாக்கி விழுமியமாக்கி வாழ்வியலாக்கி பலருக்கு பாடமாக்கி பல்கிப்பெருக வேண்டிய நாடகத்தை அரங்கேற்றி வாழவைக்க வந்த நாடக ஆசிரியர்கள் நாகரீகம் தெரிந்த ஆசான்கள் அவர்கள்.

அவர்களின் நடிப்பில் குணசித்திரப் பாத்திரமும் அவர்களின் வாக்குச்சாதுர்யமும் நபீசாவின் தந்தையின் மூர்க்கங்கொண்ட ஆட்சேபமான வார்த்தைகளை புழுதியாக பறக்கடிக்கச்செய்தது.

எந்த வகையிலும் எதிர்த்துப்பேச முடியாமல் வாய் மூடிநின்ற நபீசாவின் தந்தை தனது மகள் நபீசா நாடி நிற்கும் சபீனை மணம் முடித்துக் கொடுக்கச் சம்மதப்பட்டார்.

சபீன் ஒரு இலட்சத்தி பத்தாயிரம் ரூபா பணத்தை நபீசாவின் தந்தையிடம் மஹராகக் கொடுத்தான். அவர் மனமாற மகிழ்ச்சியுடன் மஹர் ப்பணத்தை ஏற்றுக்கொண்டவர் தனது மகள் நபீசாவை சபீனுக்கு தனது முழுமன விருப்புடன் மனைவியாக ஏற்றுக் கொள்ளுமாறு கை பிடித்துக்கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபீன் நபீசாவை அன்பு மனைவியாக ஏற்றுக்கொண்டு, தாலி, வளையல், மோதிரம் போன்ற தங்க ஆபரங்களை தனது அன்பு மனைவிக்கிச் சூடினான். சூழ இருந்தவர்கள் பதினாறு பெறுபேறுகளும் சூழ்ந்து சுகமாக வாழ வாழ்த்தினார்கள்.

நலவிழியின் தந்தையான தொழிலதிபர் கொண்டு வந்திருந்த ஐசுவர்யமான சிற்றுண்டி, பழ வகைகள், பழரசப்பானங்களோடு நபீசாவுக்கும், சபீனுக்கும் இனிதே திருமணம் மங்கலமாக நிறைவேறியது.

நபீசாவின் திருமணத்தால் ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியால், நலவிழி நபீசாவின் காதுக்குள் "உனது திருமணத்துக்குப் பிறகுதான் எனது திருமணம் நடக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்தேன். அவ்வாறே இறைவன் நாடிவிட்டான். வருகிற மாதம் பதினேழாம் திகதி எனது கல்யாணத்தை நிச்சயித்திருக்கிறார்கள்" என்று நலவிழி வெட்கமும் மகிழ்ச்சியுமாகக் கூறினாள்.

நலவிழி கூறியதைக்கேட்ட நபீசா கூறினாள்: "நான்தான் நடராசாவிடம், வாற மாதம் பதினேழாம் தேதி கல்யாணத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன்" என்று.

நபீசா இப்படிக் கூறியதும் நலவிழியை ஆனந்தம் ஆட்கொண்டது. அதனால் நட்புடன் நபீசாவிடம் நலவிழி நவின்றாள்: "என்ன இருந்தாலும் நபீசா நீதான் எந்த நல்ல செயல்களிலும் முந்திக்கொள்வாய்" என்று.

அப்படியெல்லாம் இல்லை நலவிழி. நீயும் நானும் ஒன்றுதான். அதனால் நீ முந்தினாலென்ன? நான் முந்தினாலென்ன? ஆனாலும், உன்னைப்போல் நானும் ஒன்றைக் கூறலாம். நான் வாயால்தான் சில விடயங்களில் முந்திக் கொள்வேன், ஆனால், நீயோ கையால் பல விடயங்களில் முந்திக்கொள்வாய்" என்று நலவிழியின் தர்மமான செயல்களைக் குறிப்பிட்டுக் கூறினாள் நபீசா.

"அதையும் நபீசா என்னும் நண்பியிடம் இருந்துதான் அறிந்தேன்" என்று நபீசாவின் செயல்களில் சிந்தை குளிர்ந்து கூறினாள் நலவிழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 17

நபீசாவுக்கும் சபீனுக்கும் திருமணம் முடிந்தது ஒரு வகையில் இரகசியமாகவே இருந்தது. சபீன் நபீசாவின் தந்தையிடம் மஹர் பணம் கொடுத்தது, நபீசாவை நபீசாவின் தந்தை சபீனிடம் கை பிடித்துக் கொடுத்தது, சபீன் நபீசாவுக்கு தாலி வளையல் மோதிரம் போன்ற தங்க ஆபரணங்கள் அணிவித்ததெல்லாம் அங்கு வந்திருந்தவர்களையும், நபீசாவின் பெற்றோர்களையும் சகோதரர்களையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. தெரியப்படுத்தவும் கூடாது என்னும் சங்கடமான சூழ்நிலைக்கு அவர்களின் திருமணம் நடக்க வேண்டியிருந்தது.

அதற்கான காரணம் இதுவாகத்தான் இருந்தது. சபீன் பெரும் சீமான் குடும்பத்துப் பிறவியாக இருந்ததால் அவன் தனது குடும்பத்தின் சில சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். அதுதான் மனிதர்களின் பாரம்பரியப்பண்பு. எவர் தங்களின் பாரம்பரியப் பண்புகளைப்பேணி நடக்கவில்லையோ அவர்கள்தான் நல்ல குடும்பங்களின் மிகக் கீழ்த்தரமானவர்கள். இதன் காரணமாகத்தான் சபீன் தனது குடும்ப கௌரவத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக, எதிர்பாராமல் நடந்த, நடத்திய திருமணத்தை வேறு யாரும் அறியாமல் இருக்க வேண்டும் என்று எண்ணினான், எண்ணிச் செயற்பட்டான்.

சபீன் கல்யாணம் கட்டிய தனது மனைவி நபீசாவை காதலிப்பது போன்று காட்டிக்கொண்டு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்கத் தொடங்கினான். சபீன் நபீசாவின் வீட்டுக்கு வருவது நபீசாவை அங்குமிங்கும் கூட்டிக்கொண்டு போவது, பல இடங்களில் சந்திப்பது போன்ற விடயங்களை வைத்து பலர் சபீனுக்கும் நபீசாவுக்கும் காதல் தொடர்பு உண்டு என்று வதந்தி போன்ற கிசுகிசு வார்த்தைகள் பலரிடம் பேசப்பட்டுக் கொண்டிருந்தன.

இப்படியான வதந்தியான வார்த்தைகள் பலரால் பேசப்பட வேண்டும். இந்த வார்த்தைகள் தனது பெற்றோர்கள், சகோரர்கள், குடும்பத்தவர்கள் அறிய வேண்டும். அப்படியவர்கள் அறிந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை விசாரிக்க வேண்டும். விசாரிக்கப்பட்ட சபீன் காதல் இறுக்கத்தால் எவருடைய வார்த்தைகளையும் கேட்காமல் நபீசாவை காதல் கல்யாணம் கட்டிவிட்டான் என்று கதை உலாவ வேண்டும். அப்படி மெல்ல மெல்ல நாளும் பொழுதும் ஓடிக்கொண்டிருந்தால் பெற்றோர்களும், சகோதரர்களும் குடும்பத்தவர்களும் தன்மீது உள்ள அக்கறையை இழந்து அவன் விரும்புவதுபோல் திருமணத்தை முடித்துக் கொள்ளட்டும் என்று ஒரு செயற்கை நாடகத்தை ஏற்படுத்திக்கொண்டான் சபீன். அதற்குத் துணையாக தனது காதல் மனைவி நபீசா துணை நின்றாள்.

சபீனைத் திருமணம் முடிப்பதற்காக பெற்றோர்கள் பேசி வைத்திருந்த பெண்ணையும் நிச்சயித்திருந்த காலத்தையும் எண்ணி பெற்றோர்கள் வருந்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், சபீன் நபீசாவை திருமணம் முடித்து விட்டான் என்ற செய்தியை காலங்கடந்து தெரிந்து கொண்டார்கள்.

இப்படியெல்லாம் பெற்றோர்கள், சகோதரர்கள் இதயம் வெறுத்து வெதும்பி நின்றதையெல்லாம் அறிந்து கொண்டு தன்னை ஏன் இவர் விரும்ப வேண்டும் என்ற கேள்வியும், தனக்கு எழுதிய காதல் கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள் போன்றவற்றில் தன்னைப் பற்றிய இரகசியங்கள் என்ன? என்பது போன்ற விடயங்களை அறிவதற்காக நேரம், காலம், சூழல்களை எதிர்பார்த்த வண்ணம எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தாள் நபீசா.

காதலிப்பதற்காக மனிதர்கள் எத்தனை பொய்கள், நாடகங்கள், கவர்ச்சிகள், பெருமைகள், போலிக்கௌரவங்கள் காட்டுவார்கள். காதலில் வெற்றியடைந்து கல்யாணம் கட்டிக்கொண்டால், உண்மையின் தன்மைகள் வெளிவரும். இதில் உண்மையான அன்பு, மன இச்சையின் உடல் பொருத்தம் போன்றவை சரியாக இருந்தால் அதுவே வாழ்வின் பெரும் பேறாக அமையும். அல்லது தேவை நலன் கருதி புகழ், பெருமை, பொருளாசை கொண்டு திருமணம் முடித்தால் அதுவே வாழ்வின் கொடிய நரகமுமாகும்.

இதில் சபீன் நபீசாவை உண்மையான அன்பு இச்சையின் உடல் பொருத்தத்தோடு, காதலித்து கல்யாணம் கட்டிக்கொண்டான். இதன்காரணமாக சபீனுடைய அன்பின் நெகிழ்ச்சியால் நபீசாவுக்கு சபீனிடம் ஏன் என்னை விரும்பினீர்கள்? எனக்குள் இருக்கும் இரகசியம் என்ன? என்பது போன்ற கேள்விகளை கேட்க முடியாதவளாக அன்பின் ஆர்ப்பரிப்பும், ஆசைகளின் லீலைகளும் நபீசாவை சபீனிடம் கேள்வி கேட்க முடியாதவளாக முடங்கப்பட்டுக் கிடந்தாள்.

கல்யாணத்தின் ஆரம்பத்திலேயே கேள்வி, ஆட்சேபம், சந்கேம், அதிகபேச்சு என்பதையெல்லாம் வைத்துக்கொண்டால், அதில் அன்பும் மரியாதையும் கெட்டுப்போய் விடும் என்பதால் நபீசாவுக்கு சபீனிடம் அதிகம் பேசுவதற்கு கூச்சமாக இருந்தது. அடிக்கடி கூடிப் பழகியிருந்தால், கூச்சம சபலம் இல்லாமல் பேசலாம். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராமல் கல்யாணம் கட்டிக் கொண்டதால், எப்படி தன் உள்ளக்கிடங்கில் கிடக்கும் கேள்விகளை வெளிப்படுத்துவது என்று யோசித்த நபீசாவுக்கு, சபீன் முதல் முதலாக எழுதிய காதல் கடிதத்தை வைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"நான் உங்களிடம் மிகவும் பணிவாகக்கேட்கிறேன். நீங்க என்னை விரும்பியதெற்கான காரணம் என்ன?" என்று நாணத்தோடு குழைந்து அன்பாகக்கேட்டாள்.

சபீனாவின் கேள்வியிலுள்ள அந்தரங்கத்தை விளங்கிக்கொண்ட சபீன் கூறினான்: "ஒரு பெண்ணை ஒரு ஆண் விரும்பக்காரணம் என்ன என்று கேட்டால் அந்த ஆண் என்ன சொல்வான்? உங்களின் அழகும் குணமும் என்னை ஆட்கொண்டது என்று கூறுவான்".

சபீன் கூறிய வார்த்தையில் உயிர்த்துடிப்பும் உண்மைப் பிரதிபலிப்பும் இருக்கவில்லை என்பதைப்புரிந்துகொண்ட நபீசா கூறினாள்: "என்னைவிட எத்தனையோ அழகான அன்பான அந்தஸ்தான பெண்களெல்லாம் உங்களை விரும்புவதோடு, உங்களின் குடும்பமும் மேலிடத்துப் பெண்களை உங்களுக்குத் திருமணம் செய்து தர இருக்கும்போது இந்த ஏழையான நடுத்தரமான குணமும் அழகும் கொண்ட என்னை நீங்கள் விரும்பக் காரணங்கள் வேறு ஏதோ இரகசியம் இருக்கிறது என்று நீங்கள் முதலில் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைக்கொண்டுதான் உங்களிடம் இப்படிக் கேட்டேன்" என்று கடிதத்தை கணவன் சபீனிடம் கொடுத்தாள்.

கடிதத்தை வாங்கிக்கொண்ட சபீன் மனைவி நபீசாவைத் தன்னருகில் இருக்கச்செய்து, அவளிடம் எப்படி தனது காதலையும், தான் அவளை கல்யாணம் கட்டச்செய்த விதியையும் விளக்குவது என்று விபரம் தெரியாமல் விதியையும், மதியையும் கலப்படமாக்கி கதை சொல்ல ஆரம்பித்தான்.

"நபீசா நீங்கள் உங்களைவிடவும் அழகான் பெண்களை விரும்பாமல் என்னை ஏன் கல்யாணம் முடிக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டீர்கள். நான் உங்களிடம் சில விடயங்களைக் கூறுகிறேன் கேளுங்கள். அதிகமான பெண் அழகுகள் மோகத்தை தூண்டும் அழகாகத்தான் இருக்கிறது. அந்த அழகுகளால் ஆபத்தும் அவமானமும்தான் ஏற்படும். ஆனால், சில பெண் அழகுகள் பக்தியையும், படிப்பினையையும் ஏற்படுத்தும். அப்படிப்பட்ட அழகான பெண்களைக் காண்போர்கள், அடக்கமாகவும் பண்பாகவும் அப்பெண்களிடம் பழக விரும்புவார்கள். இப்படியான பெண்களைப் போன்றவர்களில் நீங்களும் ஒருத்தி. இவ்வாறான பெண்கள் மற்றவர்களுக்கு உதவுவதோடு, நல்ல குடும்பப்பெண்ணாக மதிக்கப்படுவாள். அவளிடமிருந்து நல்ல தானதர்மங்கள் வெளிப்படும். கடைசி வரைக்கும் குடும்பத்துக்கோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்துக்கோ எந்தவிதமான களங்கமோ, கஸ்டமோ ஏற்படாது. அவள் எவராலும் ஏமாற்றப்படவுமாட்டாள். மோசமான நடத்தையும் அவளிடம் இருக்காது. இப்படிப்பட்ட பெண்ணாக நான் உன்னைக் கண்டேன். கவனித்தேன்; காதலித்தேன். கல்யாணம் கட்டினேன்''என்று.

சபீன் இப்படிக் கூறியதும், தன்னை தனது கணவர் சபீன் இவ்வளவு ஆழமாகவும் அறிவார்த்தமாகவும் நேசித்து கல்யாணம் கட்டியிருக்கும்போது, வேறு என்ன காரணங்கள் கேட்க வேண்டுமென்று நபீசா கேள்விகள் இல்லாமல் மயங்கி மசங்கிப்போயிருந்தாள்.

புகழ்ச்சி மொழிகளைக்கேட்கும்போது, பேய் பிசாசுகள்கூட மயங்கி அடங்கிப்போகும் என்பதுபோல், நபீசாவுக்கு தனது கணவர் கூறிய வார்த்தைகளில் ஏன் என்னை விரும்பினீர்கள் என்ற பதிலால் ஆனந்தம் பொங்கிப்பூரித்தாலும், ஏதோ ஒரு பெரிய இரகசியம் ஒன்று உண்டு என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாரே; அந்த இரகசியம் என்ன என்பதை அறியும் ஆவலோடும், அவசரத்தோடும் காத்திருந்தாள் நபீசா.

நபீசாவின் முகத்தில் தெரியும் ஆவலையும், அடுத்ததாக தான் கூறப்போவது என்ன என்பதையும் அறியும் ஆர்வத்தோடு காத்திருந்த நபீசாவிடம் கணவன் சபீன் சொன்னான்: ''நபீசா நான் உங்களைத் திருமணம் முடித்தேன். அதற்கான காரண காரியங்கள் என்ன என்பதையும், உங்களுக்கு நான் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த இரகசியம் என்ன என்பதையும் அறிய நீங்கள் அதிகம் வாடிக் கொண்டிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் அறியுமுன், நான் யார் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். ஆனால், நான் என்ன படித்திருக்கிறேன்? என்ன தொழில் செய்கிறேன் என்பதையெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டான் சபீன்.

சபீன் இப்படிக் கேட்டதும் நபீசா திடுக்குற்றவளாக இருந்தாள். நபீசாவின் மௌனத்தைக் கண்ட சபீன் கூறினான்: ''நான் சீமான் குடும்பத்தில் பிறந்தவன். ஏகப்பட்ட சொத்து, பெருமைப் பெறுபேறு கொண்ட குடும்பம் என்பதால் எனது தொழில் என்ன? எனது படிப்பு என்ன என்பதையெல்லாம் நீங்கள் சிந்திக்கவில்லை. அப்படியெல்லாம் நீங்கள் சிந்திப்பதற்கு எனது கடிதங்களும், தொலைபேசி அழைப்புகளும் உங்களுக்கு மிகவும் தடையாக இருந்திருக்கலாம். அதனால் நீங்கள் என்னைப் பற்றி சிந்திக்கவில்லை.

''இப்போது நான் என்னைப் பற்றி உங்களிடம் கூறப்போகிறேன். கணவன், மனைவி என்றால் எந்தவிதமான இரகசியங்களும், அந்தரங்கங்களும் இருக்கக்கூடாது. உறவுகளில் மிகப்பெரும் அன்பான உறவு கணவன், மனைவி உறவு என்று பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் கணவனிடம் மனைவியோ, மனைவியிடம் கணவனோ எதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கக்கூடாது. மறைத்தால் அதில் ஆபத்தும் அவமானமும் உண்டு. நான் சட்டப்படிப்பு படித்தவன். சட்டப்படிப்பு படித்தவன் என்பதால், கோட்டுக்குப்போய் வழக்குகள் சம்பந்தமாக வழக்காடலாமா? பெரிய வழக்கறிஞனாக தொழில் செய்யலாமா? என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்படி எண்ணிக் கொண்டிருக்கும்போது, எனது காக்கா உங்களின் இளையமாமியின் கணவரும் வழக்கறிஞர். காக்காவும் தம்பியும் வழக்கறிஞர் தொழில் செய்வதையும், வழக்குகளில் ஏற்படும் பாவ புண்ணியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளாலும், நான் வழக்கறிஞர் தொழில் செய்வதா? அல்லது வேறு ஏதாவது தொழில் செய்வதா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

"இப்படி நான் யோசித்து காலங்கடந்து கொண்டிருக்கும்போது, எங்களின் வீட்டுக்கு பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் வருவது வழக்கம். அவரும் எனது தந்தையும் மிக நெருங்கிப் பழகும் இனிய நண்பர்கள். அவர்களின் நட்பானது எப்படியென்றால் நெடும் பயணம், வேட்டையாடுதல், விளையாடுதல், அறிவார்த்தமான பேச்சுக்கள், இவற்றால் இணைந்துபோன அவர்கள் மிகவும் ஒத்தாசையாக நெருங்கிப் பழகும் நண்பர்களாக இருந்தார்கள்.

அப்படிப்பட்ட நண்பர்களான அவர்கள இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கும்போது, என்னைப்பற்றி எனது வாப்பா பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களிடம், சட்டம் படித்து விட்டு, தொழில் செய்ய விருப்பம் இல்லாதவனாக எனது மகன் காலந்தள்ளுகிறான் என்று கூறினார்.

எனது தந்தை இப்படிக் கூறியதும் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் கூறினார்கள்; நானும் சட்டம் படித்தவன்தான். ஆனால் எனக்கும் சட்டத்துறை சார்ந்த வழக்கறிஞர் தொழில் செய்ய விருப்பம் இல்லாமல்தான் சட்டத்தின் பிடியில் குற்றவாளிகளைப்பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் பொலீஸ் உத்தியோகத்துக்கு வந்தேன். என்று.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் இப்படிக் கூறியதும் எனது தந்தை ஆழமான ஒரு புன்னகை செய்தார். அந்தப் புன்னகையின் வியாக்கியானத்தை விளக்கப்போனால், அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும். எனது வாப்பா மிகச்சிறந்த கல்விமான். அவருடைய சித்தாந்தங்களை விளக்கப்போனால், அதிகமான கல்வி அறிவுடையவர்கள் வாய் மூடிவிடுவார்கள். எனது தந்தை கூறுவார்: அரச பணிகளை ஐந்து வகையாக பிரித்துக்கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 18

அரசாங்கத்தில் கூலி வேலை உண்டு; தொழில் தொண்டு உண்டு; கடமைப்பற்று உண்டு; பதவி ஆளுமை உண்டு; கௌரவ உத்தியோகம் உண்டு; இந்த ஐந்து வகையான அரச சேவைகளில், தராதரம் அறிந்து அரச சேவைகள் செயல்படும்.

அரசாங்கத்தில் கூலி வேலை செய்கிறவன் ஊதியத்தை மட்டுந்தான் கருத்தில் கொள்வான்!

அரசாங்கத்தில் தொழில் தொண்டு செய்பவன் தனது திறமையில்தான் கவனம் செலுத்துவான்!

அரசாங்கத்தில் கடமை செய்கின்றவன் மற்றவருக்கு உதவி செய்வதில்தான் மகிழ்ச்சி அடைவான்!

அரசாங்கத்தில் பதவி ஆளுமை உள்ளவன் காலம் நேரம் பாராமல் சேவை செய்வான்!

அரசாங்கத்தில் கௌரவ உத்தியோகம் பார்ப்பவன் ஊதியம் பிரதி உபகாரம் எதிர்பாராமல் பணியாற்றுவான்!

இப்படிப்பட்ட சித்தாந்தவாதியான எனது வாப்பா அரசாங்கத்தில் பல கௌரவ உத்தியோகங்கள் புரிந்தவர். இப்போதும் பார்த்துக் கொண்டிருப்பவர். அப்படிப்பட்ட அவரின் மகன் நான் எப்படி அரச சேவையில் என்னைப் பிணைத்துக்கொள்வது என்ற கேள்விக்குறி எனது தந்தையின் மனதில் இருந்து கொண்டிருந்தது.

கல்வி அறிவில் இருந்து, கல்வி ஞானத்தில் முதிர்ந்து போன எனது தந்தையின் சித்தாந்தத்துக்கு ஏற்றவாறு, நான் அரசாங்கத்தில் கௌரவ உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற அவாவில் ஆட்பட்டவனாக இருந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது எண்ணத்தின் திண்ணத்தை பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் எப்படி அறிந்தார்களோ தெரியாது. என் தந்தையிடம் அவர் சொன்னார்: 'ஹாஜியார்! பொலீஸ் சேவையில் இரகசியப்பொலீஸ் உத்தியோகத்துக்கான வெற்றிடம் இருக்கிறது. என்னிடமும் மேலிடத்திலிருந்து எவரையாவது ஒழுக்க கட்டுப்பாடு உள்ள நல்ல குடும்பத்திலுள்ளவர்கள் இருந்தால் சிபாரிசு செய்யுமாறு உத்தரவு வந்திருக்கிறது. நீங்கள் நினைத்தால் உங்களின் மகனை அந்த உத்தியோகத்துக்கு அனுப்பலாம். நல்ல உத்தியோகம். நாட்டுக்கு சேவை செய்வதோடு, நல்ல பெயரும் புகழும் பெறலாம். எனக்கு உங்களின் மகன் அந்த உத்தியோகத்துக்கு தகுந்தவராகத் தெரிகிறார்' என்று.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் கூறியதைக் கேட்ட எனது தந்தை எனது முகத்தை பார்த்தார். என் முகத்தில் அந்த தொழிலுக்கு சம்மதம் தெரிவிப்பதுபோல் கண்டார். அதனால் நான் பொலீஸ் துறையில் இரகசிய பொலீஸ் சேவையில் சேர்ந்து கடமையாற்றத தொடங்கினேன்.

நான் இரகசிய பொலீஸ் துறையில் கடமையாற்றுவது ஒரு சிலரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. எனவே, அதிகமானவர்களுக்கு நான் படித்துவிட்டு, சும்மா திரிகிறேன் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். படித்துவிட்டு பணம் பதவிக்காக, நான் பெரிசா? நீ பெரிசா? என்று போட்டி போட்டுக்கொண்டு இலஞ்ச லாவண்யங்களைப் பெற்றுக்கொண்டு திரியும் மோசடிப் பேர்வழிகள் எத்தனை பேர் நம் மத்தியில் கௌரவப் பிரசைகளாக காணப்படுகிறார்கள் தெரியுமா?

நான் இரகசியப் பொலீஸ் துறையில் சேர்ந்த பிறகுதான் நமது சமூகத்தில் மிக மோசமாகக் காணப்படும் சில கயவர்கள் அதி உயர் அந்தஸ்துடையவர்களாக காணப்படுகின்றார்கள் என்பதை தெரிந்து கொண்டேன். சில மோசடிப்பேர் வழிகளின் அயோக்கியத்தனங்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை வழங்கும்போது, ஏற்படும் பாவக்கொடுமைகளை நினைத்தால் எப்படி இந்த அந்தஸ்துடைய அயோக்கியர்களை நல்வழிப்படுத்துவது என்ற வேதனைகள் ஏற்படுகின்றன. ஒரு அயோக்கியன் தண்டிக்கப்படும்போது, தண்டிக்கப்பட்ட அயோக்கியனின் ஆட்களால் தண்டிக்கப்பட்ட அயோக்கியர்களை காட்டிக்கொடுத்தவர்கள் என்ற சந்கேத்தின் பெயரால் அப்பாவிகள் பலர் கொல்லப்படுகின்றார்கள்.

இப்படிப்பட்ட கொடிய பாவங்களைக் காணும்போது, உண்மையால் ஏற்படும் நாசங்களைக் காட்டிலும், பொய்யால் ஏற்படும் அமைதி மேலானது என்று எண்ணத் தோன்றுகிறது. எத்தனை அழகிய மனிதர்கள். அவர்களுக்குள் இருக்கும் ஆபத்தான ஆக்ரோசம் எத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையானது தெரியுமா? படித்தவன் என்று பாசாங்கு காட்டுபவன் எப்படியெல்லாம் அரச பணத்தை கையாடுவதற்கு, விண்ணப்பங்களை வித்தாள்மையாக நிரப்பி எவ்வளவு விவேகமாக பண மோசடி செய்கிறான் தெரியுமா? மத, சமய மகான் என்று காட்டிக்கொண்டு, மயக்கும் போதைப்பொருள்களையும், ரத்தினங்களையும் தலைப்பாகைக்குள்ளும் தாடிக்குள்ளும் வைத்துக்கொண்டு, தன்னை தகுதிமான் என்று காட்டிக் கொள்கிறான். இப்படியான இழிந்த கயவர்களை நோட்டம் காணபவனாகவும், நாட்டுக்கு சேவை செய்கின்றவனாகவும்; நல்லதை செய்துவிட்டு எதுவுமே செய்யயாதவனாக தொழில் தொண்டு செய்து கொண்டிருக்கிறேன். மிகச் சிறந்தது எது தெரியுமா? சிறந்ததை செய்துவிட்டு, இதைச் செய்தவர் யார் எனத் தெரியாமல் இருக்கும். அப்படிப்பட்ட சேவையைதான் நான் செய்து கொண்டிருக்கிறேன்.

இப்படியான சேவைகளை செய்து கொண்டிருக்கும்போதுதான், பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் மிகவும் இரகசியமான ஒரு பொறுப்பை கண்காணிக்கச் செய்தார்; பணித்தார்.

நமது ஊரில் தீவிரவாதிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிகப்பெரும் வெடிகுண்டு ஒன்றின் ஆபத்திலிருந்து பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் உட்பட பல பொலீஸாரும், நானும் கொல்லப்படுவதோடு எனது காக்காவின் வீட்டை குறிவைத்து எனது காக்காவும் அவருடைய குடும்பமும் உட்பட பல உயிர்களை அழிவில் இருந்து காப்பாற்றுவதற்காக, பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் வெடிகுண்டை தீவிரவாதிகள் வெடிக்கச் செய்வதற்கு முன்பாக நொடிப்பொழுதுக்குள் வெடிகுண்டை வெடிக்கச் செய்யாமல் செயல் இழக்கச்செய்வதெற்காக வெடிகுண்டின் வயர்களுக்கு துப்பாக்கியால் வெடி வைத்து வெடிகுண்டை சக்தி இழக்கச்செய்து பெரும் சாதனையை நிலை நாட்டினார்.

அப்படி அவர் செய்த காரணத்தினால், அவருக்குக் கிடைத்த பாராட்டு, பதக்கம், பதவி உயர்வு போன்றவற்றால், அவர் பொலீஸ் துறையிலும், பாதுகாப்புத்துறையிலும் பெயரும் புகழும் பெற்றார். அத்துடன் பாதுகாப்புத்துறையில் பொலீஸ் அத்தியட்சகரான கருணாரட்ண அவர்களின் ஆலோசனையும் ஆணையும் தேவையாக இருந்தது.

இந்தக்கால கட்டத்தில்தான் அவர் அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்" என்று சபீன் நபீசாவின் முகத்தைப் பார்த்தான்.

நபீசாவின் முகம் முடிவைத் தேடிப்படிக்கும் புத்தகத்தின் தாள்களைப் புரட்டும் அவசரம்போல் அடுத்தது என்ன என்ற கேள்விக்குறியோடு, "என்ன பொறுப்பை உங்களிடம் பொலீஸ் அத்தியட்சகர் ஒப்படைத்தார்?" என்று அமைதியாகக் கேட்டாள். அவள் அமைதியாகக் கேட்டாலும், ஆழமான ஆறு அமைதியாகத்தான் ஓடும். ஆனாலும், அதன் ஆழத்திலிருக்கும் கற்பாறைகளின் உடைதல்களும் உறுளுதல்களும் மோதல்களும் ஆபத்தான முதளைகளும் இன்னும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எத்தனை இடர்களும் இருக்கும் என்பதை அறியத்துடிக்கும் அவாபோல் நபீசாவின் எதிர்பார்ப்பு இருந்தது.

நபீசாவின் முகத்தைப் பார்த்த சபீன் கூறினான்: "நபீசா! பதவி உயர்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் உன்னைக் கவனிக்குமாறு உளவு பார்க்கப் பணித்தார்" என்று.

இப்படி சபீன் கூறுயதும் நபீசாவின் முகம் சிவப்பாக மாறியது. அச்சமும் அதிர்ச்சியும் அவளின் உடலெங்கும் ஊடுருவிப் பரவியது. இதையறிந்த சபீன் கலவரம் அடைந்து கொண்டு, மனைவி நபீசாவை அமைதி குலையாமல் அவளுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, "நபீசா அச்சப்பட வேண்டாம். ஏன்? உன்னை அவர் உளவு பார்க்க என்னை பணித்தார் என்று இன்னும் எனக்கு விளங்க முடியாத கேள்வியாத இருக்கிறது. ஆனால், அவர் உன்னை உளவு பார்க்க என்னை நியமித்தாரா? அல்லது உனக்கு ஏற்படும் துன்பங்களையும், இடர்களையும் ஆபத்துக்களையும் தவிர்ப்பதற்காக நியமித்தாரா? அல்லது உன்மீது எனக்கு தீராத காதல் மோகத்தை ஏற்படுத்தி கல்யாணம் கட்டி வைப்பதற்காக இட்ட கட்டளையா? என்று உணர முடியாதவனாக நான் எனது கடமையிலும், உனது காதல் வாழ்வின் கல்யாணத்திலும், என்னைப்பிணைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சபீன் மோக நகை புரிந்தான்.

சபீனுடைய அன்பான ஆரத்தழுவிய இனிமையான பேச்சைக்கேட்ட நபீசா கேட்டாள்: "என்னை நீங்கள் உளவு பார்த்த காலங்களில் எனது நடத்தையில் கண்ட சந்தேகமான தடயங்கள் எதாவது உண்டா?" என்று.

புன்சிரிப்புடன் கூறினான் சபீன்: "உங்களின் நடத்தையில் சந்கேமான தடயங்கள் எதையும் காணவில்லை. ஆனால் ஏன் நீங்கள் பொலீஸ் கண்காணிப்பான இரகசியத் தகவல்களால் கண்காணிக்கப்படுகிறீர்கள் என்பதுதான் எனக்கு மிகப்பெரும் சந்கேமாக இருக்கின்றது. ஆனாலும்? நீங்கள் எத்தனையோ ஆபத்தான சம்பவங்களில் இருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறீர்கள் தெரியுமா?

உங்களுக்கு ஏற்படவிருந்த ஆபத்தான செய்கைகளில் இருந்து நீங்கள் காப்பாற்றப்படும்போது, நான் நினைப்பேன்; 'உங்களை உளவு பார்க்க நான் நியமிக்கப்படவில்லை. உங்களின் உயிர் காக்க, அல்லது உங்களுக்கு உதவி செய்ய, உதவிக்கரம் நீட்ட உயிர் நண்பன் போன்று நியமிக்கப்பட்டேனா? என்றெல்லாம் சிந்திப்பேன். அத்துடன் உங்கள்மீது எனக்கு காதலும் ஏற்பட்டுவிட்டது. காதல் ஏற்பட்ட எனக்கு உங்களைச் சுற்றி வட்டமிடுவதும் மகிழ்ச்சியாகவே இருந்தது. அதன் காரணமாகத்தான் என்னவோ, உங்களின் துணைவனாகி விட்டேன்" என்று சபீன் சிரித்தான்.

கள்ளமில்லா கணவனின் வெள்ளைச் சிரிப்பைக்கண்டு, மனதுக்குள் மகிழ்ந்த மனைவி நபீசா கேட்டாள்: "உங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமான உதவி ஒத்தாசைகளால் எத்தனையோ நன்மைகளை நான் பெற்றிருக்கிறேன். அப்படி இருந்தும், உயிர் ஆபத்துக்களில் இருந்து நான் காப்பாற்றப்பட்டிருக்கிறேன் என்று சொன்னீர்கள். எப்படியான உயிர் ஆபத்துக்களில் இருந்து நான் காப்பாற்றப்பட்டிருக்கிறேன் என்று சொல்லுங்களேன்'' என்று பயம் கொண்டவளாகக் கேட்டாள் நபீசா.

மனைவி நபீசாவின் கேள்விக்கு பதில் கூற எத்தனித்த சபீனுடைய முகமும் மனமும் பல மாறுதலான தோற்றங்களைக் காண்பித்தது. அதனை அவதானித்த நபீசா கணவர் என்ன கூறப்போகிறார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

“நபீசா நான் உங்களை ஒவ்வொரு கணமும் நோட்டமிட்டுக்கொண்டிருக்கும்போது, உங்களைச்சுற்றி நடக்கும் பல விடயங்களை அவதானிக்க முடிந்தது. ஒருநாள் நீங்கள் எங்கு போகின்றீர்கள் என்று நான் அவதானித்துக்கொண்டு வந்தேன். நீங்கள் பஸ் நிலையத்துக்குப்போய் ஒரு பஸ் வண்டியில ஏறினீர்கள். அப்போது ஒருவர் சந்தேகத்துக்கு இடமின்றி பஸ் வண்டிக்குள் ஏறியவர், பேக்கை பஸ் வண்டியினுள் வைத்துவிட்டு அவசரமாக இறங்கிச் சென்றார். அவரின் அவசரத்தையும், அவர் அவ்விடத்தை விட்டுப்போக எத்தனித்த வேகத்தையும் கண்ட நான் அவரை தடுத்து நிறுத்திக்கொண்டு அவர் பஸ் வண்டிக்குள் வைத்த பேக்கைப் பார்த்தேன். அதற்குள் பயங்கரமான வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது. அந்த வெடிகுண்டு ஐந்து நிமிடங்களின் பிறகு வெடிக்குமாறு வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் அந்த வெடிகுண்டை எடுத்து செயல் இழக்கச்செய்யாமல் விட்டிருந்தால், அந்த பஸ் வண்டிக்குள் நீங்கள் உட்பட அறுபத்தைந்து அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக கொல்லப்பட்டிருந்திருப்பார்கள். இந்த வெடிகுண்டை தீவிரவாதிகள் பஸ் வண்டிக்குள் வைத்த காரணம் உங்களை கொல்ல வேண்டும் என்பதற்காக வைக்கவில்லை. அரசாங்கத்தின் மீது தீவிரவாதிகளுக்கு ஏற்பட்ட வெறுப்பையும் வெறியையும் காட்டுவதற்காகத்தான். ஆனால் நீங்கள் என்ன நன்மையை செய்தீர்களோ தெரியாது. உங்களால் நீங்கள் உட்பட பொதுமக்கள் பலர் காப்பற்றப்படடு விட்டார்கள்.

இதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் உங்களை நாங்கள் கண்காணித்துக்கொண்டிருந்த காரணித்தினால்தான் பஸ் வண்டிக்குள் வெடிகுண்டு வைக்கப்போன சம்பவத்தைக் காண முடிந்தது. அப்படி உங்களை கண்காணிக்கவில்லையென்றால் அந்த ஆபத்தில் எவரையும காப்பாற்ற முடியாது. அதுமட்டுமல்ல எங்களின் இரகசியப்பொலீஸ் பிரிவில் உளவு நடவடிக்கை ஒன்றை கண்காணிக்கும்போது, இன்னும் பல விடயங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டு, அவற்றையும் அக்கு வேறு ஆணி வேறாகப்பிரித்து அறிவோம்.

இன்னுமொரு சம்பவம் அதுவும் உங்களுக்குத் தெரியாது. மிகவும் இழிவான அவமானங்கொண்ட சதி முயற்சி உங்களுக்கு ஏற்பட இருந்தது. அதிலிருந்தும் நாங்கள் உங்களைக் காப்பாற்றினோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 19

சுலைமான் விதானையின் மகன் இன்ஜினியர் உங்களை மணம் முடிக்க விரும்பியும் நீங்கள் அதற்கு சம்மதிக்காத காரணத்தால், அவமானமும் ஆத்திரமும் கொண்டு உங்களை கடத்திக்கொண்டுபோய் அவமானப்படுத்திவிட்டு யார் கடத்தினார்கள்; அவமானப்படுத்தினார்கள் என்பதெல்லாம் தெரியாமல் மூடி மறைக்கும் சம்பவம் ஒன்று நடைபெறவிருந்தது. அது இன்று வரைக்கும் யாருக்கும் தெரியாது. அந்தச் சம்பவத்தை நாங்கள் எப்படிக் கண்டறிந்தோம் தெரியுமா?

நீங்கள் உங்களின் வீட்டிலிருந்து மெயின் வீதிக்குச் செல்லும்போது, வேறு வித்தியாசமான ஆட்களின் நடமாட்டமோ, வாகனங்கள் தரித்து நிற்பதோ கிடையாது. ஆனால், ஒருநாள் எங்களின் கண்காணிப்பில் ஒருவர் உங்களின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் பரபரப்புடன் உங்களின் பாதையால் நடமாடிக் கொண்டிருந்தார். அத்துடன் கொஞ்சத் தூரத்தில் இந்தப் பகுதியில் அந்நியமான காரும் நிறுத்தப்பட்டிருந்தது.

இவற்றை அறிந்த நாங்கள் உடனே மின்னல் வேகத்தில் எங்களின் அதிரடி நடவடிக்கையில் இறங்கினோம். அவ்விடத்துக்கு பொலீஸ் வண்டியில் நாங்கள் வந்து இறங்கினோம். எங்களைக்கண்ட அவர்கள் உங்களைக் கடத்திக்கொண்டு போகும் துணிவை இழந்தவர்களாக அவ்விடத்தை விட்டும் அகல எத்தனித்தார்கள். அவர்களை நாங்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அத்துடன் அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை எப்படிப்பட்டதென்றால், உங்களைக் குறிப்பிட்டு நீங்கள் வீட்டிலிருந்து வரும்போது, உங்களை கடத்திக்கொண்டு போய் இன்னும் ஒரு கும்பலிடம் ஒப்படைப்பதுதான் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் முதலாவது கும்பலின் பொறுப்பு முடிந்து விடும். உங்களை கடத்தும் முதலாவது கும்பலுக்கு ஓர் தொகைப்பணம் கொடுக்கப்படும். ஆனால், கடத்துகின்ற கும்பலுக்கு யார் கடத்திக்கொண்டு வரச்சொன்னார்கள்? ஏன் கடத்தச் சொன்னார்கள்? போன்ற விடயங்கள் தெரியாது. இப்படிப்பட்ட இரகசியமான நடவடிக்கைகளில் கைதேர்ந்தவர்கள் பாதாள உலக கும்பலை சேர்ந்தவர்கள். அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களை விசாரிக்கும்போது, முடிவு இரகசியமானதாகவும், யார் இவற்றை இயக்குகிறார் என்பதுவும் மர்மமாகவே இருக்கும். யூகங்களை வைத்துத்தான் பாதாள கும்பல்களின் முக்கிய ஆட்டுவிப்பாளர்களை அறியலாம்.

நாங்கள் உங்களைக் கடத்த முற்பட்டவர்களை துருவித் துருவி விசாரித்தோம். அவர்களிடம் இருந்து வந்த பதில் இதுதான். 'முக மூடி பாதாள கும்பலை சேர்ந்தவர்கள், போதை நாட்டம் உள்ள பாதாள கும்பலிடம் ஒரு தொகைப் பணத்தை கொடுத்து இந்தப் பாதையால் வரும் இன்ன அடையாளமுள்ள பெண்ணை தூக்கிக்கொண்டு வாருங்கள் என்பதுதான் அவர்களிடமிருந்து வந்த பதிலே தவிர வேறு எந்த பதிலோ தடயங்களோ அவர்களிடம் இல்லை. மேற்கொண்டு அவர்களுக்கு வேறு எதுவுமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.'

இதனை வைத்து நாங்கள் ஒரு யூகமான முடிவை எடுத்தோம். அந்த முடிவுதான் உண்மையான முடிவாக எங்களுக்கு தெரிந்தது.

உங்களை மணம்முடிப்பதற்காக சுலைமான் விதானையின் மகன் இன்ஜினியர் விரும்பியது உண்மைதான். ஆனால், அதை நீங்கள் விரும்பவில்லை. நீங்கள் அவனை விரும்பாதது அவனுக்கு அவமானமாகவும், ஆத்திரமாகவும் இருந்திருக்க வேண்டும். அத்துடன் நீங்களும் நானும் காதல் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று அறிந்த அவனுக்கு உங்களை அவமானப்படுத்தி மானபங்கம் உண்டாக்கிவிட வேண்டும் என்ற வஞ்சக வக்கிர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

எனவே அவன் பணவசதியுடன் பல வசதியும் படிப்பு வசதியும் கொண்டவன். அவனுக்குத் தெரியாத தொடர்பாடலே இல்லை எனலாம். எனவேதான் அவன் பாதள கும்பல்களிடம் அதிக பணத்தைக் கொடுத்து உங்களை கடத்திச் சென்று கெடுக்க வேண்டுமென்று எண்ணி செயற்பட்டிருக்கிறான்.

இப்படிப்பட்டவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி தண்டனை கொடுக்க முடியாமல் இருக்கின்றது. சமூகத்தில் பெரும் பெயரும் புகழும் கொண்ட இப்படிப்பட்டவர்களை யூகங்களை வைத்து கைது செய்து விசாரிக்க முடியாது. ஏனென்றால், பண பலம் அவர்களுக்கு துணையாக நின்று சட்டத்தின் ஓட்டை உடைசலடகளால் அவர்கள் காப்பாற்றப்ப டுவார்கள். இதனால் சமூகங்களில் பெரும் கொடுமைகள் நடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுலைமான் விதானையின் மகன்தான் உங்களைக் கடத்துவதற்கு ஆட்பட்டிருக்கிறான் என்பது மிகவும் புலனாகத் தெரிகிறது. அது எப்படியென்றால் உங்களை மணம் முடிப்பதற்கு உங்களின் மாமாவின் மகனும் விரும்பினான். அவனிடம் நீங்கள் உங்களின் விருப்பமின்மையை கூறியதோடு நீங்களே அவனுக்கு நல்ல ஒரு பெண்ணைத் திருமணம் முடித்துக் கொடுத்தீர்கள். அது மட்டுமல்ல; அவர்களின் குடும்பமும், செழித்து வளர நீங்கள் திருட்டுப்பட்டத்துடன் அவமானப்பட்டதோடு அவர்களின் வாழ்வுக்கு மிகவும் நன்மையும் செய்தீர்கள்.

"ஆனாலும், உங்களின் மூத்தமாமியின் மகன் மத்தீனை நாங்கள் அதிகம் உளவு பார்த்தோம். ஏன் தெரியுமா?" என்ற சபீன் மனைவி நபீசாவின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் சாடையாக அதற்கான பதிலும் தெரிந்ததைப்போல் காணப்பட்டுக் கொண்டிருந்தது.

"நபீசா உங்களின் மூத்தமாமியின் மகன் வறுமை காரணமாக தீவிரவாதிகளின் தொடர்பாடலோடு இணைந்து கொண்டிருந்திருக்கிறான். எனது காக்காவின வீட்டடியில் வெடிகுண்டு வைப்பதற்கான இரகசியத் தகவல்களையெல்லாம் தீவிரவாதிகளுக்கு சொல்லிக் கொடுத்தது அவன்தான். இதையறிந்த நாங்கள் அவனை நோட்டமிட்டு கைது செய்ய எத்தனித்தபோது திடீரென புது மாற்றம் பெற்று பாடசாலைக்குச் சென்று நல்லொழுக்கத்துடன் மீண்டும் படிக்கத் தொடங்கினான்.

இப்படி அவன் புதுமாற்றம் பெற்றதை அறிந்த பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் என்னிடம் கூறினார்கள். 'சபீன் வறுமை எவ்வளவு கொடுமையானது பார்த்தாயா? இந்தச்சின்னப்பையனை அவனுடைய வறுமையும் பசியும்தான் அவனை தீவிரவாதத்துக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறது. இப்போது அவனுக்கு ஏதோ ஒரு வகையில் வறுமை இல்லாத நற்பாதையை யாரோ காட்டியிருக்கிறார்கள். நாம் மேலும் அவன் என்ன செய்கிறான் என்று அவதானிப்போம் என்று கூறினார்.

இப்படி சபீன் கூறியதும், நபீசா கூறினாள்: "வறுமைதானே எல்லா துன்பங்களுக்கும் காரணமாக அமைகின்றது. நான் இளையமாமியின் மாலையை களவின் பேரால் கையாடி மூத்தமாமிக்கு அந்த உதவியை செய்யவில்லையென்றால், அந்தக் குடும்பமும் செத்து மடிந்து சீரழிந்து போயிருக்கும். மூத்தமாமியின் மகனும் தீவிரவாதவெறியால் பலரைக் கொன்றொழித்திருப்பான்.

மூத்தமாமியின் மகனை தீவிரவாதத்திலிருந்த தொடர்பை அறவே துண்டித்து அவனுக்கு நற்பாதை காட்டுவதற்கு நான் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களிடம் மிகவும் பணிந்து அகிம்சையான மன்னிப்புகளை வழங்கச் செய்திருக்கிறேன். இந்தச் சம்பவங்களெல்லாம் எனது மூத்தமாமியின் மகன் மத்தீனுக்கு தெரியாது" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி நபீசா இப்படிக் கூறியதும் அவளின் சீர்பட்ட செயல் நெறியைக் கேட்டுக்கொண்ட சபீன் நினைத்தான். 'மனித வாழ்வின் மாசற்ற வாழ்வுக்கு, சகோதர மனிதர்கள் சகோதரர்களுக்கு கைகொடுத்து உதவும்போது துன்பப்படுகின்றவர்களுக்கு எப்படியெல்லாம் துன்ப துயரங்களையெல்லாம் இல்லாது ஒழிக்கச் செய்யலாம் என்ற சேவை கருதிய தனது மனைவியை மனதால் வியந்தவனாக சபீன் தனது பேச்சைத் தொடர்ந்தான்.

"இப்படிப்பட்ட உங்களுக்கு உங்களின் மாமியின் மகன் எந்த தீங்கும் செய்ய விரும்ப மாட்டான். எனவே, மேலும் சிந்திக்கும்போது, உங்களை கல்யாணம் பண்ணுவதற்கு பலர் தூது அனுப்பியதோடு, சிலர் ஒருதலைக் காதல் கொண்டதோடு, அவர்களின் எண்ணம் அத்துடன் முடிந்து விட்டது. மேலும், அவர்கள் கூடிய பணத்தை பயன்படுத்தி பாதாள கும்பலைக்கொண்டு பெண் கடத்தும் தீங்கான எண்ணமும் பணமும் கொண்டவர்கள் அல்லர்.

ஆனால், சுலைமான் விதானையின் மகன் உயர் அந்தஸ்திலும் அதிகாரம் ஆற்றல் உள்ளவனாகவும் இருக்கின்றான். அவனுக்குத்தான் இப்படியான இழிவான வர்மக் குணங்களெல்லாம் வரும். அத்தோடு, ஊரில் பெரும் அந்தஸ்தான குடும்பத்தில் பிறந்த நான் உங்களை விரும்புகிறேன். நீங்கள் என்னை விரும்புகிறீர்கள். அதாவது நாம் கல்யாணம் கட்டியும் கொஞ்சக்காலம் காதலர்களாக காட்டிக் கொண்டிருந்ததைக் கண்ட அவனின் பொறாமையின் வஞ்சகம் எனக்கு ஒரு சவாலாகக் காட்ட வேண்டுமென்று எண்ணித்தான் அவன் உங்களை கடத்ததுவதற்கு செயற்பட்டிருக்கின்றான்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து அவனை கைது செய்ய முடியாது. அதற்கான ஆதாரங்கள் யூகமாகத் தெரிகின்றதே தவிர, சான்றுகள், சாட்சிகள் எதுவுமே இல்லை. இப்போது எங்களின் பிடியில் இருக்கின்ற உங்களைக் கடத்திக்கொண்டு வரச் சொன்னவர்களை விசாரித்து விசாரணையெல்லாம் முடிந்து விட்டது. அவர்களுக்குரிய தண்டனைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விடவும் எவ்வளவோ கொடுமையான முறையில் மர்மங்கள் நாட்டில் நடக்கின்றது. அவற்றையெல்லாம் கண்டுபிடிக்க நாட்களும் காலமும் காணாமல் இருக்கிறது. ஆனாலும், ஏன் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் உங்களைக் கண்காணிக்கச் சொன்னார். அதனால் உங்களுக்கும், எத்தனையோ மக்களுக்கும் எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் எனது கேள்வியாகவும் மர்மமாகவும் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒருநாள் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களிடம் கேட்டேன்: 'ஐயா! நீங்கள் நபீசாவை உளவு பார்க்கும்படி என்னை நியமித்தீர்கள். இவ்வளவு காலமும் நபீசாவில் சந்தேகத்துக்கிடமான எந்தச் செயல்களும் காணப்படவில்லை. இருந்தாலும் நபீசாவைக் கண்காணிக்கும் போது நபீசாவுக்கும், ஏனைய மக்களுக்கும் எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் உண்மையான ரகசியமும் மர்மமும் என்ன?' என்று.

எனது கேள்விக்கு அவர் பதில் கூறினார்: 'சபீன்! இரகசியம் என்பது ஒரு மனிதனை அதிகம் வாட்டும். அதை அவன் பொறுக்காமல் பிறரிடம் கூறினால் என்ன நடக்கும் தெரியுமா? அவமானமும் ஆபத்தும் ஏற்படும். உன்னால் ஒரு இரகசியத்தை பொறுக்க முடியாமல் நீ பிறரிடம் அதைக் கூறுகின்றாய் என்று வைத்துக் கொள்வோம்; உன்னால் உனக்குள் அடக்கி பொறுக்க முடியாத இரகசியத்தை நீ பிறரிடம் கூறும்போது பிறர் உனது இரகசியத்தை பொறுத்துக் கொண்டிருப்பார்களா? நிச்சயமாக உன்னால் காப்பாற்ற முடியாத உனது இரகசியத்தை பிறரும் காப்பாற்ற மாட்டார்கள். எனவேதான் உனக்குள் இருக்கும் இரகசியயத்தை நீயே காப்பாற்ற வேண்டும்.

உனது நண்பனின் காதுக்குள் கூறும் இரகசியமானது ஆயிரம் மைல்களுக்கு அப்பாலும் கேட்கும் என்று தத்துவங்கள் கூறுகின்றன. எனவே, சபீன் நபீசாவை நீங்கள் உளவு பார்த்ததால் எத்தனையோ; நாசவேலைகளை நீங்கள் கண்டு பிடித்திருக்கின்றீர்கள். அத்துடன் உளவுப்பிரிவில் நீங்கள் பட்டங்களும் பதக்கங்களும் நல்ல திறமையான பெயரும் புகழும் பெற்றிருக்கின்றீர்கள். ஆகவே, நீங்கள் மேற்கொண்டு நபீசாவை கண்காணியுங்கள். அதனால் நீங்கள் நிச்சயமாக நபீசாவிடம் அடங்கிக் கிடக்கும் இரகசியத்தையும், மர்மத்தையும் அறிவீர்கள் என்று கூறியவர் என்னிடம் ஒரு சத்தியம் செய்து தருமாறு கேட்டார். நானும் அதற்கு இசைந்தேன்.

சபீன்! நான் உன்னிடம் ஒரு இரகசியத்தைக் கூறப்போகிறேன். அதை நீ உன் உயிருள்ள வரையும் எவரிடமும் கூறக்கூடாது என்று சத்தியம் செய்து தருவாயா என்று பொலீஸ் அத்தியட்சகர் என்னிடம் கேட்டார். நான் உடனே, உங்களின் ஆணைப்படி யாரிடமும் நீங்கள் கூறும் இரகசியத்தை என் உயிர் உள்ளவரையும் கூறமாட்டேன் என்று சத்தியம் செய்தேன்.

நான் அப்படி மெய்மையாகக் கூறியதும் அவர் என்னிடம் கூறினார்: நான் எப்படி உன்னிடம் இப்போது சத்திய வாக்கு கேட்டேனோ? அதைப்போலவேதான் நபீசாவின் மீதுள்ள இரகசியம் வெளிப்படக் கூடாது என்று நானும் சத்தியவாக்கு கொடுத்திருக்கிறேன். எனவே, சபீன் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கூறுங்கள். ஒரு சத்தியவாக்கைக் கொடுத்து விட்டு, அதை வெளியில் கூறி நம்மை நாம் கெடுத்துக் கொள்ளலாமா? என்று அவர் என்னிடம் சத்திய போதனை கூறினார்.

ஆனாலும் அவர் இன்னும் ஒன்றை மிகத் தெளிவுபடக் கூறினார். எப்படியென்றால்? 'நம்மிடம் ஒருவர் ஒரு இரகசியமான வாக்கை கூறினாரென்றால் நாம் அதை நமது உயிர் உள்ளவரையும் காப்பாற்றியே ஆக வேண்டும். ஆனால், அதை அவர் பிறரிடம் கூறினால், அதில் நமக்கு உடன்பாடும் இல்லை; கவலையும் இல்லை. ஆனால் நம்மால் பிறருக்கு அந்த இரகசியம் தெரியக்கூடாது.

சொல்லக்கூடாதது பெண்ணிடம் இரகசியம்; கணவன் மனைவியாக இருக்கலாம்; உயிர் நண்பனாக இருக்கலாம், பாசச் சகோதரர்களாக இருக்கலாம்; இன்று அவர்கள் அன்பும் நட்பும் பாசமும் நேசமும் காட்டுகின்றவர்களாக இருக்கலாம்; ஆனால், நாளை எதிரிகளாகலாம். எதிரிகளானவர்களால் நமது இரகசியத்தின் நிலை என்னவாகும்?''

இப்படி நீண்டநேரம் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்த சபீன் மனைவி நபீசாவின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் ஆயிரமாயிரம் வார்த்தைகளின் ஒலி பிம்பம் வெளிவர வேண்டி நின்றது. ஏனோ அவளால் பேச முடியாமல் பேதலித்தவளாகக் காணப்பட்டாள்.

மனைவியின் பேச்சற்ற மௌனத்தைக் கண்ட சபீனுக்கு மனைவி நபீசாவை பேச்சில் பங்கு கொள்ளச் செய்வதற்காக "என்ன? பேசாம இரிக்கீங்க?'' என்று மசிந்து மயங்கிப் பேசினான் சபீன்.

இவ்வளவு நேரமும் கணவன் சபீன் பேசிக் கொண்டிருந்ததையும், இவ்வளவு காலமும் தன்னைப் பற்றிய இரகசியத் தகவல்கள் என்ன என்பதையும் அறிய ஆவல் கொண்டிருந்த நபீசாவுக்கு சபீன் பேசி முடித்தவற்றிலிருந்து எதுவுமே இரகசியத் தகவல்கள் இல்லாமல் இருந்ததைக் கண்ட நபீசாவுக்கு கணவன் சபீனிடம் எப்படி தன்னைப் பற்றிய நிலமையைக் கூறுவது என்று ஏங்கித் தவித்தாள்.

சபீன் கூறிய வார்த்தைகளில் வாய்மையும் உண்மையும் உரமேறி, சத்தியத்துக்கு கட்டுப்பட வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக காணப்பட்டிருந்தது. எனவே, தான் கொடுத்த சத்திய வாக்குறுதியை மீறலாமா? மீறினால் கணவன் சபீன் தன்னைப் பற்றி கேவலமாக நினைப்பாரே என்று நபீசா பல குளறுபடியான மனவேதனைகளுக்கு ஆட்பட்டு கலக்கமுற்றாள்.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் கணவன் சபீனிடம் தன்னைப் பற்றிய இரகசிய விடயங்களைக் கூறியிருப்பார். அதைப் பற்றிய அவசர முடிவான அவசியத்தைப் பற்றி கணவன் சபீனிடம் கூறித் தனது வாழ்வின் விவேகமான விந்தையான செயல்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்படுத்தி தனது பராக்கிரமத்தை வெளிப்படுத்தி கணவனின் விசுவாசத்துக்கு வலு ஏற்படுத்தலாம் என்றெல்லாம் எண்ணி ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்த நபீசாவுக்கு கணவன் சபீனிடம் தன்னையும் தன் உள்ளக் கிடங்கில் கிடக்கும் ஆகர்சியமான ஆற்றலை வெளிப்படுத்த முடியாதவளாக முடங்கிக் கிடந்தாள்.

ஆனாலும், தனது கணவன் சபீன், 'சொல்லக் கூடாதது பெண்ணிடம் இரகசியம்' என்று தெரிந்திருந்தும் அதை வெளியில் கூறிவிட்டு, அவரைப் பற்றிய இரகசியத்தை தகவல்களையெல்லாம் என்னிடம் கூறிவிட்டாரே; நான் என்னைப் பற்றிய இரகசியத்தை அவரிடம் சொல்லவில்லையே. அதனால், நாளைய எதிர்காலத்தில் கணவன், மனைவி என்ற மகிமையான வாழ்வின் மெய்மையான பந்த பாசத்துக்கு களங்கம் ஏற்படுமே என்றெல்லாம் நபீசா துன்புற்றாள்.

நபீசாவின் இதயத்தை சதா வாட்டும் கவலையை எப்படி கணவன் சபீனிடம் கூறுவது ஏன்? பொலீஸ் அத்தியட்சகர் தன்னை உளவு பார்க்கச் சொன்னார் என்ற கேள்விக்கு பதில் என்ன? அந்த பதிலை எப்படி கணவன் சபீனிடம் கூறுவது? கணவன் சபீனே கூறிவிட்டார். 'ஒரு இரகசியத்தை காப்பாற்ற முடியாதவன் பலகீனமான மனிதன் என்றும், கணவன், மனைவிகூட இரகசியத்தை இரகசியமாகவே காக்கவேண்டும்' என்று கூறியபோது எப்படி தன்னைப் பற்றிய இரகசியத்தை கணவனிடம் வெளிப்படுத்துவது என்ற சத்திய சோதனைக்கு உள்ளானாள் நபீசா.

நபீசாவுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த சஞ்சலத்துக்கு முடிவு காணவேண்டுமென்றால், அது பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களால்தான் முடியும். அவரிடம் கணவன் சபீனை அழைத்துச் சென்று, தனக்கு ஏற்பட்டிருக்கும் விதியின் வேதனையான அல்லது விதி வித்திட்ட விந்தையான வினாவுக்கு விடை காணலாம் என்று முடிவெடுத்தாள் நபீசா.

நபிமார்கள், நாயன்மார்கள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் இவர்களெல்லாம் ஒன்றை மட்டும் உறுதிபடக் கூறுவார்கள். எப்படியென்றால் உலகில் மாறுதல்களும், மாயை விதிகளும், எப்படி நடக்கும்? எதற்காக நடக்கும்? என்பது எவருக்கும் தெரியாதது என்பதுதான்.

இந்த விதியின் வியத்தகு செயல் நபீசாவின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதற்கு வித்திட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 20

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களை சந்திக்கப் போவதற்காக கணவன் சபீனிடம் கூறுவோம் என்று நபீசா எண்ணியபோது கைத்தொலைபேசி அலறியது. சபீன் தொலைபேசியை எடுத்துப் பேசியதும், மறுமுனையிலிருந்து வந்த செய்தியைக் கேட்டதும் சஞ்சலத்துடன் "அப்படியா" என்று தொலைபேசியை வைத்துவிட்டு, கலக்கத்துடனும் கவலையுடனும் மனைவி நபீசாவிடம் கூறினான்: "பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் எதிர்பாராமல் மாரடைப்பால் மரணித்து விட்டார்" என்று.

கணவன் கூறியதைக் கேட்ட நபீசாவுக்கு கலக்கமும் கண்ணீரும் உண்டாகத் தொடங்கியது. அத்துடன் தன்னைப் பற்றிய இரகசியத்தை தனது கணவனிடம் கூறும் விடிவு காலமும் பிறந்துவிட்டது என்று சோகத்திலும் பெரும் திருப்புமுனை ஏற்பட்டுவிட்டது என்ற அங்கலாய்ப்பு அவளுக்கு உண்டானது.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் மரணித்துவிட்டார் என்ற செய்தி வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அவருடைய சேவைகள், அவர் சேவைசெய்த காலங்களில் அவருடைய திறமை, தியாகம் பற்றியெல்லாம் கானொளி, வானொலி மூலமாகவும் பெருமையாகப பேசப்பட்டுக் கொண்டிருந்தது.

இவற்றையெல்லாம் கண்டு கேட்டுக்கொண்டிருந்த கணவன் சபீனும் மனைவி நபீசாவும் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக புறப்பட ஆயத்தமானார்கள்.

சபீனுடைய மனத்திரையில் பொலீஸ் அத்தியட்சகர் கருணரட்ண அவர்கள் பலவிதத்திலும் விசுவாசமாகவும், நன்றி உணர்வு மிகுந்தவராகவும் தனது தந்தையின் மிக நெருங்கிய நண்பர் என்பதாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு பொலீஸ் சேவையில் உளவுப்பிரிவில் உத்தியோகம் பெற்றுத்தந்ததோடு, பல பட்டங்களும் பதக்கங்களும் பெற்றுத்தந்து வழிகாட்டி என்ற பந்தபாசம் சபீனுக்கு; அவருடைய திடீர் மரணம் பெரும் துன்பத்தையும் சோகத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நபீசாவின் மனத்திரை பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களின் எதிர்பாராத மரணம் மனக் கவலையை தந்தாலும் மாறுதலான ஒரு விளைவு ஏற்படக்கூடிய சாத்தியமும், சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட விரதமும் அவரின் மரணத்தோடு முடிவுக்கு வரப்போகின்றது என்று எண்ணினாள் நபீசா.

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் இல்லையென்றால் நபீசா சதிகார அழிவுகளால் அழிந்திருப்பாள்; அவமானப்பட்டிருப்பாள். இப்போது நபீசா வாழும் சந்தோசமான வாழ்வு, பட்டம், பதவி, சபீனைத் திருமணம் முடித்த பெருமைகளெல்லாம் பொலிஸ் அத்தியட்சகர் அவர்களால்தான் ஏற்பட்டது என்று சபீனுக்கு தெளிவாகவும் உண்மையாகவும் தெரியும்.

ஆனால், இதில் மாபெரும் இரகசியப் புதையல் ஒன்று நபீசாவுக்குள் ஒழிந்து கிடக்கிறது. அது பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களுக்கும் நபீசாவுக்கும்தான் தெரியும். இப்போது அதை நபீசா தன் கணவன் சபீனிடம் கூறும் காலம் வந்து விட்டது என்று கவலையிலும் ஒரு கனிவு; கனிவிலும் ஒரு கவலை என்பது போலிருந்தது நபீசாவுக்கு.

எனவே, பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் பற்றி தனது கணவன் சபீனிடம், தங்களுக்குள் இருக்கும் இரகசியமான சமபவங்களைக் கூறியிருந்தால், நபீசாவுக்கு ஆறுதலும் கனிவும் இருந்திருக்கும். இப்போது, தான் மட்டும் கணவன் சபீனிடம் அந்த இரகசியத்தை சொன்னால், பாதி அளவுதான் அதில் விந்தையும் விவேகமும் இருக்கும் என்று ஏமாந்து இறுமாந்தவளைப்போல் நபீசா சபலப்பட்டுக் கொண்டாள்.

'ஏன்? பொலீஸ் அத்தியட்சகர் அவர்கள் தனது கணவன் சபீனிடம் அந்த உண்மையை மறைத்தார் என்று நபீசா தனக்குள் கேள்வி எழுப்பினாள். அந்தக் கேள்விக்கு அவளே பதிலும் வைத்திருந்தாள். தனக்கும் பொலீஸ் அத்தியட்சகர் அவர்களுக்கும் இடையில் பேசிக்கொள்ளப்பட்ட சத்தியவாக்கின்படி நபீசா பொலீஸ் அத்தியட்சகர் அவர்களிடம், நீங்கள் இந்த உண்மையை உங்களின் உயிர் உள்ளவரையும் யாரிடமும் கூறக்கூடாது. நானும் என் உயிர் உள்ளவரையும் யாரிடமும் சொல்லமாட்டேன்' என்று சத்திய உறுதி பெற்றுக் கொண்டாள் நபீசா.

இந்த சத்திய உடன்பாட்டின் காரணமாகத்தான் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் கணவன் சபீனிடம் தங்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து வைத்திருக்கும் அந்த ஆபத்தான அபயமான இரகசியத்தை சொல்லாமல் காத்து வைத்துக் கொண்டிருந்தார் என்று நபீசா முடிவெடுத்தாள்.

நானும் யாரிடமும் என்னுயிர் இருக்கும் வரையும் இந்த இரகசியத்தைக் கூறமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்த நபீசா தனது கணவனிடம் இந்த இரகசியத்தை சொல்வது, சத்தியத்துக்கு தான் தவறு இழைத்த குற்றவாளியாகுவோமோ? என்றெல்லாம் அங்கலாய்த்தாள்.

இவற்றுக்கான கேள்விகளுக்கும் பதில்களுக்கும் கணவன் சபீனோடு சேர்ந்து தர்ம தார்மீக, சத்திய அசத்திய விடயங்களைப் பேசி முடிவெடுப்போம் என்ற முடிவில் பொலீஸ் அத்தியட்சகரின் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காக, சபீனும் நபீசாவும் புறப்படச் சித்தமானார்கள்.

அப்போது சபீனுக்கு ஒரு நினைவு வந்தது. சபீன் கல்யாணம் முடித்து ஒரு வாரத்துக்குப்பிறகு, சபீனிடம் பொலீஸ் அத்தியட்சகர் கடிதம் ஒன்றைக் கொடுத்து, "சபீன் இந்தக் கடிதத்தில் முக்கிய விடயம் எழுதப்பட்டிருக்கிறது. இதை நீ மிகவும் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். சந்தர்ப்பம வரும்போது நான் உனக்கு உத்தரவு தருவேன். அப்போது, கடிதத்தை விரித்துப் பார்த்து அதில் உள்ளவற்றை அறிந்து கொள்" என்று கடிதத்தை உறையினுள் வைத்து ஒட்டிக் கொடுத்திருந்தார்.

இதுபோன்ற கடிதங்கள், இரகசிய தொலைபேசி இலக்கங்கள், இடங்கள், நிறம், உயரம் கொட்டான், ஆள் அடையாளங்கள் போன்றவை இரகசியமான முறைகளில் பொலீஸ் உளவுப்பிரிவில் காணக்கூடிய விடயங்கள்தான். அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பல துப்புகளை அறிவதற்கு உத்தரவுகள் வழங்கப்படும்போது தக்க சமயத்தில் அத்தாட்சிப்படுத்துவதற்காக மேற்கூறப்பட்டவைகள் இரகசியமாக பாதுகாக்கப்படும்.

அப்படிப்பட்ட ஒரு இரகசியத் தகவலான கடிதத்தை தன்னிடம் தந்துவிட்டு, எந்தவொரு உத்தரவும் தராமல் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் திடீரென மாரடைப்பால் மரணித்தது சபீனுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

பாதுகாப்பாக அலுமாரியினுள் இருந்த கடிதத்தை கையிலெடுத்து வைத்துக்கொண்டு சற்று பொறுமையுடன் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான் சபீன்.

சபீனுடைய யோசனையையும், கடிதத்தோடு சபீன் நிற்பதையும் கண்ட நபீசா கேட்டாள்: "என்ன? நீங்க கடுமையாக யோசிக்கிறீங்க? ஏதும் பிரச்சினையா? கடிதம் யாருக்கு? என்று.

பதில் கூற முடியாமலும் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன காரணத்துக்காக எழுதப்பட்டிருக்கிறது? என்றெல்லாம் அறிய முடியாமல் சபீன் கட்டுப்பாட்டுக்கு கட்டுப்பட்டான். கடமையால் கை விலங்கிடப்பட்டான். கண்ணியத்தால் கலங்கி நின்றான்.

சபீனுடைய கலக்கமெல்லாம் இதுதான்: 'நான் உத்தரவு தருவேன். அப்போது தடிதத்தை பிரித்துப் பார்த்து அதில் உள்ளவற்றை அறிந்துகொள்' என்பதுதான் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களின் ஆணை.

ஆணை பிறப்பிக்காமல் நாம் எப்படி கடிதத்தைப் பிரித்துப் பார்ப்பது? ஆணை பிறப்பிக்க பொலீஸ் அத்தியட்சகர் அவர்கள் உயிருடன் இல்லையே. என்ன செய்வது? இதுதான் சபீனுடைய குழப்பமும் யோசனையுமாகக் காணப்பட்டது.

யோசனைக்கு முடிவாக ஆலோசனை அவசியம். ஆலோசனைக்கு ஆள் இல்லயென்றால் கைத் தடியுடன் ஆலோசனை செய் என்பது முதுமொழி. எனவே, சபீன் தன்னிடமுள்ள இரகசியக் கடிதம் பற்றியும், அக்கடிதத்தை எந்த நிலையில் தான் உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஆணையையும் மனைவி நபீசாவிடம் கூறினான்.

கணவன் சபீன் கூறியதைக்கேட்ட நபீசாவுக்கு மட்டில்லா மகிழ்ச்சி. மனதில் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அந்த இரகசியக் கடிதம் பற்றிய செய்தி தன்னைப் பற்றித்தான் பொலீஸ் அத்தியட்சகர் அவர்கள் கணவன் சபீனிடம் எழுதிக் கொடுத்திருப்பார் என்று நபீசா திடமாக நம்பினாள்.

தன்னைப் பற்றி பொலீஸ் அத்தியட்சகர் கடிதத்தின் மூலம் கணவன் சபீனுக்கு இரகசியம் என்று எழுதிக்கொடுத்த காரணம் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று ஐயமின்றி நபீசா நனைத்தது இதுதான்.

'பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ணவுக்கு ஒருவேளை திடீரென மரணம் நேர்ந்தால் தன்னிடமுள்ள இரகசியத் தகவலை சபீனிடம் கூறமுடியாமல் போய் விடுமே என்று அவர் கருதியிருக்கலாம். எனவே, தான் மரணித்தாலும் நபீசாவைப் பற்றிய இரகசியக் குறிப்பை கடிதத்தின் மூலம் எழுதி சபீனிடம் கொடுப்போம் என்று கருதி கடிதத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார். எனவே, பொலீஸ் அத்தியட்சகர் நினைத்தது போலவே காலமாகி விட்டார். ஆனால் சபீன் தன்னிடமுள்ள கடிதத்தை வாய்மையின் மீது கொண்ட சத்தியத்துக்கு கட்டுப்பட்ட நிலைமைக்கு உள்ளாகி விட்டார்' என்று நபீசா திட்டவட்டமாக நம்பினாள்.

எனவே கணவன் சபீனிடம் இருக்கும் கடிதத்தை எப்படிப் பிரித்துப் பார்ப்பது என்ற ஆவல் ஒருபுறம், மறுபுறம் சத்தியத்தின் ஆணையையும் மீறக்கூடாது. சபீனுடைய தொழில்துறை சார்ந்த கண்ணியமாகவும் இருக்கிறது. அதை மனைவி நபீசாவும் அனுமதிக்க வேண்டும் என்பதும் சபீனுடைய நோக்கமாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் சபீனுடைய கையில் இருக்கும் கடிதத்தை, 'தாங்க உடைத்துப் பார்ப்போம்' என்று கேட்க நினைத்த நபீசா 'இல்லை' அப்படிக் கேட்பது சரி இல்லை என்ற யோசனையுடன், மகிழ்ச்சிக்கும் மனக்கிலேசத்துக்குமிடையில் நபீசா சபலப்பட்டுக் கொணிடிருந்தாள்.

கணவன் சபீனுக்கு கடிதத்தைப் பற்றிய கேள்விக்குறி ஒரு புறமும், மனைவி நபீசாவுக்கு கடிதத்தைப் பிரித்து தன்னைப் பற்றிய தகவலை கணவன் சபீன் அறிய வேண்டுமென்ற ஆவல் ஒரு புறமுமாக ஆர்ப்பரித்ததுக் கொண்டிருந்தது.

காலதேச வர்த்தமான சந்தர்ப்பங்கள் உலகில் பல ஆச்சரியங்களையும், அதிர்ஸ்டங்களையும், மாறுதல்களையும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கும் என்பது; அறிவியல் விஞ்ஞான மெய்ஞானவாதிகளின் திடமான வாதமாகும்.

சந்தர்ப்பத்தின் சிறு செயற்பாட்டின் மூலம் பலகீனமானவன் பராக்கிரமசாலியாகி இருக்கிறான். ஏழை எசமானாகி இருக்கிறான். இன்னும் எத்தனையோபேர் சாதனையாளர்களாக ஆகியிருக்கிறார்கள். இது நபீசாவின் வாழ்விலும் நடந்த சம்பவம் சாதனை.

சபீன் தனது கையில் இருக்கும் கடிதத்தை தான் பிரித்துப் பார்ப்பதா? அல்லது மனைவி நபீசாவிடம் கொடுத்து பிரித்துப் பார்க்கச் சொல்வதா? அல்லது கொஞ்சக்காலம் பொறுமையாக காத்து வைத்திருந்து என்ன செய்வது என்று முடிவெடுப்பதா? என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது சபீனுடைய முகத்தில் ஈ ஒன்று வந்து குந்தி எழும்பி முகத்தை சுற்றி வட்டமிட்டுப்பறந்து கொண்டிருந்தது.

ஈயினை சபீன் தனது கையிலிருக்கம் கடிதத்தால் வீசி விரட்டினான். ஈ விரண்டுபோய் மனைவி நபீசாவின் முகத்தில் குந்துவதற்கு வட்டமிட்டுக்கொண்டிருந்தது. ஈயை விரட்டுவதற்காக சபீன் தனது கையில் இருந்த கடிதத்தால் வேகமாக வீசினான்.

சபீன் வேகமாக வீசிய கடிதம் கைப்பிடியிலிருந்து தவறிக்கொண்டுபோய் மேசையில் வீசிக்கொண்டிருந்த மின் விசிறிக்குள் புகுந்து கோணல் மாணலாக கசக்கப்பட்டு கடிதத்தின் உறை கிழிந்து கொண்டிருந்தது. உடனே நபீசா மின் விசிறியை அணைத்துவிட்டாள். மின் விசிறி நின்று விட்டது.

கடிதத்தின் உறை கிழிந்திருந்தாலும், கடிதம் கிழியவில்லை. கசங்கிப் போயிருந்தது. கசங்கிப்போயிருந்த கடிதத்தை சபீன் மின் விசிறிக்குள்ளிருந்து மெதுவாக எடுத்தான்.

நொடிப்பொழுதுக்குள் நடந்த இந்த ஆச்சரியத்தைக் கண்ட நபீசா பூரித்து, புன்னகைத்து நின்றாள்.

மனிதன் நேர்மையாகவும் சத்தியத்தின் நெறியுடனும் மனிதத்துவத்தின் மெய்மையுடனும் வாழும்போது, மனிதனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகத்தின் அருள் கரம் கொடுக்கும் என்பதை நபீசா அவ்விடத்தில் கண்டாள், கற்றாள்.

தனது கணவனின் கடமைக் கட்டுப்பாட்டு உணர்வுக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருந்ததோ, அந்த அளவுக்கு இறைவன் தனது கரத்தை நீட்டி வரத்தைக்கொடுத்து, சிக்கலுக்கு தீர்வு கொடுப்பதற்காக கடிதம் பிரிக்கப்பட்ட விதத்தைக்கண்ட கணவனும், மனைவியும் மெய்மறந்து தெய்வீக உணர்வின் மேம்பாட்டை எப்படி உயர்த்திப்பேசுவது என்று தெரியாமல் வியந்து போனார்கள்.

சபீன் மின் விசிறிக்குள்ளிருந்து கசங்கிப்போயிருந்த கடிதத்தை மெதுவாக எடுத்து அதிலிருந்த புழுதிகளை துடைத்துக்கொண்டு, கடிதத்தை மேசையில் வைத்து நேராக நிமிர்த்தி எடுத்தான்.

கடித வாசகம் மிக அழகாகத் தெரிந்தது. கடிதத்தை ஒருகணம் பார்த்த சபீன் மனைவி நபீசாவை ஓரக்கண்ணால் பார்த்தான். நபீசா எங்கேயோ பார்ப்பதுபோல் ஞாடை காட்டி, கடிதத்தில் தான் கருத்து எடுக்கவில்லை என்பதுபோல் காட்டிக்கொண்டு நின்றாள். அவள் அப்படித்தான் அவ்விடத்தில் தன்னைக் காட்டிக்கொள்ளவும் வேண்டும்.

ஏனென்றால், 'ஒரு விடயம் தனக்குத்தெரிந்த போதும் தான் மதிக்கின்றவர் அதைப்பற்றிக் கூறும்போது, மௌனமாகவும் தெரியாததுபோலவும் காட்டிக்கொள்வதுதான் பண்புடையாரின் பணிவாகும்' என்பது நபீசாவின் இயற்கைத்தனமாகும்.

சபீன் கடித வாசகத்தை மேலோட்டமாகப் பார்த்ததும், அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தது. அகம் பொறுக்கமுடியாத பூரிப்பை, முகம் காட்டியது. தனது அகமியக் காதலியான மனைவி நபிசாவைப் பற்றி, பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்கள் எழுதியிருக்கும் வாசகத்தை மனைவி நபீசாவிடம் வாசிக்கக் கொடுப்பதா? அல்லது தானே வாசித்துக்காட்டுவதா? என்ற வாதாட்டப் பிரேமை சில நொடிகள் சபீனை அலைக்கழிக்கச் செய்தது. என்றாலும், அவா அவசரத்தில் அவனே அந்த ஆச்சரிய வாசகங்களை வாசிக்கத் தொடங்கினான்.

"அன்பின் சபீன் இக்கடிதத்தை நான் உன்னிடம் எழுதித்தந்த காரம் என்ன தெரியுமா? ஒருவேளை எனக்கு மரணம் சம்பவித்து விட்டால் எனக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இரகசியம் என்னோடு மறைந்து விடும். அந்த இரகசியத்தை உன்னிடம் நான் கூறவேண்டிய நேரத்தையும், காலத்தையும் காத்திருந்தேன். காலம் உனது கல்யாணம் வரையும் காத்திருந்தது. நீ இப்போது கல்யாணம் கட்டிவிட்டாய். கல்யாணம் கட்டிய உனது மனைவிக்கும், எனக்கும் உள்ள இரகசியத்தை இந்தக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கிறேன்; தெரிந்து கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கடிதத்தை நான் தரும்போது உன்னிடம் கூறினேன்; எனது உத்தரவு கிடைக்கும்போது, கடிதத்தைப் பிரித்து அதில் உள்ளவற்றை அறிந்துகொள் என்று. ஆனால் நான் இறந்து விட்டால், எனது உத்தரவு உனக்கு எப்படிக் கிடைக்கும் என்று நீ யோசித்துக் கவலைப்படுவாய் என்றும் எனக்குத் தெரியும். ஆனால், ஒன்று மட்டும் எனக்குத் தெளிவாகத் தெரியும். அது என்னவென்றால், நான் மரணித்து விட்டால், நீ அந்தக் கடிதத்தை வைத்துக்கொணடு யோசிக்கும்போது, உனது மனைவி நபீசாவின் அபிப்பிராயத்தைக் கேட்பாய். உடனே உனது மனைவி நபீசா அந்தக் கடிதத்தை பிரித்துப் பாருங்கள் என்று கூறுவாள்.

...உனது மனைவி அப்படிக் கூறுவதற்கான காரணம் என்ன தெரியுமா? அவளுக்கு சத்தியம் எது, அசத்தியம் எது, உண்மை எது, பொய்மை எது, அறிவெது, அறிவீனம் எது, செய்யக்கூடியது எது, செய்யக்கூடாதது எது என்றெல்லாம் அறியும் ஆற்றலுள்ள புலமை புதல்வி அவள். அதனால்தான், நீ நபீசாவை திருமணம் முடித்த உடனேயே கடிதத்தை எழுதி உன்னிடம் தந்தேன்.

...சபீன் உனது மனைவி நபீசாவின் சாதனைச் செய்கைகளை சொல்லப்போனால் வார்த்தைகளுக்குப் பஞ்சம் ஏற்படும். எழுதப்போனால் முடிவே இல்லாத நூலாக நீண்டு கொண்டே இருக்கும். அவளைப் பற்றிய ஒரு சிறு ஆக்கத்தைக் கூறப்போனால், அவள் நடமாடும் உதவிக்கரம். ஒரு சிறு ஊசியை பொறுக்கி எடுத்தாளென்றால், அந்த ஊசியை எடுத்து வெள்ளைக் காகிதத்தில் குத்தி வைத்து இவ்விடத்தில் இந்த ஊசி கிடந்தது. உரியவர்கள் எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது தேவைப்பட்டவர்கள் எடுத்துப்பயன் படுத்துங்கள். கீழே கிடந்தால் பாதங்களுக்கு பாதகமாகி விடும் என்று எழுதி, எழுதிய காகிதத்தை அவ்விடத்தில் ஒட்டிவிட்டுச் செல்வாள்.

இப்படிப்பட்ட ஆக்கவியல் ஊக்குவிப்பு உணர்வு மிகுந்தவள் அவள். அதனால்தான் கடிதத்தை உன்னிடம் எழுதித் தந்தேன். நபீசாவைப் பற்றிய இரகசியத்தை நீ அறிவதற்காக.

..... சபீன் நானும் நீ உட்பட பல பொலீஸ்காரர்களும், உனது காக்கா வழக்கறிஞரும் அவருடைய மனைவி, மக்கள் இன்னும் பல பொதுமக்களும் உங்களின் காக்காவின் வீட்டடியில் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டால் அழிந்து மடிந்து போயிருப்போம் உனது மனைவி நபிசா இல்லையென்றால். அதை அவளிடம் நீ ஆறுதலாக கேட்டுத் தெரிந்துகொள்.

இன்று நான் பொலீஸ் துறையில் பட்டம், பதவி உயர்வு பெற்றுக்கொண்டு, பொலீஸ் துறையில் எனக்கிருக்கும் மதிப்புக்கும் பெருமைக்கும் காரணமாக வழிகாட்டியவள் உனது மனைவி நபீசாதான் என்று நான் உன்னிடம் சொன்னால் நீ அதை நம்புவாயா? நிச்சயமாக நம்பமாட்டாய். அவற்றையெல்லாம் நீ அறிய வேண்டுமாக இருந்தால், உன் மனைவி நபீசாவிடம் தெரிந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்? நான் அந்த இரகசியத்தையெல்லாம் உன்னிடம் சொல்லவில்லையென்றால், நபீசா என்னிடம் சில சத்திய வாக்குகளை வாங்கிக்கொண்டாள். அந்த சத்தியத்தின் விரதத்திலிருந்து நான் விலகிவிட ஒருக்கணம்கூட எண்ணியதில்லை, அவற்றை எனது இறுதி மூச்சி உள்ளவரையில் காப்பாற்றுவேன்.

அவள் என்னிடம் வாங்கிக்கொண்ட சத்திய வாக்குகள் எனக்குத்தான் அதிகம் நன்மையாக இருந்தது. ஆனாலும் நான் அந்த நன்மைகளில் சந்தேகம் கொண்டேன். எப்போதும் நாம் சில நன்மைகளைப் பெற்றுக்கொண்டு, அதிகம் தீமைகளுக்கு உடந்தையானவனாக இருக்கவும் கூடாது. அத்துடன் நாம் பிறருக்கு நன்மையை செய்துவிட்டு, பிறரிடம் நாமும் ஏமாறக்கூடாதல்லவா? இதுபோன்ற தர்மசங்கடமான சூழ்நிலைக்கு நான் உள்ளானேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நான் உன்னை நபீசாவை உளவு பார்க்கும் உத்தியோகத்துக்கு உட்படுத்தினேன்.

எப்போதும் தீவிரவாதிகள் எங்கே நல்லவன் இருக்கிறான்? எங்கே ஏமாறக்கூடிய பரோபகாரி இருக்கிறான்? யாரைக்கொண்டு, எந்த விடயத்தை வெற்றி காணலாம் என்று தீவிரவாதிகள் தீவிரமாக சிந்தித்து செயல்பட்டு வெற்றி காண்பவர்கள். அதனால்தான், நபீசா ஒருவேளை தீவிரவாதிகளின் கைப்பாவையாக அவளை அறியாமல் பந்தோபஸ்தாக ஆட்டுவிக்கப்படுகின்றாளா என்று, நான் உனது உளவு நடவடிக்கையால் ஆராய்ந்து பார்த்தேன். அவள் யாராலும் வெற்றி கொள்ளவோ, யாருக்கும் ஆட்படும் அடிமையாக, ஆடும் அறிவிலியாகவோ அல்லாமல்; ஆராய்ந்து ஆராய்ந்து அறிந்து நடக்கும் அறிவிழி அவள் என்பதை அறிந்து கொண்டேன்; எண்ணி வியந்தேன். அதனால் அவள் எனது வாழ்வை ஏற்றமுறச்செய்த ஏணிப்படிகள் என்று மகிழ்ந்தேன்.

சபீன்! உன்னை நான் ஏன் நபீசாவை உளவு பார்க்க பணித்தேனென்றால், கால சந்தர்ப்பமும் எனக்கு இசைவாக இருந்தது. அத்துடன் நபீசாவினால் உயிர் காக்கப்பட்ட நான் நபீசாவுக்கு ஏதாவது உதவிகள் செய்வோம் என்று நாடியபோது, அவள் எனது உதவிகள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் வலிந்து அவளுக்கு ஏதாவது உதவி செய்யவும் முடியாமல், அவளுடைய சத்திய உடன்படிக்கைக்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டியிருந்தேன்.

எனவே அவளைக் காணும் ஒவ்வொரு கணமும் ஒரு மகளை தந்தை எப்படிக் காண்பானோ, அப்படி நான் அவளைக் காண்பேன். அப்படி அவளைக்காணும் எனக்கு அவளுக்கான துணைவனான கணவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று கற்பனை காண்பேன். அந்தக் கற்பனையின் வெளிப்பாடுதான் நீ என்பதை அறிந்து, உன்னை உளவு பாாக்கச் செய்தேன். அத்துடன் நபீசாவுக்கு உவப்பான உறுதுணையான துணைவனாகவும் நான் உன்னை கற்பனை செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது எண்ணமும் உனது உள்ளமும் ஒன்றுபட்டது. அதனால்தான் என்னவோ நீயும் நபீசாவும் சதி பதியாக சங்கமித்துக் கொண்டீர்கள்.

ஒரு தந்தை மகளுக்கு செய்யும் கடமைபோல் நபீசாவுக்கு உன்னை கணவனாகவும் உனது தந்தையின் நண்பனான நான், ஒரு தூய நண்பனின் மகனுக்கு எப்படிப்பட்ட உத்தமியான பெண்ணைத்தேடி மனைவியாகவும் மணம்முடித்துக் கொடுப்பானோ அப்படிப்பட்ட அருங்குணவாதியாக நான் உங்களை நல்லறமாக்கி வைத்தேன்.

இத்துடன் கடிதத்தை முடிக்கிறேன். அத்துடன் உன் உள்ளக்கிளத்தியிடம் என்ன நடந்தது என்று கேட்டு உனது உளவுக்கான உண்மையை அறிந்து மனம் ஒன்றிய மணவாழ்வாக மகிழ்ந்து பதினாறு பெறுபேறுகளும் பெற்று பக்தி மனத்தவர்களாக வாழ்ந்து உயர காவல்துறையில் கடமையை கண்ணியமாக கடமையாற்றிய கருணாரட்ணாவாகிய எனது ஆசி என்றும் உங்களுக்கு.

சகல உயிர்களும் சுகமாக வாழ பிரார்த்திப்போமாக, சேவை செய்வோமாக.

வணக்கம்

அன்பின்

பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண

சபீன் தடிதத்தை வாசித்து விட்டு, மனைவி நபீசாவின் முகத்தைப் பார்த்தான் அந்தமுகம் வானத்து பூரண நிலவு போல், அறிவொளி வீசிக் கொண்டிருந்தது. நாயன்மார்களின் முகத்தில் தெரியும் சபலமற்ற சம்பூரண சாந்திபோல், நபீசாவின் முகம் நாயகிகளின் முகத்தில் வீசும் நல்லெழில்போல் நடம் புரிந்தது.

மனைவி நபீசாவின் முகத்தைப் பார்த்த சபீன் கடிதத்தை நபீசாவிடம் நீட்டினான். நபீசா மனத்தளவில் கடிதத்தை வாங்க வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் கணவன் நீட்டிய கடிதத்தை கரத்தால் வாங்க வேண்டும் என்ற பண்பால் வாங்கிக்கொண்டு, பொலீஸ் அத்தியட்சகர் தன்னைப் பற்றி எவ்வளவு மேன்மையாக கருதி கடிதத்தை எழுதியிருக்கிறார் என்று வியந்து கொண்டு, கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் கணவன் சபீனிடம் தன்னிடமுள்ள இரகசியத்தை சொல்லத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 21

நகம் அழுக்காக இருக்கும்; ஆனால் அகம் அழுக்காறு இல்லாமல் இருக்கும். நகம் அழகாக இருக்கும். ஆனால் அகம் அழுக்காறு கொண்டிருக்கும். இரண்டையும் விட நகமும் அகமும் அழுக்கும், அழுக்காறும் இல்லாமல் இருக்கும் மனிதனே உலகில் நற்செயல்களால் நல்லவனாக காணப்படுவான் என்னும் இயல்பான இதயத்தை கொண்ட நபீசா கணவன் சபீனிடம் தனக்கும், பொலீஸ் அத்தியட்சகர் கருணாரட்ண அவர்களுக்கும், நடந்த அந்த இரகசியத்தை பய பக்தியுடன் பகர்ந்தாள்.

"உங்களின் காக்காவின் வீட்டடியில் வெடிகுண்டு வைக்கப்பட்ட அன்று இரவு உங்களின் காக்காவின் வீட்டில் பெரும் விருந்து நடந்து, அங்கு அவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்து கொடுத்து விட்டு, கொஞ்சம் சாப்பிடுவோம் என்றுதான் போனேன் என்பது மட்டுந்தான் உங்களுக்கு தெரியும். ஆனால் எவ்வளவோ வேலை செய்து களைப்படைந்த நான் ஒரு பிச்சோறும் தின்னாமல் வந்த என்னை எனது மாமி மாலை களவெடுத்த குற்றச்சாட்டையும் கூறினால், எனது துன்பமும் வேதனையும் எப்படியிருக்கும். அத்துடன் உம்மா போட்டு அடிச்ச நோவு ஒருபுறம், சாப்பாடு இல்லாத தெவக்கம் மறுபுறம். இப்படியெல்லாம் வெந்து நித்திரை இல்லாமல் படுத்துக்கொண்டிருந்த நான், விடியச்சாமம் எனது இளைய தம்பியை கூட்டிக்கொண்டு வயல்காட்டுக்குள் போய் பொன்னாங்கண்ணி ஆய்ந்து கொண்டிருந்தேன். அப்போது வீதியால் பொலீஸ் வண்டி வந்து கொண்டிருந்ததைக் கண்ட தம்பி சொன்னான். லாத்தா, வாப்பாவையும் ஒன்னையும் புடிச்சிக்கிப்போக பொலீஸ்காராக்கள் வாறாங்க என்று பயந்து கொளறினான்.

தம்பியின் பயத்தையும் அழுகையையும் கண்ட எனக்கும் வேதனையும் அச்சமும் ஏற்பட்டது. அல்லாஹ்வைப் பயந்து பணிந்து பிரார்த்தித்துக்கொண்டு, அல்லாஹ் இந்தப்பாவம் பழிக்கெல்லாம் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நன்மையான பாதையைக் காட்டு என்று இறைவனை இறைஞ்சினேன். எனது இறைஞ்சுதலினால் இறைவன் எனக்கு நொடிப்பொழுதுக்குள் தனது அருளை சொரிந்தான். நான் அதனை பயன்படுத்திக்கொண்டேன்" என்று பேச்சை சற்று நிறுத்தினாள் நபீசா.

நபீசா பேச்சை நிறுத்தியதும், சபீனுடைய முகத்தில் வியப்பை விளங்கத் துடிக்கும் ஆவல் பூத்திருந்தது. நபீசா பேச்சைத் தொடர்ந்தாள்: "எனது தம்பியின் அழுகை எனது இதயத்தை உலுக்கியது. அத்துடன் நொடிக்குள் உலுக்கி வெடிக்கச்செய்து இந்தப் பகுதியில் நிற்கும் அனைவரும் செத்து மடியும் வெடிகுண்டின் வயர்களைக் கண்டேன். தீவிரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்காக, வெடிகுண்டின் வயர்களை புற்களுக்குள்ளால் மிகவும் கவனமாக மறைத்து வைத்துக்கொண்டு போயிருந்தார்கள்.

எனது கவலையெல்லாம் ஒருபுறமிருக்க, எனது கல்வியின் நுண்ணறிவு நொடிக்குள் என்னை செயற்படுத்தியது. நீண்டு தளைத்திருந்த பொன்னாங்கன்னியை அடியால் வெட்டுவதற்கு நிலத்தில் படும்படி அரிவாளை ஒட்டி அறுத்தேன். பொன்னாங்கன்னி அறுபடாமல் இருந்தது. என்ன காரணம் பொன்னாங்கன்னி அறுபடாமல் இருக்கிறது என்று யோசிக்கும்போதுதான் தம்பி கூறிக் கொண்டிருந்தான். "லாத்தோவ் பொலீஸ்காராக்கள் போறாங்க" என்று.

தம்பி கூறியதைக் கேட்டுவிட்டு குனிந்து பார்த்த எனக்கு நொடிக்குள் விளங்கிவிட்டது. இவ்விடத்தில் வயர்கள் ஏன் நீண்டு மறைந்து போகவேண்டும்? இது தீவிரவாதிகள் பொலீஸ்காரர்களுக்கு வைத்தீருக்கும் வெடிகுண்டின் வயராகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்த நான் உடனே அந்த வயரை அறுத்துவிட்டு அந்த வயரில் ஒரு முழத்தளவு துண்டையும் வெட்டி எடுத்துக்கொண்டு, என்னை யாரும் அடையாளம் காணாதவாறு ஓட்டமும் நடையுமாக வெடிகுண்டின் வயர் மறைத்து வைத்திருக்கும் அடையாளத்தை உற்றுக் கவனித்தவாறு ஓடிவந்தேன்.

வெடிகுண்டின் வயர் புற்களின் நிறத்தையொத்த பச்சை நிறம்போல் இருந்தது. மிகக்கூர்மையாக அவதானித்தால் மட்டுந்தான் வயர் தெரியும். நான் மிக அவதானத்தோடு வெடிகுண்டின் வயரை பார்த்துக்கொண்டு வேகமாக வந்தேன். சரியாக மாமியின் வீட்டையும், பொலீஸ் வண்டியையும் குறிவைத்து வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. நான் வெடிகுண்டின் வயரைக்கண்டது, வயரை வெட்டியெடுத்தது எதுவுமே தம்பிக்குத் தெரியாது.

வெடிகுண்டை அவதானித்துக்கொண்டு வீதிக்கு வந்த என்னை, உங்களின் காக்கா கண்டுவிட்டு பொலீஸ் பொறுப்பதிகாரியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டி "அதோ வாறவள்தான் இரவு மாலையை களவெடுத்தவள் என்று கூறினார்." உடனே பொலீஸ் பொறுப்பதிகாரி என்னை அன்பாக அழைத்து கேள்வி கேட்கத் தொடங்கினார்.

பொலீஸ் பொறுப்பதிகாரியின் கேள்விகளுக்கு பதில் கூறாமல் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதையும், வெடிகுண்டு வெடிக்காதவாறு வெடிகுண்டின் வயரை அறுத்து விட்டேன் என்றும், அறுத்த வயரின் துண்டை அவரின் கையில் கொடுத்துவிட்டு, பயமோ பதட்டமோ கொள்ளத் தேவையில்லை என்றும், இது சம்பந்தமாக என்னை எந்த விதத்திலும் தொடர்புபடுத்தாமல் வெடிகுண்டை நீங்களே தற்செயலாக கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தீர்கள் என்ற கெட்டித்தனத்தையும் பெருமையையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் இந்த பயங்கரமான ஆபத்திலிருந்து உங்களின் உயிர்களையெல்லாம் காப்பாற்றினேன் என்ற நன்றி உணர்வுக்காக, என்னை எந்த விசாரணைக்கும் உட்படுத்த நினைக்காதீர்கள். அப்படி நீங்கள் என்னை விசாரித்து வெடிகுண்டின் வயரை அறுத்தது நான்தான் என்று வெளிப்படுத்தினால் தீவிரவாதிகள் அறிந்து என்னையும் எங்களின் குடும்பத்தையும் ஒரு கருவும் இல்லாமல் கொன்றொழித்து விடுவார்கள். எனவே அகிம்சையின் கருணையாலும். உங்களின் அதிகாரத்தை அதிக அறமாகப் பாவித்து என்னைக் காப்பாற்றி எனக்கு நல்ல வாழ்வுப்பாதை காட்டுங்கள் என்றும், இந்தச் சம்பவத்தை நீங்களும் நானும் நமது உயிர் உள்ளவரையும் யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் சத்திய வாக்கைப் பெற்றுக்கொண்டு நான் உண்மையாகவே மாமியின் மாலையை களவெடுக்கவில்லை என்றும் கூறிவிட்டு அதோ அந்த கருங்கல்லுக்குப் பக்கத்தில்தான் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும் பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் கூறினேன்.

உடனே அவர் அவசரமும் அச்சமுமாக செயல்பட்டார். வெடிகுண்டை செயலிக்கச்செய்தவர் என்ற புகழைப்பெற்றார். அதன் காரணமாக கெட்டித்தனத்தையும், பெருமையையும் பட்டம் பதவிகளையும் பெற்றுக்கொண்டார். எனக்கும் பல நல்ல பாதைகளைக் காட்டினார்.

அந்த நேரம் நான் அந்த வெடிகுண்டின் வயரை அறுக்காமலிருந்தால் எங்களின் குடும்பமும் எனது வாழ்வும் எப்படிப் போயிருக்கும்" என்று நபீசா தனக்குள் இருந்த இரகசியத்தைக் கூறி முடித்தாள்.

நபீசா கூறிய ஆபத்தான அதிர்ச்சியான சம்பவத்தைக் கேட்டுக்கொண்டிருந்த சபீன் கூறினான்: "நபீசா நீங்க வெடிகுண்டின் வயரை அறுக்காமல் விட்டிருந்தால், நீங்களும் உங்களின் குடும்பமும் எப்படிப்போயிருக்கும் என்று கூறினீர்களே. அது அவ்வளவு பெரிய விடயமல்ல. ஒருவேளை நீங்கள் சந்தோசமாகவும் வாழ்ந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நீங்கள் வெடிகுண்டின் வயரை அறுக்கவில்லையென்றால் நான், எனது காக்காவின் குடும்பம், பொலீஸார் மற்றும் அவ்விடத்தில் நின்ற பொதுமக்கஎெல்லாம் செத்து மடிந்திருப்போமே. எவ்வளவோ பெரும் வீர சாதனையை செய்து விட்டு சிறிய முள் காலில் குத்தினால் எப்படியிருக்கும் என்று கூறுகிறாயே. உனது சாதனைகளையும், அந்தச் சாதனைகளை நீ சாதரணமகாகப் பார்ப்பதையும் எண்ணிப்பார்க்கும்போது, எப்படி உன்னைப் பாராட்டுவது என்று தெரியவில்லையே" என்று வியந்து கொண்டான் சபீன்.

கணவன் சபீனுடைய புகழ்ச்சி மொழியைக் கேட்ட நபீசா கூறினாள்: "ஏன்? இறந்துபோன நமது பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் என்னை புகழ்ந்து பேசியிருக்கிறாரே. அந்த புகழ்ச்சி மொழி எனக்கு போதாதா?" என்று மகிழ்ச்சியாக கூறினாள் நபீசா.

நபீசா இப்படிக் கூறியதும் தனது மனைவியின் போதும் என்ற புகழ்ச்சியின் திருப்தியை கண்டு கொண்ட சபீன் கூறினான். "நபீசா பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் இறந்து போனார் என்று சொன்னீர்கள்தானே? அவர் இறந்து போகவில்லை. அவர் மரணித்தார்; இல்லை, இல்லை. அவர் அமரத்துவம் அடைந்துவிட்டார். மனிதர்களாகிய நமக்கு சாவு ஏற்படுவது ஆறு விதங்களாகும்.

இறந்து போனார்கள் என்று கூறுவது எப்படிப்பட்டவர்களை தெரியுமா? நோய் படுக்கையில் பல காலங்கள் அழுந்திக்கிடந்து, இத்து இறந்து போனவர்கள்தான் இறந்தார்கள் என்று பொருள் படும்.

செத்து விட்டார்கள் என்றால், கொலை தற்கொலை விபத்து, இவற்றால் உயிர் துறப்பவர்கள் செத்து விட்டார்கள் என்று பொருள் படும்.

மரணித்து விட்டார்கள் என்றால் தூங்கிக் கொண்டிருப்பவர்கள் உயிர் துறப்பதும் எதிர்பாராமல் உயிர் துறப்பவர்களும் மாரடைப்பால் உயிர் துறப்பவர்களும் மரத்து விட்டார்கள் அதாவது மரணித்து விட்டார்கள் என்று பொருள்படும்.

காலமானார்கள் என்றால் நீண்ட காலம் நோய் நொடி இல்லாமல் எண்பது, தொண்ணூறு, நூறு வயதுக்கு மேற்பட்டு, வாழ்ந்து காலாவதி ஆனவர்கள் அதாவது காலம் ஆனார்கள் என்று பொருள் படும்.

இறையடி சேர்ந்தார்கள் என்பது நாட்டுக்காவும் சமயங்களுக்காகவும் போர்களில் தியாகமாக வீரப்போர் செய்து இறப்பவர்களை இறையடி சேர்ந்தார்கள் என்று பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவம் ஆனார்கள் என்றால் நபிமார்கள், நாயன்மார்கள் உயிர் துறப்பதை அமரத்துவம் அடைந்தார்கள் என்று பொருள்படும்.

நமது பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்கள் திடீரென மாரடைப்பால், உயிர் நீத்து மரணித்தாலும், அவர் அவருடைய பொலீஸ் சேவையான அதிகாரத்தை அதிக அறமாக மக்களுக்கு சேவை செய்தவர். அதனால் அவர் நாயன்மார்களுடைய அந்தஸ்தைப் பெற்றவராவார். எனவே, அவர் மரணித்துப்போனாலும், நாயன்மார்களைப்போல் அவர் அமரத்துவம் அடைந்து விட்டார்.

கணவன் சபீன் கூறிய மனிதர்களின் உயிர் நீக்கத்தின் ஆறு விதத்தையும், பொலீஸ் பொறுப்பதிகாரி கருணாரட்ண அவர்களின் உயிர் பிரிந்த விதத்தையும் எண்ணிப் பாாத்த நபீசா உயிர் வாழ்வதென்றால் உண்மையையும், உறுதியான செயல்களையும் முன்னெடுத்துச் செல்லும் விவேகிகளைப்போல், உயிர் வாழ்ந்து அமரத்துவம் அடைய வேண்டும் என்று கணவனின் கண்ணியத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள்.

நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதன் தன்னுடைய உற்சாகத்தை இழக்கும் போதுதான் அவன் தன்னிடமுள்ள திறமைகளை இழக்க ஆரம்பிக்கிறான்.திறமையை உற்சா கமாகக் கற்பனையின் மூலம் கண் விழிக்கச் செய்யும் போது, அவனுடைய கால்கள் அந்த இலக்கை நோக்கி நடக்கிறது. கரங்கள் அதனைக் கைப்பற்றிக் கொள்கிறது. எப்போதும் இந்த உலகம் மிகவும் விசித்திரமானது. ஒரு மனிதன் ஒரு செயற் திறனில் தன்னை அர்ப்பணிக்கும் போது, அவன் வெற்றி அடைகிறான்.அதற்கான சான்றிதழ்கள் கல்விக் கூடங்களால் வழங்கப் படுகின்றது. சான்றிதழ்கள் வழங்கப்பட்ட பிறகுதான் அவன் உண்மையான வெற்றியாளனா? படித்தவனா என்பது தீர்மானிக்கப் படும். செயற் திறன் இல்லாதவனாக இருந்தால், அவனுக்கு கல்விக் கூடங்கள் கொடுத்த பட்டம் பதவிகளோடு பின்னோக்கிய வாழ்வும் பிற் படுத்தப் பட்ட படிப்பறிவோடும், அவன் தன் காலத்தை முடித்தவனாகிறான்.

அதிகமானவர்கள் பட்டம்பதவிகளோடு, அதற்கப்பால், எந்தப் படிப்பையோ, கல்வி ஞானத்தையோ தேடுவதில்லை. இப்படிப் பட்டவர்கள் தங்களுக்கென்று ஒரு அரச தொழில் சார்ந்த தொழிலுக்கான வினா விடைகளுக்காக எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். எழுத வாசிக்கத் தெரிந்த அதிகம் பேர்களால்தான் சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. எழுத வாசிக்கத் தெரிந்தவர்களைக் காட்டிலும், எழுத வாசிக்கத் தெரியாதவர்களால் சமூகத்தில் பல நன்மைகள் அதிகம் ஏற்படுகின்றது.

கல்வி அறிவோடு கல்வி ஞானம் சேரும் போதுதான் மனிதன் மாசற்றவனாக, மத வேறு பாடு, குல வேறு பாடு, மொழி வேறு பாடு, ஏனைய வேறு பாடுகளில் இருந்து மாற்றம் பெற்று மனிதன் மகிழ்சி சார்ந்த சமத்துவ வாழ்வு வாழ தன்னை ஆட்படுத்துகிறான்.

இந்த நூலை நீங்கள் வாசிக்கத் தொடங்கும் போது, உற்சாகமாவும், கலை இலக்கிய ஆர்வமாகவும் வாசிக்க முற்படும் போது, நூலில் பல தத்துவ யதார்த்தங்களைக் காண்பீர்கள். அதன் பிறகு தத்துவ யதார்த்தங்களானது பல மடங்கு உங்களை சிந்திக்கத் தூண்டி நீங்கள் மேலும் பல புத்தகங்கள் படித்த பகுத்தறிவைப் பெறுவீர்கள் என்பது திண்ணம்.

உழைக்கும் வரையும்தான் ஒருவன் தொழிலாளி. உழைப்பை நிறுத்தி விட்டானென்றால் அவன் உழைப்பாளி அல்ல சோம்பேறி. அதே போன்றுதான் மனிதன் படிக்கும் வரையில்தான் அவன் படிப்பாளி. படிப்பை நிறுத்திக் கொண்டானென்றால், அவன் எழுத வாசிக்கத் தெரிந்தவன். எனவே வாசிப்போம். வாசம் பெறுவோம்!

நூலாசிரியர்: ஹிதாயத்துல்லாஹ் மீர்சா

ISBN : 978-955-52414-3-4

@hudha # 077 3596127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org